Registered as a News Paper

பக்கம் - 20

# ஈழநாதம்

விலை: 15.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 14 | வெள்ளி - 45 | 02 - 08 - சனவரி - 2004



## புத்தாண்டு நிகழ்வில்...

### விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகம் திறந்துவைப்பு



## ஆபத்து...



## அவலம்...

இணையத்தளத்தில் வருகிறது: www.Ezhanatham.com

ஈழநாதம

Eezhanatham

நாளிதழ் வாரஇதழ்



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 02. 01 . 2004
மின் அஞ்சல : Ehatham@sltnet.lk

# புத்தாண்டின் விதி

புதிய ஆண்டை நம்பிக்கையுடனும் புதிய எதிர்பார்ப்புக்களுடனும் கனவுகளுடனும் எல்லோரும் தொடங்குவது வழக்கம். அப்படித்தான் தொடங்கப்படவும் வேண்டும்.

பூமி தன்னைத்தானே சுற்றி மறுசுற்றை தொடங்கும் போது நாம் சந்திக்கும் சூரியோதயம் புத்தெழுச்சிக்குரியது.

புத்தாண்டென்பது சக்தியின் மையமாக இருக்கும் சூரியனை நாம் ஒருமுறை சுற்றி வந்திருக்கிறோம். இந்தப் பயணத்தின் ஒருவருட வாழ்வனுபவத்திலிருந்து கசப்பான நிகழ்வுகளையும், பட்ட துயரங்களையும், வலிகளையும் களைந்துகிடைத்த அனுபவத்திலிருந்துபெற்ற மகிழ்ச்சிகளை மேலும் எதிர்பார்ப்புக்களாக வளர்த்துக்கொண்டு கனவுகளோடு சூரியனின் மறுசுற்றுக்கு மனிதர்கள் நுழைகிறார்கள். மனதில் மகிழ்வும், செழிப்பும், கனவுகளும் பொங்கி வழிவதாக அது இருக்கிறது.

ஈழத்தமிழனின் தலைவிதி அவன் தனியொருவனேயாகினும் தனி மனித முயற்சிகளுக்கு அப்பாற்பட்டு அவனது வாழ்வின் தலைவிதி அரசியலோடு மற்றவர்களைவிடவும் மிக அதிகமாக பிணைக்கப்பட்டிருக்கிறது.

ஈழத்தமிழரின் தலைவிதி எதுவோ அதுவே ஒரு தமிழனின் தனி மனித வாழ்வின் தலைவிதியையும் அதிகமாக நிச்சயிக்கிறது; ஆதலால் நிச்சயமற்றும் இருக்கும் துர்ப்பாக்கியசாலியாகவும் அவன் இருக்கிறான்.

சென்ற ஆண்டின் தமிழனின் தலைவிதி அவனது இரத்தத்தைக் கேட்காத போதும், உயிரைக்கேட்காதபோதும் இத்தனை ஆண்டுகளாக அவன்கொடுத்த இரத்தத்திற்கும், உயிரிற்கும், வலிகளிற்கும்கிடைக்குமென அவன் எதிர்பூர்த்த, சென்ற ஆண்டு அதுகிடைக்காமலேயே ஏமாற்றிப் போனது.

இரத்தத்தையும், உயிரையும் கேட்காத ஆண்டு என்பதால் தமிழனுக்கு அது மகத்துவமான ஆண்டாக, மகிழ்ச்சிக்குரிய ஆண்டாக அது இருந்ததென சில அரசியல் வாதிகளும், சில ஊடகங்களும் தமது கண்ணோட்டத்தில் புலம்பிக்கொள்கின்றன.

இரத்தத்தையும், உயிரையும் இழக்க நேராத, வலிகளைச்சுமக்க நேராத ஆண்டாக அமைந்ததால் அது மகத்துவத்திற்குரிய ஆண்டாகிவிடாது. அரை நூற்றாண்டுகால உரிமைப்போரின் பயணத்தில் அவன் இழக்கநேர்ந்தவற்றிற்குக் கிடைக்காத வாழ்விற்கு, எதிர்பார்த்த வாழ்விற்காக அவன் செய்த தியாகத்திற்கு கிடைக்கும் என்று சர்வதேச தரப்பும், சிங்கள தரப்பும் எதிர்பார்ப்பை உருவாக்கிய ஆண்டில் அவனுக்கு ஏமாற்றத்தையே விதைத்து விட்டார்கள்.

சுமந்த வலிகளைவிடவும் சுமக்கக்கூடாதவற்றிற்காக செய்த தியாகங்கள் அர்த்தமிழந்து ஏமாற நேர்ந்தால் அதுதான் ஒருவனின் இதய ஆழத்தின் மகாவலியாக இருக்கும்.

இந்த ஆண்டு தமிழனிற்கு ஏமாற்றத்தைத் தரவேண்டா! சென்ற ஆண்டைப்போல் வெளிறிப்போன ஆண்டாக இருக்கவேண்டா! நிச்சயமற்ற எதன்மீதும் அவனது காலம் வாழ்வை இழுத்துக்கொண்டு கழியவேண்டா! அவனது தியாகங்கள் வாழ்வு தராது கழிவதாக எண்ணும் நிலை உருவாகவேண்டா!

இந்தச் சூரியச்சுற்றில் தமிழன் தன் வாழ்வைப்பெற தடையோடு நிற்பவர்கள் வழிவிடவேண்டும்! இல்லாது போகின் வழியமைத்துப் பயணம் தொடர தமிழன் திடம்பெறவேண்டும்! அவன் மனம் நிறைய வேண்டும்! வாழ்வு வளம் தரவேண்டும்! ஈழநாதத்தின் வாழ்த்துக்களுடன் சுபம்.

## தூரனின் பார்வையில்

# தமிழ் மக்களின் சக்தியை அழிக்கும் தீய சக்திகளின் ஆக்கிரமிப்புகள்....

மகத்தான மக்கள் சக்தியை மதி மயங்க வைக்கும் நச்சு கலாசார சக்திகளின் வருகையானது யாழ்.குடாவில் அதிகரித்து வருகிறது என்ற செய்தியானது இளைய தமிழ் சமூகம் எதிர்கொண்டுவரும் பேராபத்து குறித்த எச்சரிக்கை சமிக்ஞை ஆகியுள்ளது.

யாழ். குடாநாடு இராணுவ ஆக்கிரமிப்புக்குள் விழுந்த நாளில் இந்த நச்சு வயலுக்கான நாற்று மேடை நன்கு திட்டமிட்டமுறையில் மேற்கொள்ளப்படத்தொடங்கியது எனலாம்.

தனது எதிரியின் பிரதேசத்தினுள் இராணுவ நடவடிக்கை மூலமோ வேறுவகையான செயற்பாடுகளின்நுட்பமான மூலஉபாயங்களைப பயன்படுத்தியோ ஊடுருவும் ஒருஆக்கிரமிப்பு இராணுவமானது அங்கு நிலைகொண்டு வாழ்ந்து வரும் மக்களின்-அதாவது எதிரியின் மூலபலமான மக்களின் மனங்களை மாற்றும் அல்லது ஊடுருவி சிதைக்கும் அறிவையும்மனதையும் வென்றெடுக்கும் (Winning herts and minds) நடவடிக்கை என்ற பெயரிலான செயற்பாடு ஒன்றினை மேற்கொள்வது என்பது முக்கியவிடயமாகும்.

இது ஒரு விதமான உளவியல்நடவடிக்கையாகும். உளவியல் யுத்தம் என்று கூறப்படும் இந்த இராணுவ நடவடிக்கையின் தன்மை, எதிரியின் ஆதரவு மக்களின் உணர்ச்சிநிலை , மனோபலம், செயற்திறன், பலவீனம், களச்சூழல், காலாசார மற்றும் பண்பாட்டுத் தன்மை ஆகிய பலவற்றையும் கருத்தில் கொண்டே உருவாக்கப்படும் ஒன்றாகும்.

ஒரு தேசத்தில் விடுதலைக்காக போராடும் ஒரு தனியான தேசிய இனத்தை, அதன் இலக்கிலிருந்து திசைதிருப்பவும், அவர்களின் போராடும் மனோபலத்தை சிதைக்கவும், போராட்டத்தை முன்னெடுக்கும் அமைப்புக்கும் அதன் தலைமைக்கும் எதிராக கருத்தியல் நிலைப்பாடுகளை மாற்றவும் ஆக்கிரமிப்பு இராணுவம் எத்தகைய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதற்கு யாழ். குடா நாட்டு நிலைமைகள் நல்ல எடுத்துக் காட்டாகும்.

ஒழுக்கக்கட்டுப்பாட்டை பிரதானமாக வலியுறுத்தும் இலட்சிய வேட்கைகொண்ட விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் யாழ். குடா நாடு இருந்தபோது மக்கள் எப்படி அச்சமும், அடிமைச் சிறுமதியுமின்றி யுத்ததின் அகோரமான அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் வாழ்ந்தார்கள் என்பது சொல்லித் தெரியவேண்டிய ஒன்றல்ல.

1995 இன் இறுதியில் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை தொடரையடுத்து யுத்த தந்திரோபாய ரீதியில் யாழ். குடாவைவிட்டு வன்னிப்பெருநிலப்பரப்புக்கு விடுதலைப்புலிகள் நகர்ந்ததும், அப்பகுதியை ஆக்கிரமித்து நிலைகொண்டதும் மேற்குறிப்பிட்ட உளவியல் நடவடிக்கைகளை இதற்கென நன்கு பயிற்சியளிக்கப்பட்ட இராணுவ அதிகாரிகளின் தலைமையில் நன்கு திட்டமிட்ட முறையில் ஆரம்பித்த சிங்கள அரசின் பல்வேறு இலக்குகளில் கலாசார சீரழிவு நடவடிக்கை முக்கியமானதாகும்.

ஒரு இனத்தின் கலாசாரத்தை - பண்பாட்டியில்புகளை சிதைத்தால் போதும். அந்த இனம் தனது தனித்துவத்தை இழந்து அடையாளமற்ற ஒன்றாகிவிடும் என்ற ஆக்கிரமிப்பு - மற்றும் மேலாதிக்க சக்திகளின் உளவியல் நடவடிக்கை. சித்தாந்தங்களின் அடிப்படையிலேயே சிங்கள இராணுவம் யாழ். குடாவில் தன் செயற்பாடுகளை திட்டமிட்டது. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் மக்களை ஒழுக்கரீதியில், கலாசாரரீதியில் வலுவாக எதற்கெலலாம தடைவிதிக்கப்பட்டிருந்ததோ அவற்றையெல்லாம் வரம்பின்றி உள்வரவிட்டதன் மூலம் தமிழ் மக்களை மந்த புத்தியுள்ளவர்களாக்கும் முதற் கட்டத்தை ஆரம்பித்தது சிங்களப்படை.

மதுவகைகள், போதைப் பொருட்கள், ஆபாசப்படங்கள், சஞ்சிகைகள், தமிழ் கலாச்சாரத்தை கொச்சைப்படுத்தும் மூன்றாந்தர வியாபாரக் குப்பைகளான இந்தியத் தமிழ்திரைப்படங்கள் என மக்களை உளவியல் மற்றும் உடலியல் ரீதியில் பலவீனர்களாக்கும் சகலதும் எவ்விதமான கட்டுப்பாடுமின்றி குடா நாட்டுக்குள் வர அனுமதிக்கப்பட்டன.

போரின் உக்கிரம், இழப்புகள், துன்பதுயரங்கள் , இராணுவ அழுத்தம் காரணமான அச்சம், எதிர்காலம் குறித்த நம்பிக்கையின்மை இவைகளால் ஏற்கனவே மனதளவில் நொந்துபோயிருந்த மக்களிடையே மேற்குறிப்பிட்ட விஷவித்துகளின் பரம்பல் வேகமானதில் வியப்பில்லை.

இதன் மூலம் சிங்கள அரசு தமிழ் மக்களின் மனோபலத்தை திசைதிருப்புவதில் ஓரளவு வெற்றி கண்டது என்றுதான் கூற வேண்டும். இன்று யாழ். குடாநாட்டில் அதிகரித்து வரும் குற்ற மற்றும் சமூகவிரோதச் செயல்கள் , ஈவிரக்கமற்ற கொலைச் சம்பவங்கள் ,பாதாள உலக குழுக்களின் அட்டகாசங்கள் ,குடும்ப உறவுகளில் ஏற்படும் மோதல்கள் விரிசல்கள், விவாகரத்துக்கள் , மூத்தோரை மதிக்காத்தன்மை கல்வியில் பின்னடைவு என எண்ணற்ற விடயங்களைக் கவனத்தில் கொள்வோமாயின் நாம் எத்தகையதொரு அதல பாதாளத்தை நோக்கிச்சென்று கொண்டிருக்கின்றோம் என்பதைப் புரிந்துகொள்ளமுடியும்.

சிங்கள அரசினதும், படைகளினதும் திட்டமிட்ட நடவடிக்கைகளுடன் வேறுசில சுய மற்றும் புறக் காரணிகளும் இவற்றை ஊக்கிவித்து வருகின்றன என்பயையும் கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

சுய உழைப்பின்றி வெவ்வேறு சமூக விரோத சக்திகளின் ஊக்குவிப்பின் பேரில் அசாதாரமான வகையில் கிடைக்கும்அபரிமிதமான பணப்புழக்கம், சமூகக்கட்டமைப்பில் ஏற்பட்ட தளர்ச்சி, ஆடம்பர வாழ்வில் நாட்டம், கல்வியில் அக்கறையின்மை போன்றவற்றையும் இதற்கான காரணிகளாக உள்ளடக்கமுடியும் உழைப்பின்மையும், வறுமையும், உளநோய்களும் வாழ்க்கை மீதான வெறுப்பும் சமூகச் சமநிலைக்குறைவும் அதீதசுயநலமும் கூட இவற்றுள் அடங்கும்.

இந்த வகையில் இன்றைய சமாதான சூழலில் மீண்டும் விடுதலைப்புலிகளின் வருகையையடுத்து ஏற்பட்டுள்ள சில மாற்றங்கள் எதிர்கால நம்பிகையை ஏற்படுத்துவதாக இருந்தாலும் ஆபத்து நிலையும் தொடரவே செய்கிறது

அண்மைக்காலங்களில் ஊடகங்கள் ஊடாக இந்த கலாசார சீரழிவு ஊடுருவல்கள் தீவிரம் கொள்ளத் தொடங்கியுள்ளன. சட்டபூர்வ அங்கீகாரத்துடன் இந்த ஊடகங்களுடான குறிப்பாக வானொலி தொலைக்காட்சி என்ற இலத்திரனியல் ஊடகங்களின் 24 மணிநேர 'சேவை' என்ற பெயரிலான ஆக்கிரமிப்பு ஊடுருவலானது மற்றொரு வகையிலான நுட்பமான 'தமிழின தனித்துவ' அழிப்பு செயற்பாடுகளின் விஸ்தரிப்பைத் தொடங்கியுள்ளன.

தமிழ்மக்களின்நேரத்தை - வாழ்வை -அன்றாட இயக்கத்தை வானொலி மற்றும் தொலைக்காட்சி பெட்டிகளின் முன்னால் இழக்க வைக்கும் இந்த.ஊடுருவல்கள் விரும்பத்தகாத சக்திகளால் மேற்கொள்ளப்படுகின்றன என்ற உண்மையை எமது மக்கள் உணர்ந்து கொள்ளுதல் இன்றைய காலத்தின் அவசியமாகியுள்ளது.

வெறும் பணம் பண்ணும் வர்த்தக நோக்கத்தை இலக்காகக் கொண்டு தமிழ் மக்களிடையே தமது ஆக்கிரமிப்பை தொடங்கியுள்ள - கொழும்பை மையமாகக் கொண்டு இயங்கும் இந்த வியாபாரசக்திகள் எமது மண்ணின் - மக்களின் தனித்துவ அடையாளங்களை வளர்க்கும் எமது கலைஞர்களின் ஆற்றலை வெளிக்கொணரும் நிகழ்ச்சிகளை தயாரித்து ஒலி-ஒளி பரப்பினால்கூட பரவாயில்லை.ஆனால் இந்தியவின் மூன்றாந்தர சினிமாவின் நசிவு கலாசார -எமது மக்களின் உளவளர்ச்சிக்கு எந்த வகையிலும் உதவாத, இன்னும் கூறுவதானால் எமது மக்களின் இயல்பையே சீரழிக்கும் தன்மை கொண்ட இறக்குமதி நிகழ்சிகளுக்கு இங்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுப்பதற்கே முன்னுரிமை கொடுப்பதுதான் வேதனை தரும் விடயமாகும்.

இந்த தீய கலாசார சக்திகளை இப்படியே செயற்படாவிட்டால் தமக்கான கலை கலாசாரம் என்பதெல்லாம் தென்னிந்திய சினிமாவின் வழிகாட்டலின் மூலம் வளர்த்தெடுக்கப்படும் ஆபத்தொன்றை எதிர்கொள்ள நேரிடும் என்பது மட்டும் உண்மை. இந்த ஊடகங்களும், ஒருவிதமான கலாசார சீரழிவு நடவடிக்கைகளையே கவர்ச்சிகரமான பரபரப்புடன் கூடிய சமூகவளர்ச்சி என்ற தொலைநோக்கு சிந்தனையின் அடிப்படையில்லாத அயலக சக்திகளின் பரஸ்பர ஒத்துழைப்புடன் மேற்கொண்டுவருவதை ஆழமாக ஆராய்ந்தால் புரிந்துகொள்ள முடியும். தமிழனுக்குஅவனது தனித் துவ கலாசார அடையாளத்தை இழக்க வைத்துக்கொண்டே தமிழ் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா என்று தமிழ் சினிமா பாணியில் விளம்பரவசனம் வெளியிடுவதில் உள்ள ஏமாற்று நடவ்டிக்கையை எமது மக்கள்தான் உணந்துகொள்ள வேண்டும்.

# சமாதானத்தின் அனாதைகள்

## பாகம் - II

நிலாந்தன்

யாழ்ப்பாணத்தில் தற்சமயம் பத்திரிகைகளின் விற்பனையில் வீழ்ச்சியேற்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்குப் பிரதானமாக இரண்டுகாரணங்கள் கூறப்படுகின்றன.

முதலாவது, சமாதான காலத்து அரசியல் சுவாரஸ்யம் குறைந்ததொன்றாக மாறிவருவதென்பது. அதாவது யுத்தகாலத்து குருதிசொட்டும் ஸ்கோர்போட் விவரங்களில் இருந்த கவர்ச்சியோடு ஒப்பிடுகையில் சமாதான காலத்துச் செய்திகள் விறுவிறுப பின்றிக்காணப்படுவதென்பது.



இரண்டாவது காரணம், குடாநாடு படிப்படியாக தொலைக்காட்சிச் 'சனல்'களுக்குள் சிக்கி வருகிறது என்பது. தமிழின் மிகச் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான சுந்தர ராமசாமி தொலைக்காட்சியை "வீட்டுக்குவந்த சினிமா" என்று அழைத்தார். யாழ்ப்பாணத்து மத்தியதரவர்க்கம் படிப்படியாக தொலைக்காட்சிச் 'சனல்'களின் ஈர்ப்பு வலயத்துக்குள் வந்துகொண்டிருக்கிறது.

அண்மையில் ஒரு பத்திரிகையாளர் சொன்னார்; ஒரு சாவீட்டில் நடந்த உரையாடலைப் பற்றி. "சவ அடக்கத்தை இரண்டு மணிக்குள் முடித்தால் நல்லது ரி.வி யில் ஒரு நாடகத் தொடர் இருக்கிறது" என்று இரண்டுபேர் கதைத்துக் கொண்டார்களாம்.

இப்படி யாழ்ப்பாணத்தின் ரசனையும், ருசியும் மாறிவருவது என்பது திடீரென்று புரிந்துணர்வு உடன்படிக்கையுடனான நிகழத் தொடங்கிய ஒரு மாற்றம் அல்ல. அது யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சியோடு சுமார் ஏழாண்டுகளுக்கு முன் தொடங்கியது. படையினரின் பிடிக்குள் யாழ்ப்பாணம் வந்ததையடுத்து அது தனது நிச்சயமற்ற கடல்வழிகளினூடாக தென்னிலங்கையுடன் வலிந்து இணைக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் இரண்டு முக்கிய மாற்றங்கள் நிகழ்ந்தன.

ஒன்று, யாழ்ப்பாணத்தின் பாரம்பரியமான கல்வி நம்பிக்கைகளில் அல்லது தொழிற்தெரிவுகளில் உண்டாகிய மாற்றம். இரண்டாவது யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தில் உண்டாகிய திடீர் எழுச்சி.

இவ்விரு மாற்றங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை அவற்றைச் சிறிது விரிவாகப் பார்ப்போம்.

முதலாவது, யாழ்ப்பாணத்தில் கல்விக் கொள்கைகளில் அல்லது தொழிற்தெரிவுகளில் உண்டாகிய மாற்றம். யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சியோடு புலிகளின், பயண அனுமதிக்கான வயது வரையறைகள் இல்லாது போயின. இதனால் யாழ்ப்பாணத்திலிருந்து யாரும் வெளிநாடு போகலாம் என்ற ஒரு நிலைதோன்றியது.

படித்துப் பட்டம் பெற்று ஆளாகிவிடுவதற்குள் தமது பிள்ளைகளை யுத்தம் தின்று விடுமோ என்ற அச்சம் எல்லாப் பெற்றோரிடமும் இருந்தது. எனவே பிள்ளைகள் உயிரைக்கையில் பிடித்துக் கொண்டு படித்துப் பட்டம் பெற்று வருவதைவிடவும் எங்காவது கண்காணாத் தேசத்தில் உயிருடன் பத்திரமாக இருந்தால் சரி என்றே பெரும்பாலான பெற்றோர்கள் நம்பினார்கள்.

இந்த இடத்தில் ஒன்றைச் சுட்டிக்காட்டவேண்டும். யாழ்ப்பாணத்தின் தொழிற்தெரிவுகளான டொக்ரர், என்ஜினியர், எக்கவுண்டர், 'லோயர் போன்ற தொழில்கள் அவை ஈட்டித்தரும் வருமானம் மற்றும் அந்த வருமானத்தால் கிடைக்கும் சமூக அந்தஸ்து போன்றவற்றுக்காகவே அதிகம் விரும்பப்பட்டன. ஒரு தொழில் அதன் வருமானத்தாலேயே மதிப்பிடப்பட்டது. இதன்படி பார்த்தால் ஒரு வெளிநாட்டுத் தமிழர் இங்கேயுள்ள டொக்ரர், என்ஜினியரை விடவும் பலமடங்கு உழைக்கிறார். தவிர உயிருடன் பத்திரமாகவும் இருக்கிறார்.





எனவே தனது பிள்ளைகளை கண்காணாத் தேசங்களுக்கு அனுப்பி அவர்கள் உயிருடனும் டொலர்களுடனும் பத்திரமாக இருந்தால் சரி என்று யாழ்ப்பாணம் நம்பியது.

இதற்கு புலிகளின் பயண அனுமதிக்கான வயது வரையறைகள் இல்லாமல்போனது ஒரு மகா வாய்ப்பாகியது. இதனால் மிகக் குறுகியகாலத்துள் பெருமளவு இளவயதினர் வெளிநாடு சென்றுவிட்டார்கள். இது யாழ்ப்பாணத்தின் கல்விபற்றிய நம்பிக்கைகள் மற்றும் அதன்தொழிற்தெரிவுகளை மட்டும் மாற்றிவிடவில்லை. அதோடு யாழ்ப்பாணத்துப் பொருளாதாரத்தின் திசை வழியையும் சடுதியாக மாற்றிவிட்டிருக்கிறது. இது முதலாவது மாற்றம்.

இரண்டாவது மாற்றம், யாழ்ப்பாணத்துப் பொருளாதாரத்தில் உண்டாகிய திடீர் வீக்கம். இது இரண்டு விதமாக நிகழ்ந்தது. முதலாவது யாழ்ப்பாணம் தென்னிலங்கையுடன் இணைக்கப்பட்டதால் வந்தது. இரண்டாவது வெளிநாட்டுக்காசு.

முதலாவதின்படி, யுத்தகாலங்களில் குறிப்பாக யாழ்ப்பாணம் விடுதலைப் பிரதேசமாக இருந்த காலங்களில் பொருளாதாரத்தடைக்குள் வாழ்ந்த போது அசாதாரணமாக தமது வல்லமைக்கு மீறி உழைத்த மக்கள் அவர்கள். பின்பு யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சியை அடுத்து அது தென்னிலங்கையுடன் தொடுக்கப்பட்டபின்பு கிடைத்த வளங்களின் பின்னணியில், முந்திய அதே அசாதாரண கடின உழைப்பை பிரயோகித்தபோது பலனும் பலமடங்காயிருந்தது. இது முதலாவது காரணம்.

இரண்டாவது வெளிநாட்டுக்காசு. அண்மையில் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த ஒரு கருத்தரங்கில் கலந்துகொண்ட வெளிநாட்டில் வசிக்கும் ஒரு தமிழ் அறிஞர் கூறினாராம், 'தினசரி யாழ்ப்பாணத்துக்கு சுமார் ஆறு கோடி ரூபாய் வருகிறது' என்று சில உத்தியோகப்பற்றற்ற வங்கி வட்டாரங்கள் தெரிவிப்பதாக.

'இவ்வளவு தொகைப் பணம் எங்கே போகிறது? எதில் முதலிடப்படுகிறது?' என்றுமவர் கேட்டாராம்.

கொழும்பில் ஒரு விசயம் தெரிந்த சிங்கள வர்த்தகர் கேட்டாராம், "எமது நாடாளுமன்றத்தில் வருடாந்த 'பட்ஜற்' தொகை போல ஒரு பெருந்தொகைக் காசு வெளிநாட்டிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகிறது. இது எங்கே போகிறது? எதில் முதலீடு செய்யப்படுகிறது'' என்று.

இது யாழ்ப்பாணத்தின் எதிர்காலத்தைப் பற்றி மட்டுமல்ல முழுத் தமிழினத்தினதும் விடுதலை பற்றியும் மகிமைகள் பற்றியும் சிந்திக்கும் எல்லோரிடமும் கேட்கப்படவேண்டிய ஒரு கேள்வி.

ஒரு புறம் கோடிக்கணக்கான பணம் முதலீடு செய்யப்படாமல் விரயமாகிறது. அல்லது வீணே தேங்கி நிற்கிறது. இன்னொரு புறம் வன்னியிலும் கிழக்கிலும் மின்சாரம் இல்லாத கிராமங்கள் தகவல் யுகத்தின் தீவுகளாய் தனித்து விடப்பட்டிருக்கின்றன.

படையினரின் பிடியிலுள்ள பிரதேசங்களில் தமிழரின் செல்வம் திட்டமிடப்படாது விரையமாகிறது. ஆனால் விடுதலைப் பிரதேசங்களில் அதவது, தமிழரின் வீரம் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் இடங்களில் அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுக்க போதிய நிதி இல்லாத ஒரு நிலை.

ஒருபுறம் வாழ்க்கை தொலைக்காட்சிப் பெட்டிகளின் நீட்சியாகிக் கொண்டிருக்கிறது. இன்னொரு புறம் வாழ்க்கை குப்பிலாம்பின் கசியுமொளியில் சமாதானத்தின் நாட்களை எண்ணுவதாயிருக்கிறது.

இவை இரண்டையும் சமப்படுத்தி தமிழரின் வீரம், தமிழரின் செல்வம், தமிழரின் மூளை என்பவற்றை இணைத்து முழு ஈழத்தமிழினத்துக்குமான ஒரு ஒட்டுமொத்தப் பொருளாதாரத் திட்டத்தைப் போடுவதற்கு குறைந்தபட்சம் இடைக்கால நிர்வாக அமைப்பொன்றாவது வேண்டும்.

யாழ்ப்பாணத்தின் பிரச்சினையே அங்கே நிலவும் அரசியல் தலைமைத்துவ வெற்றிடம் தான். அங்கே இப்பொழுது நடந்துகொண்டிருப்பது நிர்வாகிகளின் ஆட்சி. முறையான அர்த்தத்தில் அரசியல் தலைமைத்துவம் அங்கேயில்லை இந்த நிலை தொடரும்வரை பொருளாதாரத்தை சரியானபடி திட்டமிட முடியாது.

எனவே எல்லாவற்றிற்கும் முதலில் தேவை ஒரு இடைக்கால நிர்வாக ஏற்பாடே. ஆனால் கொழும்பில் இரண்டு பெரிய கட்சிகளுக்கிடையில் சமரசம் செய்துவரும் பிரமுகர்கள் கிறிஸ்மஸ் லீவில் போக சமாதானமும் ,லீவில் போகுமளவிற்கே அங்கே அரசியல் நிலவரம் உள்ளது.

இந்த லட்சணத்தில் இடைக்கால நிர்வாகம் ஒன்றைப் பற்றிச் சிந்திப்பது என்பது சித்த சுவாதீனமில்லாத நபர்களால் தான் முடியும்.

தமிழர்களுக்குச் சமாதானமும் இல்லை. சகஜவாழ்வுமில்லை. ஆனால் சமாதானம் என்ற ஏதோ ஒன்றை வர்த்தகமயப்படுத்தும் வேலைகள் மட்டும் துரிதகதியில் நடந்தவண்ணமுள்ளன.

சமாதானத்தின் பெயரால் யாழ்ப்பாணத்தை தென்னிலங்கையுடன் நிபந்தனையற்ற விதத்தில் பிணைக்கும் வேலைகள் மட்டும் துரிதகதியில் நடந்த வண்ணமுள்ளன.

சமாதானத்தின் பெயரால் சனங்களை மனோவசியம் செய்யும் வேலைகள் மட்டும் துரிதகதியில் நடந்தவண்ண முள்ளன.

இம்முறை சமாதானம் அசாதாரணமாக நீண்டதாயிருக்கிறது. அதே சமயம் அது தமிழர்களை பார்வையாளர்களாகவும் அனாதைகளாகவும் வைத்திருக்கிறது.

ஒரு புறம் யாழ்ப்பாணத்தில் சமாதானத்தின் அனாதைகள் சிறைச்சாலைகளை நிறைக்கிறார்கள். அங்கே சிறைச்சாலைகளில் இடநெருக்கடியாம்.

இன்னொருபுறம் வன்னியில் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சமாதானத்தின் அனாதைகள் படுக்கக் கட்டிலின்றி ஒரு கட்டிலில் இருவர் படுக்கிறார்கள்.

சமாதானம் வன்னிக்கு பொருளாதார மீட்சியைக் கொண்டு வரத் தவறிவிட்டது.

யாழ்ப்பாணத்தில் அது அங்கே ஏற்கெனவே கடந்த ஏழு ஆண்டுகளாக நிலவி வரும் தலைமைத்துவ வெற்றிடத்தை நிரப்பத் தவறிவிட்டது. இந்த வெற்றிடத்திலிருந்தே குற்றவாளிகளும் குற்றச் செயல்களும் உற்பத்தியாகின்றன. இந்த வெற்றிடத்திலேயேலயமில்லாத துரித நகரமயமாதல் நிகழ்ந்து வருகிறது. இந்த வெற்றிடத்திலேயே பெருமளவு பணம் முதலீடு செய்யப்படாமல் வீணே விரையமாகிறது.

கடந்த 21 மாதகால சமாதானம் தமிழர்களை நுகர்வுப்பொருட்களின் போகத்துள் வசமிழந்துபோக வைத்ததைத்தவிர, சிதறிக்கிடந்த தமிழர்களை தற்காலிகமாக ஒன்றிணைத்தது என்பதைத்தவிர, மெய்யான அர்த்தத்தில் அது தமிழர்களை சமாதானத்தின் பார்வையாளர் களாகவே, சமாதானத்தின் அனாதைகளாகவே வைத்திருக்கிறது.

யுத்தத்தின் பங்காளிகளாயிருந்த மக்களை, யுத்தத்தின் பாடுகளை பெரிதும் சுமந்த மக்களை, சமாதானத்தின் அனாதைகளாய், சமாதானத்தின் பார்வையாளர்களாய் வைத்திருக்கும் ஒரு அரசியலை எப்படி நியாயப்படுத்துவது?

சமாதானம் எனப்படுவது யுத்தத்தை ஒத்திவைப்பதுதான் என்பதனாலா இதெல்லாம்? ●

# நறுக்கென...

## அரச அதிபர் தரும் அதிர்ச்சித் தகவல்



அபிவிருத்தி குறித்தே அரசாங்கம் பெரிதாக அறிக்கைகளை விடுத்துவருக்கிறது. அபிவிருத்தி தொடர்பாகவே அமைச்சர்கள் யாழ்ப்பாணத்திற்கு அடிக்கடி வருகைதந்து வாய்கிழியப் பேசிவருகிறார்கள்.

அபிவிருத்தி தொடர்பாகவே யாழ். குடாநாட்டில் ஆய்வரங்குகள் நடைபெறுகின்றன, மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. நிதி ஒதுக்கீடுகள் பற்றி பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன...

எல்லாவற்றிலும் மேலாக அபிவிருத்திக்கென்றே... அதாவது போரினால் சிதிலமடைந்துவிட்ட வடக்குக் கிழக்கின் அபிவிருத்திக்கென்றே கோடிக்கணக்கான டொலர்களை சர்வதேச சமூகம் ஒதுக்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது. ஆனால் நடைமுறையில்தான் எதுவும் நடப்பதாக இல்லை.

பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை என்ற கதைதான் தொடர்வதாகவுள்ளது. வெறுமனே திட்டங்கள் மற்றும் ஆவனத் தயாரிப்புகள் ஆய்வு மதிப்பீடுகளுக்கு மட்டுமே கோடிக்கணக்கில் செலவழித்துவிட்டு செயல்முறைப்படுத்தலுக்கு நிதிபோதாது அல்லது இல்லை என அரச நிறுவனங்கள் கைவிரித்துவிடுவது ஒன்றும் புதினமான விடயமல்ல.

அதுவும் தமிழ் மக்களும், தமிழ் மண்ணும் இந்த வகையில் ஏமாற்றப்படுவது ஒரு வழமையான விடயமேயாகும்.

புனர்வாழ்வு புனரமைப்பு என பெரிதாக பேசும் அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் தங்கள் சுயவாழ்வை புனரமைத்துக்கொள்வதில் காட்டும் அக்கறையையும் ஆர்வத்தையும் பொதுமக்கள் விடயத்தில் காட்டுவதில்லை என்பதற்கு காலம் காலமாக நடைபெற்றுவரும் பல சம்பவச் சாட்சியங்கள் உண்டு.

மக்கள் மட்டும் தொடர்ந்தும் இளிச்சவாயர்களாகவே இவர்களால் கருதப் பட்டுவருகிறார்கள் என்பதுதான் துயரம் தரும் விடயமாகும்.

கடந்த வாரம் தென்மராட்சிப்பகுதியில் நடைபெற்ற அடுத்த ஆண்டுக்கான வேலைத்திட்டங்களை இனங்காண்பதற்கான ஆலோசனைக்கூட்டம் ஒன்றின்போது யாழ்ப்பாண அரசாங்க அதிபர் பத்மநாதன் கடந்த இருவருடங்களாக வெளிப்படுத்தாத உண்மையொன்றினை வெளிப்படுத்தியுள்ளார். அல்லது வெளிப்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார் என்றே கூறவேண்டும்.

அதாவது குடாநாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென அரசு கடந்த இருவருடங்களாக ஒரு சதத்தையேனும் வழங்கவில்லை என அவர் அங்கு பகிரங்கப்படுத்தியுள்ளார்.

ஆக அபிவிருத்தியை பேச்சளவில் மட்டுமே சர்வதேச அனுசரணையுடன் மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது போல் தெரிகிறது.

சமாதானத்தைப் போன்று அபிவிருத்தியும் கேள்விக்குறியான ஒன்றாகவே இருக்கும் என்பதற்கு இதனைவிட ஆதாரம் என்ன வேண்டும்?

அரச அதிபர் இப்போதாவது இதனை வெளிப்படுத்தியமைக்கு நன்றி.

## ஏமாற்று அரசியல் வாதிகள் கவனம்



'அரசியல் வாதிகள் சிலர் என்னைச் சந்திக்க வருவது எனது ஆலோசனைகளைப் பெறுவதற்கல்ல... மக்களை ஏமாற்றுவதற்கே...' எவ்வளவு உண்மையான வார்த்தைகளை மல்வத்தை மகாநாயக்க தேரர் கூறியுள்ளார்... இல்லையில்லை அவரது அனுபவம் பேசியுள்ளது. அதற்கு நன்றி கூறத்தான் வேண்டும்.

ஆனால் மக்களை ஏமாற்ற தன்னிடம் வந்துபோகும் அந்தச் சில அரசியல்வாதிகள் யார் என்பதையும் மக்களுக்கு அவர் வெளிப்படையாகக் கூறியிருப்பாரேயானால் அவரை நாமும் பாராட்ட முடியும். ஆனால் அவர் அப்படிக் கூறவில்லை அதன் மூலம் அவர் அத்தகைய ஏமாற்றுப் பேர்வழிகளான அரசியல்வாதிகளை, மக்களை அவர்கள் தொடர்ந்தும் ஏமாற்ற மறைமுகமான அங்கீகாரம் வழங்குகிறார் என்றே கூறமுடியும்.

இன்றைய நாட்களில் மல்வத்தை - அஸ்கிரிய பீடாதிபதிகளின் ஆசீர்வாதத்தை பெறாத சிறிலங்காவின் அரச பீடத்தவர் எவருமே இல்லை என்றுதான் கூறவேண்டும். இவர்கள் அனைவரும் எத்தகைய ஆலோசனைகளைப் பெற அவர்களிடம் செல்கிறார்கள் என்பதும், அதற்கு இந்த பீடாதிபதிகள் என்ன ஆலோசனைகளை வழங்குகிறார்கள் என்பதும் வெளிப்படையாக முழுமையாகக் கூறப்படுவதும் இல்லை.

எனினும் இந்த அரசியல் தலைமைகள் பௌத்த சிங்கள மக்களின் பிரதிநிதிகளாகவே மதபீடத்தவர்களால் அங்கீகரிக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்படுகிறார்கள் என்பது மட்டும் வெளிப்படையானதாகும்.

காலம் காலமாக, மாறி, மாறி இந்த பேரினவாத அரசியல் தலைமைகள் தான் நாட்டு மக்களை இதே மதபீடாதிபதிகளின் ஆசீர்வாதம் மற்றும் ஆலோசனையுடன்தான் ஏமாற்றிவருகிறார்கள் என்பது இபபோது மிகவும் தெளிவாகியுள்ளது.

அந்த உண்மையை ஆலோசனைகளையும், ஆசீர்வாதங்களையும் வழங்கிய பீடாதிபதி ஒருவரே தெரிவித்தும் விட்டார்.

அதுமட்டுமல்ல அந்த அரசியல் ஏமாற்றுப் பேர்வழிகளின் தன்மையைப்பற்றி அவர் மேலும் கூறுகையில் 'இத்தகையவர்கள் என்னைச் சந்தித்துவிட்டு வாசலைத் தாண்டிய உடனேயே எனது ஆலோசனைகளை மறந்து விடுவார்கள் என்றும் சொல்லியதை மக்கள் தான் கருத்தில் கொள்ளவேண்டும்.

அதாவது பௌத்த சிங்கள மக்கள்தான்...

மக்களுக்கு வாக்குறுதிகளை அள்ளிவழங்கிவிட்டு தேர்தலில் வாக்குகளைப் பெற்றுக்கொண்டு பதவியில் அமர்ந்ததும் தாம் வழங்கிய வாக்குறுதிகளை மட்டுமல்ல தமக்கு வாக்களித்த மக்களையே சுலபமாக மறந்துவிடும் சிங்கள தலைவர்கள் சர்வதேசத்திற்கு சமாதானம் தொடர்பாக கொடுத்த வாக்குறுதியை எப்படி காப்பாற்றுவார்களாம்? தமிழ் மக்களுக்கு உரிமைகளை எப்படி ஒப்புக்கொண்டபடி வழங்குவார்களாம்? தேர்தல் வரப்போகிறது ஏமாற்றும் பேர்வழிகள் மதப்பீடாதிபதிகளின் ஆசீர்வாதத்துடன் படையெடுக்கப்போகிறார்கள் தென்பகுதி மக்களே கவனம்.

## நந்தன குணதிலகவின் அறியாமை



'யாழ்ப்பாணத்தில் உள்ள - இராணுவத்தால் ஆக்கிரமிக் கப்பட்டுள்ள மக்களின் வாழ்விடங்களை உள்ளடக்கியதான உயர் பாதுகாப்பு வலயங்கள் என்பது பெரும் பிரச்சினைக்குரிய விடயமல்ல'

இப்படி தமிழ் மக்களின் வாழ்வியக்கத்துடன் சம்மந்தப்பட்ட, உயிர்ப்பிரச்சினையான ஒன்றைப்பற்றி சர்வசாதாரணமாகக் கருத்துக் கூறியிருப்பவர் யாராக இருக்கும் என நினைக்கிறீர்களா?

இப்படியாக எல்லாம் மக்களின் பிரச்சினை குறித்து மக்குத்தனமாக கருத்துக் கூறும் திறன் மக்கள் விடுதலை முன்னணி என்று பெயரை மட்டும் வைத்துக்கொண்டு மக்கள் விரோத செயற்பாடுகள் பலவற்றை புரட்சி என்ற பேரில் இலக்கற்று அரங்கேற்றிய பெருமை(!?)க்குரிய 'சாயம்போன' சிவப்புத்தோழர்களான ஜே.வி.பி யினரின் முன்வரிசைத் தலைவர்களில் ஒருவரான நந்தன குணதிலகதான்.

அவரைப் பொறுத்தவரை அது ஒரு சின்னப்பிரச்சினைதானாம்!

அந்தச் சின்னப்பிரச்சினைதான் இன்று தமிழ்மக்களின் பெரிய பிரச்சினை என்பதை இந்த நவீன சிவப்பு பேரினவாதத்தலைவர் புரிந்துகொள்ளாதது வியப்புத்தான்.

அரசாங்கத்தை மாற்றினால்தான், நோர்வேயை அகற்றினால்தான், அமெரிக்காவை புறக்கணித்தால்தான் சனாதிபதியுடன் கூட்டுச்சேர முடியும் என பெரியபெரிய பிரச்சினைகளை சந்திரிகாவிடம் கோரிக்கைகளாக வைக்கும் ஜே.வி.பியினருக்கு யாழ். குடாநாட்டின் உயர்பாதுகாப்பு வலயத்தை அகற்றினால் தான் அவருடன் கூட்டணி வைத்துக்கொள்ளமுடியும் என்று இந்தச் சின்னப்பிரச்சினையை சேர்த்துக்கொள்ளத் துணிவில்லாமல் போய்விட்டதே...!

துணிவு மட்டுமல்ல, அவர்களுக்கு இது விடயத்தில் விருப்பமும் இல்லை என்பதுதான் உண்மை...

அது மட்டுமல்ல 65000சதுர கிலோமீற்றர் பரப்பளவுடைய வடக்கு - கிழக்குப் பகுதியை வெறும் மூன்றில் ஒருபங்கு சனத்தொகையை மட்டுமே கொண்ட தமிழருக்கு வழங்கவும் முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

எவரும் அவரிடம் இந்தக் கோரிக்கையை விடுக்கவில்லையே!

தமிழ் மக்கள் எவரும் அவரிடம் வடக்கு - கிழக்கை தானமாகக் கேட்கவில்லையே! அவர்கள் தமது தாயக நிலப்பரப்பின் மீதான தமது உரிமையைத்தான் கேட்டார்கள்!

உரிமையை யாரும் தானமாக தரும்படி யாசிக்கமாட்டார்கள்... அதுவும் விடுதலைக்காகப் போராடும் மக்கள் அப்படி பிச்சை கேட்கமாட்டார்கள் என்பது இந்த புரட்சி (முன்னாள்) க்காரர்களுக்குத் தெரியாது போலும்....

அவர்கள் இப்போது பொ.ஐ.முன்னணியிடம் 40 இடங்களை தமக்கு தேர்தலில் தருமாறு யாசிப்பவர்களாக இருக்கையில் இதெல்லாம் எங்கே அவர்களுக்கு விளங்கப்போகின்றது?

மக்களை விடுதலை செய்வோம் என்று முன்னணி அமைத்து புரட்சிக்கோஷம் போட்டவர்கள், இப்போது அவர்களை உதைத்த காலையே கட்டிப்பிடித்துக்கொண்டு கிடக்கிறார்கள், யாரை எதிர்த்து ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தார்களோ அவர்களிடமே தொகுதிப் பிச்சை-கேட்கிற பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டு விட்டார்கள்.

நந்தனகுணதிலகவுக்கு இது தெரியாது போலும்... பாவம் இந்தவிடயமே தெரியாத அவர் உயர்பாதுகாப்பு வலயத்தைப் பற்றி பேசுவதுதான் வேடிக்கை!

## கொபி அனானும் சங்கை ஊதிவிட்டார்



'சிறிலங்காவின்சனாதிபதியும் பிரதமரும் தமக்கிடையேயான பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளவேண்டும்'

ஏற்கெனவே சர்வதேச சமூகம் அண்மைக்காலங்களில் வலியுறுத்திவந்துள்ள விடயம் இதுவேயாகும். அதுவும் சமாதானத்தின் பேரால், சிறிலங்காவின் எதிர்காலம் மீதான அக்கறையின் பேரால்... ஆனால் அவை எதுவுமே அதிகார போதை மிக்க சனாதிபதியாலும் அதிகாரங்கள் எதுவுமற்ற பிரதமராலும் கவனத்தில் கொள்ளப்படவில்லை எனினும் ஒரு இணக்கப்பாட்டிற்கு இருதரப்பினரும் வர முடியாத நிலை தொடர்வதற்கு ஒருவரையொருவர் குற்றம் சாட்டி போட்டா போட்டி அரசியலைத் தொடர்வது மட்டும் நிற்கவில்லை.

தீவிரமான வகையில் சிறிலங்காவின் இனப்பிரச்சினையானது ஒரு போராட்டவடிவமாக மாறத்தொடங்கிய, பண்டாரநாயக்காவின் தலைமையிலான ஆட்சிக்காலத்தின் ஆரம்பம் முதல் இன்றுவரையான நான்கு தசாப்தத்திற்கும் அதிகமான வயது, ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான அதிகார மோதல் போராட்டத்திற்கும் உண்டு.

இனப்பிரச்சினை மட்டுமல்ல பிரதான கட்சிகளுக்கிடையேயான அதிகாரப்போட்டியும் நீண்ட நெடுங்காலம் புரையோடிப் போன பிரச்சினைதான்.

இன்றும் தெளிவாக ஒன்றைக் கூறுவதானால், இந்த இருபெரும் பேரினவாதக் கட்சியினருக்குமிடையிலான ஆட்சி பீடத்தை குறிவைத்த, அரசியல் அதிகாரத்தை கைப்பற்றிக் கொள்வதற்கான போட்டிதான் இனப்பிரச்சினையின் தீவிர வளர்ச்சிக்கு மூலகாரணம் என்றும் சொல்லமுடியும்.

தேசிய நலனை புறக்கணித்த இந்த இருதரப்பினரின் மோதல்களுக்கு அர்த்த பூர்வமான காரணிகள் எதுவும் கிடையாது.

இருதரப்புமே பௌத்த சிங்கள தேசியவாதத்தை அடிப்படையாகக் கொண்டவைதான் இரு தரப்பும் சிறுபான்மை சமூகத்தவரை மூன்றாந்தர பிரஜைகளாகக் கூட ஏற்றுக்கொள்ளும் மனோபாவம் ஆத்மார்த்தமாக கொண்டவையல்ல...

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு யுத்தம் மூலம் தீர்வுகாணத் துடித்ததில் யார் அதிகளவு வேகம் காட்டியது என்பதில் இருதரப்புக்கும் போட்டாபோட்டி உண்டு. இருதரப்பும் சமாதானத்தை உதட்டளவில் பேசும் தன்மை கொண்டவையே அல்லாது ஆர்த்மார்த்தமாக நினைப்பவைகூட அல்ல...

எனவே இவர்களுக்குள் அடிப்படை அரசியலில் முரண்பாடுகள் ஏற்படக்காரண மேயில்லை.

இன்றும் கூட 'சமாதானம்' என்ற வார்த்தையை முன்வைத்தே இவர்களுக்கு இடையிலான அதிகார மோதல்கள் தொடர்கின்றன.

எனவேதான் இவர்களால் தேசிய நலனையொட்டிய விடயங்களில் கூட முரன்பாடுகளுடன் மோதிக்கொள்ள வைத்துள்ளது.

இப்பொழுது இவர்களுக்கிடையே இணக்கம் ஏற்படவேண்டுமென்று தொலைநோக்கு சிந்தனையுடன் சமாதானத்தின் அடிப்படையில் கோரிக்கை விடுத்திருப்பவர் ஐ.நா சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான் அவர்களேதான்.

அவர் தன்பங்குக்கும் சம்பிரதாயபூர்வமாக சமாதான சங்கை ஊதிவிட்டுள்ளார். ஆனால் இவை அரசியல் செவிடர்கள் காதில் ஏறுமா என்பதே கேள்வி.

உலகப் பொலிஸ்மா அதிபர் எனப்படும் அமெரிக்க சனாதிபதி புஷ் அவர்களே ஈராக் விடயத்தில் ஐ.நாவின் கதையைக் கேட்கவில்லையே...

அவரை விட சர்வாதிகாரம் கொண்ட சந்திரிகாவா கேட்கப்போகிறார்?

**செங்குட்டுவன்**

அன்னை என்றும் அன்னை தான்: உயிரனைத்திலும் மிக்க புனிதம், அன்னைதான். - ஸேம்யல் காலரிட்ஜ்

# எய்தவனைக் கொல்லும் அம்பு

**சிறி. இந்திரகுமார்**

அரசுக்கும் சனாதிபதிக் கும் இடையேயான முட்டுக் கட்டை நிலையையோ அல்லது விடுதலைப் புலிகளுடனான நெருக்கடியையோ முடிவுக்குக் கொண்டு வந்து தீர்வுகாண வேண்டுமென்று சர்வதேச சமூகத்திடமிருந்து இலங்கைக்கு மிகவும் கூடுதலான அளவில் நெருக்குதல் இருக்கக்கூடாது.

வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னான்டோ

சனாதிபதி சந்திரி காவுக்கும் பிரதமர் ரணில்விக் கிரமசிங்கவிற்கும் இடையிலான சமாதானப் பேச்சு வார்த்தை களுக்கான நம்பிக்கைகள் தளர் வடைந்து செல்கிறது. எனவே இந்த அரசியல் நெருக்கடி தொடர் வதை அனுமதிக்கமுடியாது.

-அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சர்ட் ஆர்மிரேஜ்

தமிழில் ஒரு பழமொழி உண்டு.அதாவது 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பதே அது.

இந்தப் பழமொழியின் கருத் தாழத்தினை இங்கு நினைவுகூற வேண்டியதற்கு அவசியம் உண்டு.

ஏனென்றால் இலங்கையின் அரசியல் போக்கும், இலங்கையின் அரசியல் தலைவர்களின் பேச்சும் இதைத்தான் ஞாப கப்படுத்த வைக்கிறது.

இன்னுமொரு வகையில் 'எய்த வனையே கொல்லும் அம்பாக பிரதமர் ரணில் விக்கிமசிங்கவின் அரசும் அவரின் பரிவாரங்களும் வகுத்த பாதுகாப்பு வலைப் பின்னல் அவர்களையே இறுக்குகிறது.

இப்போது இலங்கையின் நடப்பைப் பொறுத்தவரையில் ஆரம்பத்தில் சந்திரிகாவின் - ரணில் அரசிற்கு எதிரான நடவடிக்கைகளால் சந்திரிகா அதிக நெருக்கடிகளை சந்தித்தார் என்பது உண்மை.

ஆனால் ஒரு கட்டத்திற்கு அப்பால் சந்திரிகா தனது நடவடிக் கைகளின் முடிவுகளில் தொடர்ந்தும் அப்படியே இருக்க துணிந்துவிட்டார் போலுள்ளது.

இதனால் அதிகம் சிரத்திற் குள்ளாகியுள்ளது ரணிலும் அவரது பரிவாரங்களும்தான்.

ஏனென்றால் சந்திரிகாவை ஒரு வழிபண்ண முடியாத நிலையில் ரணிலின் சனாதிபதி கனவும் அவரது மட்டுப்படுத்தப் பட்ட அதிகார பலமும் ரணிலை ஒரு வரையறைக்கு மேல் வாய்மூட வைத்துள்ளது அல்லது தடுத்துக் கொண்டு இருக்கிறது.

மறு புறத்தில் புலிகள் காட்டும் அசாதாரண பொறுமை அவரை குழப்பத்தில் ஆழ்த்தி அவர் உருவாக் கிய பாதுகாப்பு வலைப் பின்னல் அவரையே இப்போது இறுக்குகிறது.

இதன் இரண்டுபக்க பளிச் சிடும் வெளிச்சங்கள் தான் மலேசியா சென்ற இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னான்டோ கோலாலம்பூரில் செய்தியாளர்களி டம், அரசுக்கும் சனாதிபதிக்கு மிடையே யான முட்டுக் கட்டை நிலையையோ அல்லது விடுதலைப் புலிகளுடனான நெருக்கடியையோ முடிவுக்கு கொண்டு வந்து தீர்வுகாண வேண்டு மென்று சர்வதேச சமூகத் திடமிருந்து இலங்கைக்கு மிகவும் கூடுதலான அளவில் நெருக்குதல் இருக்கக்கூடாது எனக்கூறியுள்ளார்.

இன்னொருவகையில் வெளியுறவு அமைச்சரின் கூற்று



ஒன்றை புலப்படுத்துகிறது. அதாவது புலிகளுக்கு நெருக்குதல்களை சர்வதேச சமூகம் கொடுத்து பேச்சுக் களை நடத்தவேண்டுமென கோரிய ரணில் அரசு. சர்வதேச சமூகம் அரசுக்கு நெருக்குதல்களைத் தொடுக்கும் கட்டத்திற்கு வரக்கூடாது என எச்சரிப்பது போல இருக்கிறது.

இது ரணிலின் அரசு இலங்கையின் இறையாண்மையைப் பற்றியும், இலங்கை ஒரு நாடு என்ற வகையில் அதன் பிரச்சினைகளை அந்த அரசின் தேவைகளுக்கு ஏற்ப அந்த அரசு நினைப்பதுபோல கையாளப்படவேண்டும் என்பதையும் வலியுறுத்தப்படுவது போலத் தெரிகிறது.

ஏனென்றால் ஒரு அரசில் வெளிவிவகார அமைச்சு என்பது ஒரு முக்கியத்துவம் மிக்க அமைச்சுப் பொறுப்பாகும்.அந்த வகையில் இலங் கையின் வெளிவிவகார அமைச்சின் இந்தக் கூற்று ஒரு முக்கியத்துவம் மிக்கதாகும்.

ஒரு நாட்டின் உள்நாட்டு கொள்கைகளை புலப்படுத்துவதா கவே வெளியுறவுக் கொள்கை இருக்கும் என்பது பொதுவான ஒரு வெளிப்பாடு அந்தவகையில்




இலங்கையின் வெளியுறவு அமைச்சர் எதனை சுட்ட நினைக்கிறார்.

அல்லது ரணிலின் அரசு சர்வதேச சமூகத்தோடு ஒரு இரட் டைப் போக்குத்தன்மையை கடைப் பிடிக்க முயல்கிறது போலத்தெரிகிறது.

ஒன்று - இப்பொழுது இருப்பதுபோல ரணிலும் சில முக்கிய அமைச்சுக்களும் அதிகம் மேற்கு நாடுகளில் சார்ந்து நடக்கும் போக் கைத் தொடர்வது.

இரண்டாவது ரணிலின் சில அமைச்சுகளுக்கூடாக மேற்கு நாடு கள் தொடர்பான சில எச்சரிக்கை களை விடுப்பது இத்தகைய ஒரு இரட்டைப் போக்குத் தன்மையை கடைப்பிடிக்கமுயல்கிறது போலும்.

இந்த வகையில் சந்திரி காவைவிட, புலிகளைவிட ரணிலின் அரசே இப்போது நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக அமெரிக்காவிற்கு விஜயம் செய்த அமெரிக்காவின் நண்பர் என்று கூறப்படும் அமைச்சர் மிலிந்த மொற கொடவை சந்தித்த அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சட் ஆர்மிரேஜ்.

சனாதிபதி சந்திரிகாவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க விற்கும் இடையிலான சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கான நம்பிக்கைகள் தளர்வடைந்து செல்கின்றது எனவே இந்த அரசியல் நெருக்கடி தொடர் வதனை அனுமதிக்கமுடியாது என தெரிவித்துள்ளார்.

இது ரணிலின் அரசை மேலும் நெருக்கடிக்குள்ளேயே தள்ளும் ரணிலும் சந்திரிகாவும் ஒரு உடன் பாட்டிற்கு விரைவாக வந்து பேச்சை தொடர்வதற்கான நெருக்கடியை தோற்றுவிக்கும்.

அத்தோடு, இனிவரும் வாரங்களில் நோர்வே, ஜப்பான் மற்றும், ஐரோப்பிய யூனியன் பிரதி நிதிகளோடு இது தொடர்பாக பேசப் போவதாகவும் ஆர்மிரேஜ் கூறியுள்ளார்.

இதனால் சமாதானம் தொடர் பாக தென்னிலங்கையில் ரணிலும் சந்திரிகாவும் ஒரு முடிவுக்கு வரவேண டிய கட்டாயத் தேவைகள் இனிவரும்.

இந்த நிலையில் சர்வதேச சமூகம் வலியுறுத்தும் இந்த அவசரம் ரணில் சந்திரிகா சதுரங்க விளை யாட்டில் அதிக விளைவுகளை ஏற் படுத்தப்போகிறது.

அதுவும் ரணிலின் பக்கம் அதிகம் ஏற்படுத்தவே செய்யும்.

ஆகவே இப்போது இலங் கைத்தீவிற்குள் அதிகம் மேற்கு நாடு களால் விரும்பப்படும் ஒரு தலை வராக ரணில் இருக்கின்ற அதே வேளை அதிகம் அந்த நாடுகளா லேயே நெருக்கடியை எதிர் கொள்ளும் ஒருவராகவும் இருக்கிறார்.

இந்த நிலை ரணிலுக்கு ஏற்பட ரணிலே பிரதான காரணமாக இருந்துள்ளார் என்பது இன்னொரு உண்மை.

இதில் ரணிலின் தனிப்பட்ட அரசியல் முதலீட்டில் அதிகம் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதே ரணிலுக்கான அதிக கவலையாக இருக்கும். ஏனென்றால் ரணில் சந் திரிகா எதையாவது அடுத்து செய்யும் மட்டும் காத்திருப்பவர் இந்த காத்திருப் புக்கான கால அவகாசத்தை அவருக்கு வழங்க அவரும் தயார் இல்லை என்பதே.

## ஓகோ! அப்படியா!



அ. விநாயக மூர்த்தியின் 70 வது அகவை விழா வில் பெ.சந்திர சேகரர்

**இலங்கை இனப் பிரச்சினை விடயத்தில் இந்தியா தலையிடாவிட்டால் தமிழ் மக்கள் இந்தியாவைக் கைவிடவேண்டிவரும்.**

### ஓகோ! அப்படியா!



செய்தியாளரிடம் பொலிஸ் மா அதிபர் இந்திரா டி.சில்வா

**பொலிசார் தமது கடமைகளை சரிவரச் செய்தால் மனித உரிமை மீறல்களுக்கு இடமிருக் காது.**

### ஓகோ! அப்படியா!



காலியில் பஸ்நிலைய திறப்பு விழாவில் அனுரா

**தமிழீழம் உருவா வதை தடுக்கும் வகையி லேயே அமைச்சுக்கள் மூன்றையும் சனாதிபதி பொறுப்பேற்றார்.**

### ஓகோ! அப்படியா!



கண்டியில் பௌத்த பிரதிநிதிகளுக்கு ஆசிவழங்களில் மல்வத்த பீட மகாநாயக்கதேரர்

**அரசியல் வாதிகள் சிலர் என்னைச் சந்திக்க வருவது ஆலோசனை பெற வல்ல மக்களை ஏமாற்றவே.**

## மதவடி மயிலர்



**செய்தி :-** *கூட்டணி உறுப்பினர்களைப் பயன்படுத்தி புலிகள் தன்னைப் பயமுறுத்துகிறார்கள் என்கிறார் ஆனந்த சங்கரி*

**மயிலர்:-** ஆனந்த சங்கரியாருக்கு அறளை முத்திப் போச்சு... பேசக் கூடாத கதையெல்லாம் பேசத் தொடங்கிவிட்டார் பாருங்கோ... ஐயா இப்பிடியெல்லாம் கூறி ஆருக்கு என்ன செய்தியைக் கூற விரும்புகிறார் என்பது அவருக்கே வெளிச்சம்... ஆனந்த சங்கரியார் கதை அவருக்கே ஆனந்தம் தருவதாக இருக்காது என்பது தான் உண்மை.

**செய்தி :-** *தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண பிரதான கட்சிகள் இணையவேண்டும், புலிகளின் விருப்பமும் அதுவே என்கிறார் சந்திரிகா.*

**மயிலர் :-** எப்பவாம் சந்திரிகா புலிகளின் பேச்சாளரானார்? ஒற்றுமையிலை. விருப்பம் இருந்தா அரசியலில் குழப்பத்தை ஏற்படுத்தி பிரச்சினையை சிக்கலாக்கி இருக்கவேண்டியதில்லையே சமாதானத்திற்காக யுத்தம் செய்த சீமாட்டி இப்படித்தான் ஏதாவது புலம்புவார் பாருங்கோ....

**செய்தி :-** *குடாநாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைக்கு அரசாங்கம் கடந்த இருவருடமாக ஒருசதமும் வழங்கவில்லை. என்கிறார் யாழ். அரசாங்கஅதிபர்.*

**மயிலர்:-** இன்னும் உதவி வழங்கும் நாடுகள் கடன் தரவில்லை என்று அரசாங்கம் சொன்னாலும் சொல்லும் பாருங்கோ! இந்த லட்சணத்திலை அடுத்த ஆண்டுக்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் இனம் காணப்படுகின்றனவாம்... ஆனால் ஆயுதக் கொள்வனவுக்கு மட்டும் அயல் நாடுகளுக்கெல்லாம் ஆட்களை அனுப்பிக்கொண்டிருக்கினம்... அழிப்பு சிந்தனை ஆக்கத்துக்கு உதவாது பாருங்கோ.

**செய்தி :-** *புலிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றினால் நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்படும் என ஜே.வி.பி கூறுகிறது.*

**மயிலர்:-** அப்ப ஜே.வி.பி யினரின்ரை கோரிக்கைகளை நிறைவேற்றினால் மட்டும் சமாதானம் வந்து விடுமாமோ....? சிறிலங்காவிலை எத்தனையோ இரத்தக்களறிகளை ஏற்படுத்தி தங்கடை இனத்தவரை ஈவிரக்கமின்றி வெட்டியும் எரித்தும் ஆற்றில் அரைகுறை உயிருடன் வீசிய ஆக்கள் தானே இவை...! அதுசரி புலிகள் கேட்பது கோரிக்கைகள் அல்லாது.... தமிழ் மக்களின் உரிமைகள்... அது கிடைக்காட்டி போராடியாவது அதைப் பெறுதல் தவிர்க்க இயலாதது என்பதை சிவப்பு அங்கிக்காரர் புரிஞ்சு கொண்டாச்சரி....

**செய்தி :-** *கடற்புலிகள் இந்தியக் கடல் எல்லைக்குள் நுழைந்து ஒருபோதுமே தமிழக மீனவரைத் தாக்கவில்லை. என்கிறார் இந்தியக் கடற்படையின் தென்பிராந் தியத்தளபதி.*

**மயிலர்:-** தளபதியார் இதனை ஜெயலலிதா அம்மையாருக்கும். கதிர்காமஜயாவுக்கும் தான் உரக்கச் சொல்லவேணும் பாருங்கோ... கண்டதுக்கும் புலிகள் மீது கட்டுக்கதைக் குற்றங்களைக் கூறி அரசியல் பிழைப்பு நடத்தும் இரண்டுபேருக்கும் இந்தச்செய்தி எரிச்சலைத்தான் குடுக்கும்....உண்மை கடும்... அதுக்கென்ன செய்யுறது?

நேர்நோக்கு

# அதிகார இழுபறி...

சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பதவி ஏற்று இரண்டு ஆண்டு கள் முடிவுற்றுவிட்டன. சனாதிபதி சந்திரிகா குமார துங்க பதவியேற்று நான்கு ஆண்டுகள் முடிவுற்றுவிட் டன. ரணில் விக்கிரமசிங்க வின் ஆட்சிக்காலத்தில் சுமார் 9 மாதங்கள் மட்டுமே சனாதி பதி சந்திரிகாகுமாரதுங்க வின் நிறைவேற்று அதிகாரத் திற்கு அஞ்சாது அவரால் ஆட்சி புரிய முடிந்தது. ஒரு வருடம் முடிவடைந்த பின் னர் ரணில் விக்கிரமசிங்க வின் ஒவ்வொரு நகர்வும் மிகவும் சோதனைக்குரிய ஒன்றாக நிறைவேற்று அதி காரத்திற்கு அஞ்சிய ஒன்றா கவே இருந்து வந்துள் ளது. எந்தவேளையிலும் ஆட்சியைக் கலைக்கும் அதி காரம் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கைக்கு வந்து கடந்த ஒருவருட காலத்திலும் ஐக்கிய தேசிய முன்னணி எடுத்த ஒவ்வொரு நகர்விலும் அதற்கான அச் சம் இருந்து கொண்டே இருந்தது. குறிப்பாக இனப் பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காணும் விவ காரத்தில் அவர் வேகமாகச் செயற்பட முடியவில்லை.

இதற்கு அவருக்கு விருப்பமிருக்கவில்லையா? ஏனைய இனவாதிகளைப் போல அவரும் ஏமாற்று நாடகத்தை நடத் தினாரா? என்ற கேள்வியும் இருக் கிறது. ஆனால் சமாதான நடவடிக் கைகளைச் சர்வதேச நாடுகளி லிருந்து கிடைக்கக் கூடிய அழுத்தம் காரணமாக செயற்படுத்தவேண்டிய நிலையில் அவர் இருந்தும் உரிய வேகத்தில் அல்லது அவர் விரும்பிய வேகத்தில் செயற்படுத்தமுடிய வில்லை என்பதை மறுக்கமுடியாது.

இதில் முக்கியமாக வெளிநாட்டு நிதி உதவிகளைப் பெறுவது என்ற அவரின் நோக்கம் சனாதிபதி சந் திரிகா குமாரதுங்கவினால் சிதைக் கப்பட்டுவிட்டது என்றே கூறலாம். தமிழ் மக்களுக்கு அதிகாரங்களை வழங்காத அதேவேளை; புலி களுக்கு அழுத்தங்களைப் போட்டு டோக்கியோ மாநாட்டுக்கு புலிகளை



அழைத்துச்சென்று நிதியை இலகு வாகப் பெற அவர் முயன்றார் ஆனால் அது நடைபெறவில்லை.

பின்னர் வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட முன்னர் சமா தானப் பேச்சுவார்த்தையில் முன் னேற்றம் ஏற்படுவது போலக் காட்டி அந்நிதியைப் பெற எடுத்தமுயற்சி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வின் அதிரடிப் பதவிப் பறிப்பால் சிதைக்கப்பட்டது.

சனாதிபதி சந்திரிகா குமார துங்க எதைத்தான் கூறினாலும் அவரது நோக்கம் டோக்கியோ நிதி ரணிலுக்கு கிடைக்கவிடாது செய் வதே. அந்தவகையில் அவர் வெற்றிபெற்றுவிட்டார் என்றே கூற வேண்டும். ஆனால் அந்நிதி அவருக் குக் கிடைக்கப்போவதில்லை என்ப தும் வெளிப்படை,

இப்பொழுது ரணில் விக்கிரமசிங்கவிற்கு இன்னமும் மூன்று வருட ஆட்சிக்காலம் உண்டு. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விற்கு இரண்டு வருடங்களா? மூன்று வருடங்களா? என்ற சர்ச்சை எழுந் திருக்கின்றது.

சனாதிபதி சந்திரிகா குமார துங்க கையில் ரணி லின் ஆட்சியைக் கலைக்கும் அதிகாரம் இருந்தாலும் உடனடி யாகப் பயன்படுத்த மக்கள் ஆதரவு அவ ருக்கில்லை. எனவே காலம் கனியும் வரை காத்திருக்கவேண் டிய நிலை சந்திரி காவுக்கு. எப்பொழுது காலம் கனிவது?

இப்பொழுது இந்தத் திரி சங்கு நிலையால் பாதிக்கப்பட்டிருப் பது நாடும் மக்களும்தான். சிங்கள மக்களைப் பொறுத்தவரை நிறை வேற்று அதிகாரத்தையும் நாடாளு மன்ற அதிகாரத்தையும் முரண்பட்ட சக்திகளின் கைகளில் கொடுத்ததன் பலனை இன்று நன்கு அனுபவிக் கின்றனர் தோன்றியுள்ள சமாதான சூழ்நிலையில் துளிர்விட்ட நம்பிக் கைகள் கருகும்நிலையில் அவர்கள் இருக்கின்றனர். அவர்கள் தமது உள உணர்வை வெளிப்படுத்த இரண்டோ அல்லது மூன்றோ வருடங்கள் காத்திருக்கவேண்டிய நிலையில் புத்தாண்டை அவர்கள் பிரகாசமான தாக எதிர்பார்க்க முடியாது.

முரண்பட்ட சக்திகளின் அர சியல் சதுரங்க விளையாட்டு யுத்த காலத்தையும் விட சிறிலங்காவின் பொருளாதாரத்தைப் பாதித்து விடுமோ? என்பது தென்பகுதி பொருளியலாளர்களின் அச்சமாகும். நாட்டில் யுத்தம் நடைபெறும்போது மட்டுமல்ல சரிவர நிர்வகிக்கப்படா விடினும் அதேவிளைவே ஏற்படும் என வர்த்தக சமூகம் அஞ்சுகிறது.

ஆனால் இதுபற்றியெல்லாம் கவலைப்பட அதிகாரத்திற்குப் போட் டியிடும் நிறைவேற்று அதிகாரமும் நாடாளுமன்றமும் தயாராக இல்லை. இந்நெருக்கடி ஏற்பட்டு இரண்டு மாதங்களாகின்ற நிலையில் விட்டுக் கொடுப்புக்கு இரு தரப்பும் முன் வராமை அதற்கான சாத்தியப்பாடு கள் குறைவடைந்து செல்கின்றமை யையே காட்டுகிறது.

இந்த இழுபறியிலே சிக்கிக் கொண்டவர்கள் தமிழ் மக்களாகும் ஏனெனில், இந்த இரு அதிகாரங் களையும் அவர்கள் தெரிவுசெய்ய வுமில்லை ஏற்கவுமில்லை. அதே வேளை இந்த அதிகாரப்போட்டி அவர்களைப் பாதிக்காமலுமில்லை. இந்நிலை தொடர்வது தமிழ் மக்க ளைப் பாதிப்பதால் இந்த இழுப றியை தமிழ் மக்கள் விரும்பவில்லை இதனைச் சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளவேண்டும்.

வேலவன்

# இது மனிதஉரிமைப் பிரச்சினை

சமாதானம் தமிழ மக்களுக்குத் தந்த சுதந் திரம் பற்றி வெளிநாட்டு மீடியாக்காரர்கள் நேரடியா கப் பேட்டி எடுக்கவோ, ஒளிப்பதிவு செய்யவோ வேண்டுமென்றால் அவர் கள் முகமாலைச் சோத னைச்சாவடிக்கு வரலாம்.

எந்த மனித உரிமை அமைப்பாவது இராணுவத்தின் மனித உரிமை பேணும் சமா தான காலச்செயற்பாடு பற்றி நேரில் தரிசிக்க ஆவலிருந்தால் அவர் களும் முகமாலை இராணு வச் சோதனைச் சாவ டிக்கு வரலாம்.

வெளிநாட்டு இரா ஜதந்திரிகள் யாராவது சிங்கள அரசாங்கம் சமா தானத்தில் தமிழ் மக்களு டனான புரிந்துணர்வை, நம்பிக்கையை வளர்ப்பது பற்றி இராணுவத்திற்கு இடப்பட்டிருக்கும் கட்ட ளையை அறியவிரும்பின் அவர்களும் வரலாம் முகமாலைக்கு.

சோதனைச் சாவ டியைக் கடப்பதற்கு அங்கு ஒரு ஒழுங்குமுறை இருக் கிறது, ஒரு ஏற்பாடு இருக் கிறது. மேற்சொன்னவர் களின் கண்களிற்குச் சிக்காது பிறிதொரு விசேட ஏற்பாடும் அந்த முகமாலைச் சோதனைச் சாவடியில் இருக்கிறது. அது தமிழ் இளைஞர்கள் யுவதிகளிற் கும் சில சமயங்களில் வயது வந்தவர்களுக்கும் உரியதானது.

இந்த ஏற்பாடு இராணு வப் புலனாய்வுப் பிரிவின் ஏற் பாடு. இந்த மறைமுகச் சாவடிக்கு அவர்கள் யாரையெல்லாம் அழைக்கவிரும்புகிறார்களோ அவர்கள் தனியாக அழைத்துச் செல்லப்படுவர். அதற்குக் கார ணங்களோ நியாயங்களோ தேவையில்லை. தனது அடை யாள அட்டையைக் காட்டி, தான் கொண்டுவரும் பொதிகளை, உடுப்புப் பைகளை அவிழ்த்துப் பரப்பி அவற்றையும் சோதனைக் காகக்காட்டி, கைகளை உயர்த்தி, தனது உடலைச் சோதனையிட வும்காட்டி மட்டும் சாவடியைக் கடந்து போய் பயணித்துவிட முடியாது.



அழைத்துச் செல்லப்படு பவர் எந்த நியாயங்களும் காரணங்களுமின்றி, காவல்துறை யுமின்றி தனியாக விசாரிக்கப்படு வார். எங்குபோகிறாய்? எங்கி ருந்து வருகிறாய்? என்னவேலை செய்கிறாய்? எனத்தொடங்கும் விசாரணைகள் புலிகள் பற்றிக் கேட்பதாகி, நீ புலி என்று மிரட்டி யாகி, புலிபற்றித் தகவல்களைத் தருகிறாயா? என்று வினாவி, விசார ணைக்கு அவர் களைத் திருப்திப் படுத்தத் தவறுபவர் களிடம் சொந்த முகவரியைவேண்டி உன்னைப் பிறகு பார்த்துக்கொள்கிறோம் என்று அனுப்பிவைக்கிறார்கள்.

ஒருநாளைக்குப் பயணி க்கும் இளையவர்களில் பத்து வீதமானோர் இதற்குட்படுகின்ற னர். தனித்தோ நண்பர்களுடனோ பயணிக்கும் இளையவர்களில் எழுபது வீதமானோர் இதற்குட் படுத்தப்படுகின்றனர். தேவைப் படும்போது பெரியவர்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

இதற்குட்படும் பயணி கள் பயத்தினால் மிரண்டு போகின்றனர். முகவரியை கொடுத்துவிட்டு வரும் பலர் பீதியால் வீடுகளில் இருக்கமுடி யாத நிலையும் யாழ்ப்பாணத்தில் உண்டு.

ஒருவரை பலர் சேர்ந்து விசாரிப்பதும் பயணியுடன் சேர்ந்து வருபவர்களை நீங்கள் போங்கள் அவருடன் கதைத்து விட்டு விடுகிறோம் "என்று கூறி அனுப்புவதும் இங்கு சகஜம். இதனால் ஏற்படும் மனப் பீதியால் இளையவர்களும் பெற்றோரும் அடையும் மன உழைச்சலையோ, பாதுகாப்பின்மையையோ, நடமா டும் சுதந்திரத்தையோ மனித உரிமை அமைப்புக்களென்று இயங்குபவர்கள் கருத்தில்கொள் வதாக இல்லை.

யுத்தநிறுத்தக் கண காணிப்புக் குழுவிற்கு இதுபற்றி யெல்லாம் தெரியாதா? அல்லது இதுபற்றி பாராதிருப்பது குழப்பங் களைத் தவிர்ப்பதற்கான மார்க்க மென்று எண்ணுகிறார்களா? அவர்களின் அலுவலகம் ஒன்று இருக்கவேண்டிய இடம் இங்கு தான். யாழ்ப்பாணத்தில் உள்ள மனித உரிமை ஆணைக்குழு தனது ஒரு செயலகத்தை வைத் திருக்கவேண்டிய இடம் இதுதான்.

இச்சாவடியில் புலி களின் உறுப்பினர்கள் ஆயு தத்துடன் வந்ததாக குற்றம் சாட்டி கைது செய்யப்பட்டதுண்டு. பின் னர் அது தவறு என்று பகிரங்க மாக மன்னிப்புக் கேட்டதுமுண்டு.

போர் நிறுத்தத்தின் ஒரு தரப்பான புலிகளுக்கே இந்த நிலையென்றால் சாதாரண மக்களுக்கு?

புலிகளுக்கு இத்தகைய நிலை ஏற்படும் பொழுது யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு விற்கு அறிவித்து உடனடி நட வடிக்கையில் புலிகளால் இறங்கி விடமுடியும். பிரச்சினைக்குத் தீர்வுகாண பிரதமர் தொடக்கம் நோர்வே வரை அணுகவும் முடி யும். அதற்கும் முடியாவிட்டால் ஒப்பந்தத்தை இரத்துச்செய்து பதில் நடவடிக்கையில் இறங் கவும் முடியும். ஆனால் சாதாரண மக்களின் பாதுகாப்பிற்கு சுதந் திரத்திற்கு எந்த உத்தரவாதமும் இல்லாதிருக்கிறது.

நாளாந்தம் இதனால் பாதிக்கப்படுபவர்களின் எண் ணிக்கை அதிகரிக்கிறது என்பது ஒருபுறம் அதன் பிரதி விளை வாக ஏனையோரும் பீதிகருதி தமது பயணிக்கும் சுதந்திரத் தைக் கட்டுப்படுத்த வேண்டியவர் களாயிருக்கின்றனர். பாதிக்கப் படுபவர்களின் உளத்தாக்கம் அதனால் ஏற்படும் தொழிற்தாக் கம், சிரமங்கள் என்பவை பற்றி யாரும் கவலை கொள்வதாகத் தெரியவில்லை.

மனித உரிமை ஆணை க்குழுவின் கண்களை இது உறுத்தாமல் இருப்பது ஏன்?

சரி மீடியாக்கள் கூட இவ்விடையத்தில் மௌனமாக இருப்பது ஏன்?

போர் நிறுத்தக் கண் காணிப்புக் குழுவிற்கு இதில் பொறுப்பில்லையென்று சொல்ல முடியுமா?

முடிவு வேண்டும்.

பிரவீன்

அகங்காரம், பாவத்தின் வேர் என்பது போலவே, கருணை, சமயத்தின் வேர். - துளசிதாஸ்

# கிப்சி நாடோடிகளால் ஐரோப்பாவிற்குள் குழப்பமா?

**இப்புதுவருடத்தில்** பல புதிய நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைகின்றன. இவற்றுள் சில நாடுகள் கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்தவை. ஐரோப்பிய ஒன்றியக் கூட்டமைப்புக்குள் ஹங்கேரி, செக் குடியரசு, சுலோவாக்கியா, போலாந்து, சுலோவேனியா, லற்வியா போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகள் உள்



வருவதால் ஒரு வித்தியாசமான இன அடிப்படையிலான பிரச்சினை தோன்றும் வாய்ப்பு இருக்கிறது.ஏறகெனவே இது பற்றிய கரிசனை ஐரோப்பிய ஒன்றியத்தின் மேற்கு உறுப்பு நாடுகள் மத்தியில் மிகவும் பலமாகத் தோன்றியுள்ளது.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் வாழும் சிறுபான்மையினரான நாடோடி மக்கள் ஐரோப்பிய ஒன்றியத்துக்குள் தங்கு தடையின்றி உலாவும் ஏது நிலை நிச்சயம் தோன்றும். கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு அங்கத்துவம் வழங்கப்படுவதால் கிப்சி என்றும் றோமா என்றும் அழைக்கப்படும் இந்த நாடோடி மக்கள் ஐரோப்பிய ஒன்றியத்தின் மிகப்பெரிய சிறுபான்மை இனமாகத்தோன்றுவர். அத்தோடு, இந்த மக்களின் வாழ்க்கை முறை மற்றும் வாழ்க்கைத் தரம் பல இன முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் என்பதில் ஐயமில்லை.

நாடோடி வாழ்க்கை நடத்தும் இந்த மக்கள் உலகின் பல பாகங்களில் சிதறுண்டு வாழ்ந்தாலும், ஐரோப்பாவில் தான் அவர்கள் மிகக் கூடுதலாக வாழ்கின்றனர். இவர்கள் நிரந்தரமாக ஒரே இடத்தில் குடியிருக்க விரும்பாத காரணத்தால் இவர்கள் பற்றிய கணக்கெடுப்புக்கள் வித்தியாசப்படுகின்றன. உலகின் மொத்த றோமா மக்களின் எண்ணிக்கை 9 தொடக்கம் 12 மில்லியன்வரை இருக்கலாம் என்று கேம்பிறிஜ் பல்கலைக் கழகம் 1999 ல் பிரசுரித்த ஆய்வு நூல் தெரிவிக்கின்றது. இவர்கள் கிப்சி என்று அழைக்கப் படுவதை விரும்புவதில்லை. றோமா அல்லது 'பயணிகள்' (TRAVELLERS) என்று அழைக்கப்படுவதையே விரும்புகின்றனர்.

இந்த மக்கள் பேசும் மொழியைப் பொதுவாக றோமானி (ROMANY) என்பர். இது இந்தோ-ஆரியன் குடும்ப மொழியாக இருப்பினும் இந்த இன மக்கள் வாழும் நாட்டு மொழியுடன் பெருமளவில் கலந்துள்ளது. றோமானி மொழி உலகின் பற்பல பாகங்களில் வேற்று வடிவங்களைப் பெற்றுள்ளது. ஆயிரம் வருடங்களுக்கு மேலான காலத்திற்கு முன் இந்தியாவின் வட மேற்குப் பகுதியில் வாழ்ந்த பல்வேறு இன குழுக்கள் இந்தியாவைவிட்டு வெளியேறின. இவர்கள் ஏன் கிளம்பினார்கள் என்பதற்கான காரணம் தெரியவில்லை. ஒரு பகுதியினர் இப்போது ஈரான் நாடு இருக்கும் முன்னாள் பாரசீகத்திற்கு சென்றனர். இன்னுமோர் பகுதியினர் உதுமான சாம்ராச்சிய நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தனர். இன்னும்மோர் குழுவினர் சிரியா, எகிப்து,வட ஆபிரிக்கா போன்ற நாடுகளை வந்தடைந்தனர்.

இவர்கள் யாவரும் ஒட்டு மொத்தமாக எகிப்தில் இருந்து வந்தவர்கள் என்ற தவறான எண்ணத்தில் இவர்களை ஐரோப்பியர்கள் 'கிப்சி' என்று அழைக்கத் தலைப்பட்டனர். காலப்போக்கில் இது நிலைத்து விட்டது. இந்த நாடோடிகளின் ஐரோப்பிய பயணம் மிகவும் விரிவானது. கிழக்கு ஐரோப்பாவின் பால்கன் நாடுகள், ருஷ்யா, ஹங்கேரி ஊடாக அவர்கள் மேற்கு ஐரோப்பாவிற்குள் நுழைந்தனர். 16ஆம் நூற்றாண்டு வரையில் கிப்சிகள் குதிரைகள் பூட்டிய தமது கூடாரவண்டி களில் ஜேர்மனி, பிரான்சு, இங்கிலாந்து, ஸ்பெயின் நாடுகளுக்குள் புகுந்துள்ளனர். சில கிப்சிகள் பின்லாந்து, சுவீடன், நோர்வே வரை சென்றுள்ளனர்.

கிப்சிகளின் வாழ்க்கை முறை நாடோடி வாழ்க்கைக்கு உகந்ததாக அமைகின்றது. நத்தை தனது வீட்டை முதுகில் காவிச் செல்வதுபோல் கிப்சிகள் குதிரை வண்டிலில் தமது வாழ்க்கையை ஓட்டுகின்றனர். சக்கரம் பூட்டிய தமது வீட்டை றோமானி மொழியில் 'வார்ரூடோ' (VARDO) என்று அழைக்கின்றனர். இவர்களுடைய சமையற் பாத்திரங்கள் வண்டிலின் வெளிப்புறத்தில் தொங்கும், சமையல் எங்கு வண்டில் நிறுத்தப்படுகிறதோ அங்கு நடைபெறும். ஊதியத்திற்கு இவர்கள் குதிரை வர்த்தகம், பாத்திரங்கள் செப்பனிடுதல், நாட்டு வைத்தியம், மூலிகை வர்த்தகம் போன்றவற்றைச் செய்கின்றனர்.

தனியாருக்குச் சொந்தமான காடுகளுக்குள் புகுந்து முயல், புறா, காட்டுக்கோழி போன்றவற்றைத் திருடுவதில் கிப்சிகள் கைதேர்ந்தவர்கள். இவர்களுக்கு திருடர்கள் என்ற பெயர் உண்டு. தனியார் காடுகளின்



பாதுகாவலர்களின் கண்ணில் படாமல் திருடும் திறன் இவர்களுக்கு இருக்கிறது. இரண்டாம் உலகப் போரின் போது பிரிட்டிஷ் இராணுவம் கிப்சிகளை தனது விசேட படையணிகளில் சேர்த்துக்கொண்டது. ஜேர்மன் முன்னரங்க நிலைகளுக்குப் பின்னால் சென்று வேவு பார்ப்பதில் கிப்சிப் படைவீரர்கள் மிகச்சிறந்து விளங்கினர். ஸ்னைப்பர் தாக்குதலிலும் இவர்கள் சிறந்து விளங்கியதாகக் கூறப்படுகின்றது. ஜேர்மன் படையினர் காவலுக்குப் பயன்படுத்திய அல்சேஷன் நாய்களை இரகசிய சமிக்ஞைகள் மூலம் கிப்சிப் படை வீரர்கள் மிரட்டிப் பணியவைத்த தாகவும் தகவல் கிடைத்துள்ளது.

இங்கிலாந்தில் வாழும் கிப்சிகள் பெரும்பாலும் அந்த நாட்டு மக்களோடு கலக்கத்தொடங்கியுள்ளனர். இது தவிர்க்க முடியாத நிகழ்ச்சி. இங்கிலாந்தில் நடக்கும் குதிரைச் சந்தைகளில் இந்த இன மக்கள் வர்த்தகம் செய்வதை அவதானிக்கலாம். சில்லறை வர்த்தகம் செய்வதில் கிப்சிகள் பெரு மகிழ்ச்சி அடைகின்றனர். இது அவர்களுடைய பொதுப்பண்பு. ஐக்கிய இராச்சியத்தின் ஒரு பகுதியான வேல்ஸ் (Wales) நாட்டு கிப்சிகள் இசை வல்லுநர்களாகத் திகழ்கின்றனர். இந்தியாவின் நாட்டார் இலக்கியம், குறிப்பாக விலங்கினம் பாத்திரமேற்கும் கதைகள் கிப்சிகள் மூலம் ஜேர்மனி, இங்கிலாந்து, ஸ்கண்டினேவிய நாடுகளைச் சென்றடைந்ததாக ஆய்வாளர்கள் அறியத்தருகின்றனர். வயலின் போன்ற நரம்புக்கருவிகளை இசைப்பதில் அவர்கள் வல்லவர்கள். ஆரூடம், சோதிடம் போன்றவற்றிலும் கிப்சிகள் சிறந்தவர்கள்.

'என் ஆத்மாவின் கிப்சி' (GPSYIN MY SOUL) என்ற ஆய்வு நூலை எழுதிய வில்லியம் பீ. பிறான்ச் (WILLIAM B. BRANCH) கிப்சிகள் அமெரிக்காவிலும் குடியேறியுள்ளதாகத் தெரிவிக்கிறார். ஸ்கொட்லாந்தில் இருந்து வெளியேற்றப்பட்ட முதலாவது கிப்சி குடியேற்றவாசிகள் 1715ல் வேர்ஜீனியா மாநிலத்தில் கால்பதித்ததாக இந்த நூல் கூறுகிறது. கிப்சிகளின் அமெரிக்கா நோக்கிய மிகப்பெரிய அலை 1870 - 1890 காலப்பகுதியில் வீசியதாகவும் இந்த நூல் மூலம் அறிகிறோம். ஆர்தர் சிமன்ஸ் என்ற ஆங்கிலக் கவிஞர், 'மனித வாழ்வில் எஞ்சிய ஒரேயொரு இன்பம்' என்று கிப்சி வாழ்வைப் பற்றிக்கூறுகிறார். ஆனால் உண்மை அதுவல்ல.

கிப்சிகளுடைய நடன வடிவங்கள், இசைக் கருவிகள் கிழக்கு ஐரோப்பாவில் நாடு தழுவிய ரீதியில் கலந்துள்ளன. குருதியைச் சூடேற்றும் ஹங்கேரி வயிலின், வேக நடனம் என்பன கிப்சிகள் வழங்கியவையாகும். இன்று இந்த நாட்டில் (ஹங்கேரி) வாழும் கிப்சிகள் எண்ணிக்கை 600,000 தலைநகர் புடாபெஸ்னுக்கு அண்மையில் இந்திய அரசின் மானியத்தில் இயங்கும் மகாத்மா காந்தி நினைவுப் பள்ளி காணப்படுகின்றது. இங்கு கிப்சிகளுக்கு கல்வி புகட்டப்படுகின்றது.

செக் குடியரசு வாழ் கிப்சிகளின் எண்ணிக்கை 300,000 அதுபோல் சுலோவாக்கியாவில் 500,000 போலாந்து, சுலோவேனியா, லற்வியா ஆகியவற்றில் பல்லாயிரம் எண்ணிக்கையில் கிப்சிகள் வாழ்கின்றனர். இவர்கள் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதால் கிடைக்கும் பிரயாணத்தடை நீக்கத்தின் அனுகூலத்தை அனுபவிக்கப் போகிறார்கள். ஏற்கெனவே பிரச்சினைகள் ஆரம்பமாகிவிட்டன. மேற்கு ஐரோப்பிய நாடுகளின் தலைநகரங்களிலும், பெருந்தெருக்களிலும் நூற்றுக்கணக்கான கிப்சிகள் கைதுசெய்யப் பட்டுள்ளனர். பிச்சை எடுத்தல், சிறு திருட்டு, மனிதக்கடத்தல் போன்ற குற்றச் சாட்டுகள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வாழும் கிப்சிகள் ஓரளவு ஒழுங்கான வாழ்வு நடத்துகின்றனர். நிலையான வீடுகளில் அரசு வழங்கிய மனைகளில் வாழ்கின்றனர். கல்வியிலும் அதற்குகந்த தொழிலிலும் நாட்டம் காட்டுகின்றனர். ஐரோப்பாவின் மொத்த கிப்சி எண்ணிக்கையில் கால்ப்பங்கினர் மாத்திரம் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வாழ்கின்றனர். மிகுதி முக்கால் பங்கினர் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் வசிக்கின்றனர். ஒன்றியத்தில் இணைந்த பின் கிழக்கு நாட்டு கிப்சிகள் மேற்கு நோக்கி நகர்வார்கள். இதனால் மிகப்பெரிய சமூகப் பிரச்சினை தோன்றும் என்பதில் ஐயமில்லை. இதை எதிர்பார்த்து ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் அச்சமடைந்துள்ளனர்.

றோமா என்று அழைக்கப்படும் இந்த ஆதி இந்தியர்கள் ஐரோப்



பாவுக்கு வந்த நாட்தொட்டுப் பல இன்னல்களையும் உயிராபத்துக்களையும் எதிர்கொள்கின்றனர். இவர்களுக்காகக் குரல்கொடுக்கயாருமில்லை. யூதப் படுகொலையை நடத்திய ஆடொல்ப் ஹிற்லர் பெருமளவு கிப்சிகளையும் கொன்றொழித்தான். பெரும்பான்மை இனங்களால் கிப்சிகள் அடிமைகளாக பிடித்து வைக்கப்பட்டுள்ளனர். சில நாடுகளில் கட்டாய இனக்கலப்புச் செய்யப்பட்டு அழிந்து போயுள்ளனர். இன்று கிப்சிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் பின்வருமாறு பட்டியலிடலாம்: வறுமை, இனப்பாகுபாடு, கல்வி வசதி இன்மை, சமூக மேம்பாட்டுத் திட்டங்களில் இணைக்கப்படாமை, சுகாதார வசதிகள் வழங்கப்படாமை என்பனவாகும். கிப்சி இனத்திற்குப்

**அன்பரசு**

பலமான தலைமை இல்லை, அவர்களை யாரும் என்னவும் செய்யலாம் என்ற நிலை நெடுங்காலமாக நிலவுகின்றது.

ஐரோப்பிய ஆணையம் வெளியிட்ட தகவல்களின்படி மிகக் கூடுதலான றோமா மக்கள் ரூமேனியாவிலும், பல்கேரியாவிலும் வாழ்கின்றனர். ஹங்கேரி, போலாந்து, செக் குடியரசு போன்ற நாடுகளில் வாழும் கிப்சிகளிலும் பார்க்க ரூமேனியா, பல்கேரியா நாடுகளில் வாழ்வோர் எண்ணிக்கை மிகக் கூடுதலானது. ரூமேனியாவின் கிப்சிகள் எண்ணிக்கை 1.8 மில்லியன் தொட்டு 2.5 மில்லியன்வரை என்றும், பல்கேரியா வாழ் கிப்சிகள் எண்ணிக்கை 750,000 என்றும்ஐரோப்பிய ஆணையம் வெளியிட்ட தகவல் குறிப்பு தெரிவிக்கின்றது.

ரூமேனியா நாடு தனது சமூக மேம்பாட்டுத்திட்டங்களில் கிப்சிகளைக் கணக்கில் எடுப்பதில்லை. இங்கு வாழும் கிப்சிகள் மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்கின்றனர். ஆனால் மிகவும் வியப்பான சங்கதி, சில கிப்சி மேட்டுக் குடியினர். அரசர்களுக்கு நிகரான வாழ்வு நடத்துவதுதான். அரண்மனை போன்ற வீடுகளில், சொகுசு மோட்டார் கார்கள், எடுபிடிவேலையாட்களோடு இவர்கள் வாழ்கின்றனர். இவர்களுடைய விருந்து வைபவங்களில் உணவுக்காகப் பெரும் எண்ணிக்கையில் பன்றிகள் கொல்லப் படுகின்றன. இவர்களுக்காகப் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட ஆடைகள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. ஆனால் சாதாரண கிப்சிகள் வாழ்வு படுமோசமானது என்பதில் ஐயமில்லை.

எந்த வாழ்க்கைத் தரத்தில் இருந்தாலும் கிப்சிகள் யாவரும் தமது பெண்களை மிகச் சிறிய வயதிலேயே திருமணம் செய்துகொடுக்கின்றனர். சிறுமிகள் பருவமடைந்தவுடனேயே திருமணம் ஒரு சிறுவனுக்கு நிச்சயிக்கப்படுகிறது. 12 வயதுச்சிறுமிக்கும் 16 வயதுச்சிறுவனுக்கும் திருமணம் நடப்பது வழமை.தமது பெண்ணைப் பிற இனத்தவர்கள் அபகரித்து விடுவார்கள் என்ற அச்சம் காரணமாக இந்த வழக்கம் தோன்றியதாகக் கூறுகிறார்கள். சில பெண்கள் இவ் வகைத்திருமணத்திற்கு அண்மைக்காலமாக எதிர்ப்புத்தெரிவித்துள்ள தாகவும் தகவல் கிடைத்துள்ளன. இந்த விடயத்தில் ஐரோப்பிய ஒன்றியம் கவனம் எடுக்கப்போவதாக உறுதி வழங்கியுள்ளது.

இலங்கையில் 'அகிகுந்திகா' (AKIKUNTHIKA) என்ற கிப்சி இனம் வாழ்கின்றது. இவர்கள் சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் நாடோடி வாழ்க்கை நடத்துகின்றனர். இவர்கள் இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தில் இருந்து வந்திருக்கலாம் என்று பேராசிரியர் ஜே.பீ. திஸ்ச நாயக்கா கருத்துத்தெரிவிக்கிறார். எந்தக் காலப்பகுதியில் வந்தார்கள் என்று தெரியவில்லை. 'அகி' என்றால் நாகபாம்பு என்று அர்த்தம். இந்த மக்கள் பாம்பு பிடித்தல், ஆட்டுவித்தல் என்பனவோடும், குரங்கை வைத்துப் பிழைத்தல், கைரேகை பார்த்தல் போன்றவற்றைச் செய்கின்றனர். இவர்களிற்சிலர் இப்போதும் தெலுங்குமொழி பேசுகின்றனர். அரசு எடுத்த முயற்சி காரணமாக பலர் சிங்களம் பேசுகின்றனர்.

அகிகுந்திகா இனத்தவர் ஒரு இடத்தில் ஏழு நாட்களுக்கு மேல் தங்குவதில்லை என்ற காரணத்தால் அவர்கள் முழு அளவு சிங்களவர்களாக ஆக்குவதில் கடினம் தோன்றுவதாக மனிதவள ஆராய்ச்சியாளர் பேராசிரியர் எஸ்.ஹெற்றிகே தெரிவிக்கிறார். ஏற்கெனவே றொடியா, வேடர் போன்ற இனங்களை சிங்களவர்களாக ஆக்கும் முயற்சியில் வெற்றி கண்டுள்ளதாக ஹெற்றிகே செய்தி வெளியிட்டுள்ளார்.



# பாகிஸ்தானில் முசாரப்புக்கு ஆபத்து... ஆபத்து

எதிர்வரும் 04ஆம் திகதி பாகிஸ்தானில் சார்க் நாடுகளின் உச்சிமாநாடு நடை பெறவிருக்கும் சூழ் நிலையில் பாகிஸ்தானின் சனாதிபதி பர்வேஸ் முசாரப்பை குறிவைத்து இரண்டு தற்கொலைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இந்த நிலையில் சார்க் உச்சி மாநாடு பாகிஸ் தானில் நடைபெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது. ஆனால் பாகிஸ்தான் அரசு சார்க் மாநாட்டில் கலந்துகொள்ளவரும் உலக நாடுகளின் தலைவர்களின் பாதுகாப்பை அதிகரித்துள்ளதுடன் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் பெரிதும் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து பாகிஸ்தானில் எவ்வாறாயினும் சார்க் உச்சிமாநாட்டை நடத்திவிட தயாராகவுள்ளது.

பர்வேஸ் முசாரப்தான் சந்தித்திருக்கும் கொலை அச்சுறுத்தலுக்கும் மத்தியிலும் சார்க் மாநாட்டை நடத்திவிட முயல்வதற்கு பல்வேறு காரணங்கள் இல்லாமல் இல்லை.

இராணுவப் புரட்சி ஒன்றின் மூலம் பாகிஸ்தான் ஆட்சிபீடத்தை கைப்பற்றிய பர்வேஸ் முசாரப் தொடர்பாக உலக நாடுகளின் மத்தியில் அவரது ஆட்சி தொடர்பாக பல்வேறு விதமான கருத்து நிலைப்பாடுகள் இருக்கவே செய்கிறது.

அதோடு, பாகிஸ்தான் ஒரு அணு வல்லமையைக்கொண்ட நாடு என்ற வகையில் உலக நாடுகளும் ஒட்டியும் ,ஒட்டா ததுமான ஒரு உறவைப் பேணி வருகின்றன.

இந்த நிலையில் பர்வேஸ் முசாரப் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்னணியில் அல்குவைதா அமைப்பும், சில மத தீவிரவாதிக்ளும் இருப்பதாக பாகிஸ்தானிலிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு பிரதான காரணமாக இருப்பவை ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்காவின் போரின் போதும், ஈராக்கின் மீதான அமெரிக்காவின் போரின் போதும் அமெரிக்க ஆதரவு நிலைப் பாட்டை எடுத்தமையே என தெரிவிக்கப் படுகின்றது. அத்தோடு அண்மைக்காலமாக இந்திய - பாகிஸ்தான் உறவு நிலை தொடர்பாக முசாரப் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் இவருக்கு இத்தகைய ஒரு எதிர்ப்பு நிலையை தோற்றுவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் மேற்கு நாடுகளின் அங்கீகாரத்தை பெரிதும் வேண்டி நிற்கும் முசாரப் மேற்கூறிய காரணங்களை பெரிதுபடுத்தி தனக்குத் தேவையான ஆதரவைப் பெற்றுவிட முயலும் ஓர் உத்தியாக தனமீதான தற்கொலைத்தாக்குதலை பயன்படுத்திக் கொள்ளவும் முயற்சிக்கிறார்.

இந்த நிலையில் பாகிஸ்தானைப் பொறுத்த மட்டில் அந்த நாட்டில் சனநாயக ரீதியாக மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தலைவர்களுக்கு ஆட்சியைத் தொடர இராணுவப் போக்குக்கொண்ட படைத் தரப்பு என்றும் அனுமதித்ததில்லை.

அங்கு அரசியல் தலைமைகளின் கீழ் படைத்தரப்பு என்பதை விட, படைத் தரப்பின் கீழ் அரசியல் தலைமைகள் செயற்படுகின்றன என்பதே கடந்த கால வரலாறுகளாக உள்ளன.

படைத்தரப்பின் அதிக மேலாண்மைக்குள் செயற்படும் பாகிஸ்தானில் இதுவரை இராணுவ சதிப்புரட்சி மூலமாகவோ இராணுவ அதிரடி மூலமோ ஆட்சியை முன்னாள் பாகிஸ்தான் பிரதமராக இருந்த பெனாசிர் பூட்டோவின் தந்தையான பூட்டோவிடமிருந்து இராணுவத் தளபதியாக இருந்த சியா உல்ஹக்,பின்னர் இன்றையசனாதிபதியாக இருக்கும் பர்வேஸ் முசாரப் முன்னாள் பிரதமராக இருந்த நவாப் செரிப்பிடமிருந்தும் ஆட்சி பீடங்கள் இராணுவ மேலாண்மை மூலம் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஆனால் பாகிஸ்தானைப் பொறுத்தவரை இராணுவ ஆட்சியாளர்கள் தொடர்ந்து ஆட்சியில் நீடிக்கவும் இல்லை அவர்கள் உயிருடன் தப்பிப் பிழைக்கவும் இல்லை.

இதன் தொடர்ச்சிதான் இப்போது பர்வேஸ் முசாரப் மீதான தாக்குதல்களும் உணர்த்துகின்றன.

---

# லிபியாவின் புதிய அணுகுமுறை

அரபுலகத் தேசியத்தை உருவாக்க முனைந்த தலைமைகளில் எஞ்சியிருக்கும் லிபியாவின் தலைவரான கேணல் கடாபியும், தனது அரசில் ஏராளமான கொள்கை மாற்றங்களை மேற்கொள்ள அதிரடியாக விரைந்துள்ளார்.

இதுவரை லிபியா லொக்கர்பீ விமான குண்டுத் தாக்குதல் சர்ச்சை தொடர்பாக உலக அரங்கில் பேசப் பட்டுவந்தது.

ஆனால் லொக்கபீ விமானத் தாக்குதலிற்கு லிபியா பொறுப்பேற்றதன் பின்னர் அந்த தாக்குதலில் பலியானவர்களிற்கு இழப்பீடுகள் வழங்க சம்மதித்ததையடுத்து லிபியா மீதான அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளின் கெடுபிடிகளும் சற்றுத் தணிந்தன.

லிபியாவின் வசம் உள்ளதாக கருதப்பட்ட அணு மற்றும் இரசாயன ஆயுத விவகாரம் முடிவிற்கு வரவில்லை. இந்த நிலையில் அரபு உலக கதாநாயகனாக இருந்த சதாம் குசைன் மற்றும் ஈராக்கின் மீது அமெரிக்க தலைமையிலான கூட்டுத் தாக்குதலின் பின்னரான விளைவுகளின் அடிப்படையிலோ அன்றி அமெரிக்காவின் பயங்கரவாதத்திற்கெதிரான அமெரிக்க விஸ்தரிப்பு போன்றவற்றை எதிர்கொள்ள லிபியா தயாராகிவிட்டது போலத்தெரிகிறது.

இதன் விளைவுதான் கேணல் கடாபி லிபியாவின் அணு உலை மற்றும் இரசாயன ஆயுத உற்பத்தி மையங்களை ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுதப் பரிசோதகர்களின் பரிசோதனைக்கு அனுமதிக்கப் போவதாக அறிவித்துள்ளது.

லிபியாவின் இந்த அறிவித்தலையடுத்து அமெரிக்கா மற்றும் பிரிட்டன் நாடுகள் அதனை வரவேற்றுள்ளதுடன் லிபியாவை பின்பற்றி ஏனைய நாடுகளும் அதற்கு தயாராக வேண்டுமென கோரியுள்ளன.

லிபியா இந்த அறிவிப்பு மூலம் மேற்காசியாவில் அமெரிக்காவின் செல்லப் பிள்ளையாக இருக்கும் இஸ்ரேலை நெருக்கடிக்குள் தள்ளும் ஒரு முயற்சியையும் அதேவேளை தன்னையும் தனது நாட்டையும் பாதுகாக்கும் ஓர் உத்தியையும் கேணல் கடாபி மேற்கொள்ளத் தொடங்கியுள்ளார்.

இதன் இலக்காக கடாபி எதனைகுறிவைக்கிறாரோ அதனைஅவர் அடைந்தாகவேண்டும் மாறாக வழி தவறுமாயின் கடாபி இலக்கும் சிறு துவாரத்தின் ஊடாக லிபியாவுக்குள் நுழையும் அமெரிக்கா மற்றும் அதன் நேச நாடுகள் லிபியாவை கபளிகரம செய்வதை தடுக்க முடியாமற்போகும்.

அதோடு லிபியா எதிர்பார்ப்பது போல இஸ்ரேல் ஆயுத பரிசோதனைக்கும் தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும் தயாராகும்என்பது போலத் தெரியவில்லை.

ஏனெனில், இஸ்ரேல் தனக்கு முன்னால் இருக்கும் ஆபத்து என்ற பெயரில் ஒரு பட்டியலை இட்டிருக்கிறது



அதோடு இஸ்ரேலுக்கு அமெரிக்கா வழங்கும் அனுசரணையும் அதனையெடுக்கக்கூடும்.

இதில் இஸ்ரேல் தப்பிப் பிழைத்து லிபியா எதிர்பார்க்கும் இலக்கை எட்டாது விட்டால் லிபியாவின் இந்த நட்பு சக்தியாக மாறும் நிலை அதற்கு ஆபத்தாக மாறினாலும் மாறிவிடும்.

ஆனால் லிபியா ஈராக்கின் நிலையை கவனித்து லிபியாவை காப்பாற்றவே முயல்கிறது.

---



# ஈரானின் அவலம்

ஈரானின் பாம் நகரத்தில் நடந்த பூமி அதிர்ச்சியில் அந்த நகரத்தின் பெரும் பாதி அழிந்துபோய்விட்டது.

பண்டைய பெருமைகளை சுமந்த இந்த நகரம் ஒரு நாளிற்குள் தனது சோபை யாவற்றையும் இழந்து போனதோடு அந்த நகர மக்களில் சுமார் எழுபதினாயிரத்திற்கும் அதிகமானோரை பலிகொண்டுவிட்டது.

அந்த நகரத்தின்சுமார் எழுபது வீதமானவை முற்றாக தரைமட்டமாகி விட்டதுடன், இந்த நகரத்தில் வசித்த பல ஆயிரக்கணக்கான குடும்பங்களில் எவருமே தப்பிப் பிழைக்காமலும் ஒரு குடும்பத்தில் ஒரு சிலரைத் தவிர ஏனையவர்கள் அனேகமாக பலியாகி விட்ட அவலமும் நேர்ந்துள்ளது.

இயற்கை அன்னையின் இந்த கோரத் தாண்டவத்தில் அப்பாவி ஈரானிய மக்கள் அநாதைகளாகி, தமது வீடு வாசல்களை இழந்து நிர்க்கதியாக உள்ளனர்.

இதனை உணர்ந்து கொண்ட அதிகமான உலகநாடுகள் தங்கள் நாடுகளிலிருந்து பெருந்தொகையான நிவாரணப் பொருட்களையும் மீட்புப்பணிக்காக பணியாளர்களையும் அனுப்பிவைத்த வண்ணமுள்ளனர்.

இந்த அனர்த்தம் நடைபெற்று நாட்கள் நகர்வதால் சிதைந்துபோன மண் குவியல்களுக்குள் அகப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான மக்களின் உடலங்களிலிருந்து தோன்றும் கிருமிகளால் பல கொள்ளை நோய்கள் ஏற்படக் கூடிய அபாயத்தை அந்த நகரம் எதிர் நோக்க வேண்டியுள்ளது.

அத்தோடு ஈரானிய சனாதிபதி முகமட் கதாமி ஈரானிய அரசால் இந்த நகரத்தை கட்டி எழுப்பவே முடியாது என கூறும் அளவுக்கு நிலைமை மோசமாகியுள்ளது.

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் அந்த அரசிற்கும் உதவியளிக்க முன் வந்த நாடுகளில் இஸ்ரேல் அரசும் ஒன்று.

அரபுலக மக்களின் நிரந்தர பகைவனாக இருக்கும் இஸ்ரேல் மனிதாபிமான உதவிகளை வழங்க முன்வந்த போது ஈரானிய அரசு அதனை ஏற்க உடனடியாக மறுத்து விட்டதை கவனத்தில் கொள்ளலாம்.

இஸ்ரேல் பலஸ்தீன மக்களை ஒவ்வொரு நாளும் கொண்று அழித்துக் கொண்டு ஈரானிற்கு மனிதாபிமான உதவிகளை வழங்கி தன்னை ஒரு இரட்சகராக காட்ட முயன்ற போதும் ஈரான் தனதும் அரபு மக்களினதும் தன்மானத்தினை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை.

**வேழினி**

# தொடர்கதை



சிவம் கிளாலிக் கடல் கடந்து வீட்டுக்கு வந்து சேர நடுச்சாமம் பன்னிரண்டு மணியாகிவிட்டது. முதலாவது படகில் வந்தபடியால்தான் இந்த நேரத்துக்காவது வரமுடிந்தது. உடம்பெல்லாம் விண்விண்ணென்று வலித்தது. எவ்வளவு அலுப்பைத் தரும் பிரயாணம்.... நான்கு நாட்கள் ஊரில் நின்ற சந்தோஷத்தில் அந்த அலுப்பைப் பொருட்படுத்தத் தோன்றவில்லை.

அந்த நடுஇரவுக்குளிரையும் பொருட்படுத்தாமல் உப்புக் காற்றின் பிசுபிசுப்பைப் போக்க நன்றாய் குளித்துவிட்டு சுடச்சுட தேனீர் குடித்துவிட்டு அப்படியே படுத்துவிட்டார்.

ஊரிலிருந்து புறப்படும்போது அன்னம் கண்ணீர் தழும்ப நின்ற கோலம் நெஞ்சில் பாரமாய் கனத்துக் கொண்டிருந்தது. கொண்டு போயிருந்த காசையும் அவளிடம் கொடுத்து -

“நீ கவலைப்படாதயடி. செந்திலுக்கு கலியாணம் எண்டா நானும் காசு தாறன். எங்கயாவது பார் நான் வரட்டே” என்றபோது தொண்டை அடைத்துக்கொண்டது.

“இந்த பாதையால நீயும் அடிக்கடி வரஏலாது. இனி எப்ப எப்ப காண முடியுமோ..... அண்ணையின்ர செத்த வீட்டுக்குப் பிறகு நானும் அந்தப் பக்கம் வரேலை. எங்கயாவது சுகமாய் இருந்தால் சரி.”

சேலைத்தலைப்பால் கண்களைத் துடைத்தக்கொண்டு தலையசைத்தாள். பெரிய பாரங்கல்லைத் தூக்கி நெஞ்சில் வைத்துப்போன்ற பாரத்துடன்தான் திரும்பினார். கார்த்திகேசுவைப் பார்த்து காசையும் வாங்கிக்கொண்டு அவரும் நடராசுவுமாக கடற்கரைக்கு வந்தார்கள்.

கடற்கரையில் தியாகராசா விதானையாரைக் கண்டதும் “நான் இவரோட போறன், நீ வீணாய் அலையாதை” என்று நடராசுவைத் திருப்பி அனுப்பிவிட்டார். பயங்கரமான அந்த பயணத்தை முடித்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்ததே போதும், இன்னொரு தடவை இந்த மாதிரி ஒரு பிரயாணம் செய்யமுடியும் என்று தோன்றவில்லை. அலுப்போடு கண்களை மூடிக்கொண்டார்.

மறுநாள் பகல் பரந்தன் சந்திக்குப் போனபோது சூழலில் தென்பட்ட பரபரப்பு மனதை உறுத்தியது. “ராத்திரி கிளாலிக் கடலில வந்த படகுகளை நேவி சுத்திவளைச்சு சனங்களை சுட்டும் வெட்டியும் போட்டுதாம். காயப்பட்டு தப்பி வந்த சனங்களை கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு கொண்டு வருகினமாம்.” அவருக்கு திக்கென்று மனம் அதிர்ந்தது.

“அண்ணை நீங்களும் ராத்திரிதானே வந்தனீங்கள் மயிரிழையில தப்பி வந்திட்டீங்கள்”

சந்தையில் நின்ற சிதம்பரி அவரைக் கண்டதும் சென்னார்.

“தியாகராசா விதானையாரோட முதல்படகில் இடம் பிடிச்சு வந்ததால தப்பமுடிஞ்சுது. கடற்கரையில் எத்தனை சனம் நிண்டதுகள். அதில ஆரார் அம்பிட்டுதுகளோ.”

மாலை வீட்டுக்கு வந்த கதிரவன் மாஸ்டரும் யோகனும் மாறி மாறி சொன்னார்கள்.

“சனங்கள் பதறியடிச்சுக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடுதுகள். கரையில ஒதுங்கிற பிரேதங்களை கொண்டு வருகினமாம். பெட்ரோல் குண்டு போட்டு படகோட சனம் எரிஞ்சதாம். கண்ணால கண்டதுகள் சொல்லிச் சொல்லி குளறுதுகளாம்.”

“நேவிக்காரங்கள் சுத்திவளைச்சு கொஞ்சபடகுகளை தங்களோட கொண்டு போயிட்டாங்களாம். அந்த சனத்துக்கு என்ன நடந்ததோ தெரியேலை.”

“முன்னூறு சனத்துக்கு மேல அம்பிட்டுதுகள் எண்டு கதைக்கினம்” ஒவ்வொரு கதைகளையும் கேட்கக் கேட்க நெஞ்சுக்குள் எதுவோ செய்

# தாமரைச்செல்வியின் பச்சைவயல் கனவு

தது. மறுநாளும் கடற்கரையில் ஒதுங்கிய உடல்களை ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்தார்கள். யாரோ எவரோ என்று அடையாளம் பார்க்க சனம் அலைமோதியது.

“சூடுபட்டு காயப்பட்ட ஆட்களை வாளால வெட்டியிருக்கிறாங்கள். சூட்டுக் காயத்தோட வெட்டுக் காயங்களும் உடலில கிடக்கு. அதில எனக்கு தெரிஞ்ச வட்டக்கச்சி ஆளும் இருக்கு. மனிசி பிள்ளையள் கத்தி அழ பார்க்க ஏலாம கிடக்கு. என்ன கொடுமை இது”

சிதம்பரி குரல் நடுங்க சொன்னார்.

“ஒரு படகு சனங்கள் காயத்தோட தப்பி வந்துட்டுதுகள். அதில நாலைஞ்சு பேருக்கு புத்தி கலங்கியிட்டுது. வெட்ட வாறாங்கள் எண்டு கத்திக்கொண்டு ஆஸ்பத்திரி முழுக்க ஓடித்திரியுதுகள், அந்த பரிதாபத்தை கண்கொண்டு பார்க்க ஏலாமக்கிடக்கு. ஊரெங்கும் இதே கதைதான்.

பொழுது சாயும் நேரம் முருகானந்தன் கலக்கத்தோடு வந்து சொன்னான் “கரையில ஒதுங்கிக் கிடந்து எடுத்து வந்ததில எங்கட ஏ.டீயின்ர பொடியும் இருக்கு, டிப்பாட்மெண்ட் ஆட்கள் முழுப்பேரும் ஆஸ்பத்திரியிலதான் நிற்கினம். தண்ணியில் கிடந்து உடம்பு ஊதிப்போய் இருக்கு.”

“படிச்சவனோ படிக்காதவனோ ஏழையோ பணக்காரனோ தமிழனெண்டா இந்த வெட்டும் குத்தும் தான்.”

“இப்பவும் கரையில ஒதுங்கிற பிரேதங்களை கொண்டு வருகினம். கனபேரை அடையாளம் தெரியுதில்லை.”

கடவுளே... ஆமிசுத்தி வளைச்சு சுட என்ன பாடுபட்டிருக்குதுகள்.

கொஞ்சம் பிந்தியிருந்தால் நான் கூட அம்பிட்டிருப்பன்.” அவருக்கு நினைக்கவே நெஞ்சு நடுங்கியது.

“கடற்கரையில மனுவேற்பிள்ளையையும் கண்டு கதைச்சனான். எங்களுக்கு வந்து விறகு கொத்தித்தாற ஆறுமுகமும் அவரோட நிண்டது. தப்பி இங்கால வந்திட்டுதுகளோ தெரியாது.”

“ஆறுமுகம் பாவம் பிள்ளைக் குட்டிக்காரன்” பராசத்தி கவலையோடு சொன்னாள்.

“அண்ணை! மயிலற்றை கடைசிப் பெடியன்ர பிரேதமும் வந்திருக்காம். திருவையாறு சோதிலிங்கத்தின்ற வீட்டிலயும் செத்த வீடாம்.”

தருமலிங்கமும் சதாசிவமும் சொல்லி விட்டுப் போனார்கள்.

கிளிநொச்சியில் அங்கும் இங்குமாய் அழுகுரல்கள் வானை முட்டியது. ஒரு வாரமாய் கிளாலிக் கடலில் படகுகள் ஓடவில்லை. வட பகுதிக்கு செல்ல என்று வந்தவர்கள் எல்லாம் கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன்மண்டபம், தேவாலயம் என்று நிறைந்து போய் நின்றார்கள். ஒரு வாரத்தின் பின் படகுகள் ஓடத் தொடங்கின.

“வெட்டினா என்ன? குத்தினா என்ன? சனம் போய் வரவேண்டித் தானே இருக்கு. நானும் நாலை க்கு ஒருக்கா மீசாலைக்கு போய் ‘வர வேணும், பரமு சொன்னான்.

அன்று மாலை. வீட்டுக்கு வந்த மரியக்கண்டுவின் முகம் சோர்ந்து போய் இருந்தது.

“நான் நம்ம ஊருக்கு போகப் போறன் முதலாளி. வாறகிழமை கூட்டிப் போக மகன் இங்கிட்டு வர்றான்,”

“என்ன மரியக்கண்டு திடீரெண்டு...”

“இனிமே இங்க சீவிக்க முடியாதுங்க. ரோட்டில வெளிக்கிடவே பயம்மாய் இருக்கு. கிளாலிக் கடலில செத்த சனங்களை ஆஸ்பத்திரியில போய்ப் பார்த்தேனுங்க. எனக்கு உடம்பெல்லாம் ஆடிப்போச்சு. வயசான காலத்தில போய் பிள்ளைங்களோட இருந்திடுவோம்.”

நன்றாகத் தளர்ந்து, போய் சுருக்கம் விழுந்த முகத்துடன் இருந்த மரியக்கண்டுவை பார்க்க கவலையாக இருந்தது.

“அதுதான் நல்லது மரியக்கண்டு. இனியாவது உன்ர குடும்பத்தோடு போய் இரு”

மரியக்கண்டு சொன்னது போலவே அடுத்த வாரம் கூட்டிப் போக மகன் வந்துவிட்டான். அன்று காலை மரியக்கண்டு புறப்படுவதாக இருந்ததால் அவர் பண்டாகமத்துக்கு போனார். ஒரு உரப்பைக்குள் அடக்கப்பட்ட உடைமைகளுடன் மரியக்கண்டு புறப்பட ஆயத்தமாய் நின்றான். பண்டாகமத்து விட்டு முற்றத்து மண்ணைதொட்டு முகத்தில் ஒற்றிக்கொண்டான். கண்களில் இருந்து பொங்கி வந்த கண்ணீரை துடைத்துக்கொண்டே

“போயிற்று வாறன் முதலாளி” என்றான்.

தொண்டைக்குள் எதுவோ சிக்கிக் கொண்டது போன்ற உணர்வில் சிவம் நின்றார். கூலிக்கு வேலை செய்பவன் என்ற நிலைக்கும் அப்பால் இந்த மரியக்கண்டுவுடன் ஏதோ ஒரு பிணைப்பு இருக்கிறது. கிட்டத்தட்ட 50 வருடங்களுக்கு மேலாக உள்ள பிணைப்பு. மரியக்கண்டு போன பிறகு ஒரு வெறுமையான உணர்வு நூலிழையளவு அவர் மனதில் தங்கிக் கொண்டது.

அந்த தடவை நெல் விளைச்சல் மிகவும் குறைந்துவிட்டது. அடுத்த வருடமும் நெற்செய்கை சரிவரவில்லை. அத்தோடு நாட்டு நிலைமைகளும் மோசமாகிக் கொண்டே வந்தது. கிராமத்துக்குள் எறிகணைகள் வந்து விழுவதினால் வீடுகளில் இருக்கமுடியாத நிலைமை ஏற்பட்டு விடுமோ என்ற கலக்கம் தோன்றியது. இனிமேல் பெரிய அளவில் வயல் செய்ய முடியாது என்றே மனதுக் குப்பட்டது. உழவியந்திரத்தை தியாகராசா விதானையாருக்கு விற்றுவிட்டார். ஐந்தாம் வாய்க்கால் காணிகளை குத்தகைக்கு கொடுத்து விட்டு குமரபுரக்காணி மூன்று ஏக்கரை மட்டுமே இந்தத் தடவை விதைத்தார். இந்தக் காணியில் நெல் விதைப்பதிலும் ஆபத்து இருப்பது அவருக்கு தெரியும். ஆனையிறவிலிருந்து இராணுவம் வந்தால் இதையும் கைவிட்டு ஓட வேண்டியிருக்கும். ஆனால் ஒரு காணியையாவது விதைக்காமல் விட அவருக்கு மனம்வர வில்லை.

தொண்ணூற்றி நான்காம் ஆண்டு இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் பெரும் ஆரவாரத்தோடு தேர்தல் நடந்து முடிந்தது. ஆட்சி மாற்றம் மனங்களுக்குள் ஒருவித எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது.அதற்கேற்ப பத்திரிகைகளில் வரும் செய்திகள் பெரும் ஆச்சரியத்தையே தந்தன.

“சமாதானம் வரவேணும், அதுக்காகவே பாடுபடுவன் எண்டு சொல்லுறா. உண்மையாய் நடக்குமா.... சமாதானம் வருமா....”

எல்லோர் மனங்களிலும் இதேகேள்வி.

“யாழ்ப்பாணத்துக்கு பேச்சு வார்த்தைக்காக ஹெலிஹொப்டரில வந்து இறங்குகினம். ஏதும் சரி வருமோ”

வாறதும் போறதுமாய்த்தானே இருக்கினம். தீர்மானம் எடுக்கிற அதிகாரம் உள்ளவை ஒருதரும் வரேலையாம். சும்மா அதிகாரிகள் குருமார் வந்து என்ன செய்யிறது.”

“ஏதோ சரிவந்திடவேணும். இனியும் எங்கதான் ஓடுறதும், அலையிறதும். நொந்து போன மனங்களின் அங்கலாய்ப்புகள்........

“பதவிக்கு வாறதுக்காக வயலை சும்மா சொல்லுறதுதான் உது ஒண்டும் சரிவரும் போலத்தெரியேல்ல”

சிதம்பரியின்ர வாய்க்கு சக்கரைதான் போடவேணும். ஏப்ரலில் மறுபடி போர்மேகம் சூழ்ந்தது. கிழக்கில் தொடங்கியது வடபகுதியில் முனைப்புப்பெற்றது. வடக்கின் வெடியோசையின் அதிர்வுகள் மெலிதாய் இங்கும் கேட்டன.

வானத்தில் தலைக்கு மேலாக குண்டுவீச்சு விமானங்கள் உறுமிக்கொண்டு பறந்து திரிந்தன. போகின்ற போக்கில் அவை குண்டுகளைக் கொட்டிவிட்டு கடந்து மறைந்தன. கரடிப்போக்குச் சந்தியில் “சுப்பர் சொனிக்” போட்ட குண்டு வெடித்ததில் மனுவேற்பிள்ளை அந்த இடத்திலேயே பலியானதாய் அறிந்து சிவம் அவர்கள் வீட்டுக்குப் போனார்.

கட்டி அணைத்து அழக்கூட உடல் மிஞ்சவில்லை. கூட்டி அள்ளிய தசைகளை பெட்டிக்குள் வைத்து அடக்கம் செய்தார்கள். கிளாலிக்கடலின் கொலையில் இருந்து தப்பிய மனிதர் நடு வீதியில் சிதறிச்சாக தலையில் எழுதியிருந்திருக்கிறது. கடந்துபோன பொழுதுகள் மட்டுமே உயிருக்கு உத்தரவாதமானவை.

குண்டு விழுந்த இடம் பெரிய கிணறு போல இருந்ததைப் பார்க்க தலை விறைத்தது. செய்திகளைக் கேட்கும் போதும் படிக்கும் போதும் நிலைமைகளின் தீவிரம் மனதில் உறைத்தது.

வடக்கில் சூரியக்கதிர் என்ற பெயரில் பாரிய இராணுவ நடவடிக்கையை இராணுவம் தொடங்கியிருப்பதாக பத்திரிகைகளின் முன் பக்கத்தில் செய்திகள் வந்திருந்தன. சத்தங்களின் அதிர்வுகளும் அதிகரித்தன

“கடவுளே.....என்ன அநியாயம். அவள் பாவி சொன்னதென்ன, செய்யிறதென்ன.....”

“உது தெரிஞ்ச விசயம்தானே, பலாலியிலயிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வாறாங்களாம். ஒரே ஷெல்லடியாம். புக்காராவும், சுப்பர் சொனிக்கும் மேலயிருந்து குண்டுகளை போட்டுத்தள்ளுதாம், சனம் பாவம் என்ன செய்யும்.....”

யாரை யார் சந்தித்தாலும் இதேதான் கதையாக இருந்தது.

அவருக்கு நேரம் தவறாமல் செய்திகள் கேட்பதும் பத்திரிகைப் பார்ப்பதும்தான் முக்கிய வேலை என்றாகிவிட்டது.

பத்திரிகைகளும் வானொலியும் மனதை அசைக்கும் செய்திகளையே தந்தன.

கந்தசஷ்டி விரதத்தை முடித்துக் கொண்ட நாள் அது.

வலிகாம மக்கள் ஒட்டு மொத்தமாய் வீடு வாசல்களை விட்டு வெளியேறி நாவற்குழி பாலம் கடந்து தென்மராட்சிக்கு வந்து கொண்டிருக்கின்றார்களாம்.

மழையும், குளிரும், வெடிகளின் அதிர்வும் சூழ்ந்திருந்த அந்தப் பொழுதில் ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் எப்படி அந்த ஒற்றைப் பாலம் கடந்து வெளியேறி வந்தார்கள் என்ற பிரமிப்பும் கவலையும் அவர் மனதில் ஒருசேர எழுந்தது.



அத்தியாயம் - 09



# காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் - ம
# தேர்த்திருவிழா சிறப்பிதழ்

## ஈழத்துச் சிதம்பரத்தில் பஞ்ச ரத பவனி

இலங்கைத் திருநாட்டின் பழம் பெருந் தீவுகளில் ஒன்றான காரைநகர் யாழ் குடா நாட்டின் வட மேற்குத்திசையில் இருபது கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. இங்கு காரைச் செடிகள் அதிகமாக இருந்தமையால் காரைதீவு என்றும், காலப்போக்கில் காரைதீவு யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் இணைப்புப் பாலம் மூலம் ஒன்று சேர்க்கப்பட்டு காரைநகர் என பெயர் பெற்று விளங்குகின்றது.

தமிழகத்தின் இதயக் கனியாகத் திகழும் தில்லைச் சிதம்பரம்போல் மூர்த்தி, தலம், தீர்த்தப் பெருமையுடன் முதன்மையும், கருணையும் பல சிறப்புக்களும் கொண்டு அடியார்களால் "ஈழத்துச் சிதம்பரம்" என்று அழைக்கப்படும் காரைநகர் திண்ணபுரப்பதியில் அமைந்துள்ளது சிவன் கோவிலாகும். கோவில் அமைப்பு முறையிலும், திருவிழாக்கள் உற்சவங்கள், மார்கழித் திருவாதிரை விழா மற்றும் சிதம்பரத்தில் நிகழும் கிரியை மரபுகளைப் பின்பற்றும் பாரம்பரிய சிறப்புப்பெற்றது இத்திருத்தலமாகும். இவ்வகையில் இத்தலத்திற்கு ஈழத்துச் சிதம்பரம் என்னும் சிறப்புப் பெயர் உரியதாயிற்று. இப் பழம் பெரும் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள மூலவர் அருள்மிகு சுந்தரேசுவரப் பெருமான்-அம்பிகை அருள் மிகு சௌந்தராம்பிகை என்றும் திருநாமமிட்டு வாழ்த்தி வணங்கப் பெறுகின்றனர்.

இத்தலத்தில் நடைபெறும் மார்கழித் திருவாதிரை விழா தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். தில்லையம்பதியில் நிகழும் ஐதீகங்களை யொத்த வகையில் நடராசப் பெருமானுக்கும், சிவகாமியம்பாளுக்கும் உரிய முறையில் அபிஷேக ஆராதனைகள் நிகழ்வது கண்கொள்ளாக்காட்சியாகும். ஆதிரை அபிஷேகத்தையும், அதன் மேல் சூரியோதயத்தில் நடைபெறும் ஆருத்திரா தரிசனத்தையும் கண்டு களிக்க ஈழத்தின் நாற்றிசைகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மெய்யன்பர்கள் இங்கு வருகை தருவார்கள். தமிழக தில்லைச் சிதம்பரம் சென்று ஆருத்திரா தரிசனம் காணமுடியாத சிவனடியார்களுக்கு இது பெரிய வரப்பிரசாதமாகும்.



கடந்த 29-12-2003 திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய ஆதிரைவிழாவில் ஒவ்வொரு நாளும் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று மணிவாசகப் பெருமானை கூத்தபிரான் சந்நிதிக்கு எழுந்தருளச் செய்து திருவெம்பாவைப் பாடல்களைப் பாடுபவர் மணிவாசகப் பெருமானாகப் போற்றப்பட்டு அவருக்கு கோயிற்பட்டு, தலைப் பாகையாக அணிவித்து, கேட்போர் உள்ளங்களை உறையவைக்கும் வண்ணமாக திருவெம்பாவைப் பாடல்கள் ஓதப்பட்டு- தொடர்ந்து வசந்த மண்டபப் பூசைகள் நடைபெற்று சுந்தரேசப் பெருமான் அம்பாள் சகிதம் பிள்ளையார், சுப்பிரமணியர் ஆகியோருடன் இரண்டாம் வீதி உலா வந்து அடியவர்களுக்கு அருட்காட்சி வழங்குவர்

எதிர்வரும் 06-01-2004 செவ்வாய்க்கிழமை ஒன்பதாம் திருவிழாவாகிய தேர்த்திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது.

அன்றையதினம் நடராஜப் பெருமான் பலவகை பூக்களினாலும் திருவாபரணங்களினாலும் அலங்கரிக்கப்பட்டு ஆனந்தத் தாண்டவம் ஆடிக்கொண்டு சிவகாமசுந்தரி அம்பாளோடு உள்வீதியில் பக்தர்கள் புடைசூழ-தவில் நாதஸ்வர மேதைகள் இணைந்து இசை மழை பொழிய உலாவரும் காட்சியைக் கண்டு மெய்யடியார்கள் உளமுருகி வழிபடுவார்கள். பின்னர் நடராஜப் பெருமானும் ஏனைய பரிவார மூர்த்திகளும் தேர்களில் ஆரோகணித்து மூன்றாம் வீதியில் பஞ்சரத பவனி வரும் காட்சி பக்திமயமான அற்புத ஆனந்தக் காட்சியாக இருக்கும். மறுநாள் புதன்கிழமை அதிகாலை 2.00மணி தொடக்கம் ஆருத்திரா அபிஷேகமும், 6.00 மணிக்கு ஆருத்திரா தரிசனமும் நடைபெறும். மாலை 3.00 மணிக்கு திருவூடல் உற்சவமும், தொடர்ந்து தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளது.

இவ் வருட திருவாதிரை உற்சவத்திற்கான விரிவான ஏற்பாடுகளை ஆலய ஆதீன கர்த்தாக்கள் செய்துள்ளனர். உற்சவத்தினையொட்டி பத்துத் தினங்களும் மாணிக்க வாசகர் மடாலய அன்னதான சபையிலும்-அண்மையில் இந்து கலாச்சார அமைச்சினால் கட்டப்பட்டு திறந்துவைக்கப்பட்ட ஈழத்துச் சிதம்பர வைச அறப்பணி நிலையத்திலும் அன்னதானம் வழங்கப்படவுள்ளது. உற்சவத்தின் இறுதி மூன்று தினங்களும் மணிவாசகர் சபையினரால் மணிவாசகர் விழாவும் நடைபெறவுள்ளது.

*திருவெம்பாவை திருவாதிரைவிழாக்காண் போர்வாழி*
*பூசனை செய்வோர் வாழி! பூசை காண் அடியார் வாழி!*
*திண்ணபுரத்து நின்றாடிடும் ஈழத்துச் சிதம்பரேசன்*
*திருத்தாள் வாழிய வாழியவே!*

**இந்து சமய விவகார அலு**
**மாண்புமிகு தியாகராஜா ம**
**விடுக்கும் வாழ்த்துச்செய்தி**

சிவபூமியாகிய இலங்கை
ஞானபூமியாகத் திகழ்கின்றது.
சைவமும் தமிழும் சிறப்புற்று
காரைநகரப்பதி முதன்மை பெ
கோயில் என்று அழைக்கப்படும்
நமது நாயன்மார்கள் எல்லாம்
தலமாகவும் சேக்கிழார் பெரு
அரங்கேற்றிய தலமாகவும்
காணப்படுகின்றது. தமிழ் நாட்டுச்
கூறும் வகையில் காரைநகரில்
சிவஸ்தலமே ஈழத்துச் சிதம்ப
காரைநகர்ச் சிவன் கோயிலாகும்.

இத்திருத்தலம் இருக்கு
காணப்படுகிறது. மார்கழி மாதத்
திருவாசக ஒலி கேட்கும். திரு
விழா மிகச் சிறப்பாக பல்லா
வருகிறது. அண்மையிலே திரு
சந்நிதானம் சீர்வளர் சிவப்பிர
தலத்திற்கு வருகை தந்து எ
கப்பட்ட அறப்பணி நிலைய
வைத்தார்.

இத்திருத்தலத்தைப்
சிவாச்சாரியார் பரம்பரையில் வ
குருக்கள் தலைமையில் இயங்கு
கோயிற் கிரியைகளை சிறப்பா
இங்கு திருவாதிரை ஆருத்திரா த
நாட்டின் சிதம்பரத்தில் நடைபெற
காலமாக நடைபெற்று வருகின்ற
பல பிரதேசங்களில் இருந்தும்
காண்பதற்காக பெருந்தொகையா
தேரிலே பவனி வந்து அருள்
பரேஸ்வரப் பெருமானின் திருவரு
வேண்டும் என்றும் நாட்டில் சா
வேண்டும் என்றும் ஆடவல்லான
பாதார விந்தங்களைப் பிரார்த்தித்

தி.மகேஸ்வரன்.,பா.உ.
இந்து சமய விவகார அலுவல்கள்

## காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் தேரேறி வரும் தில்லையம்பலவன்


இ.ச.பேரம்பலம் சகநிறுவனம்
இல:50,52,54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-8838)

சீமாட்டி புடைவைக் கடல்
இல.122, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். (சி-8841)

றூபா பன்முக வர்த்தக நிலையம் (சி-8844)
இல.104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ஈஸ்வரன் ரேட
இல.69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்

பொன்னம்பலம் அரிசி ஆலை
யாழ்.சாலை, பரந்தன்,கிளிநொச்சி. (சி-8839)

முத்துப்பிள்ளையார் வண்ணைச்சோலை
யாழ்சாலை,கிளிநொச்சி. (சி-8842)

முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை
யோகபுரம், மல்லாவி. (சி-8845)

பிள்ளையார் பல்பொரு
உதிரிகள் வாணிபம்
முருகன் கோவில் முன்பாக, யாழ்சாலை,கிளிநொச்சி.

யாழ் நகரில்- THAMPI
LIONAIR
விமான சேவையுடன்
இல:90, கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-222 2504, 2222823
தொ.நகல்: 021-222 2040
அவசர அழைப்புகளுக்கு :0777-382343,0722-401423
(சி-8840)

லக்சுமி பென்சி (சி-8843)
இல.224, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

குமரன் புடைவையகம்
யாழ்சாலை,கிளிநொச்சி. (சி-8846)

தமிழ்க்கங்கை வண்ணச்
யாழ்சாலை,கிளிநொச்சி

ஸ்ரீ முருகன்
இல.303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

கந்தன் களஞ்சியம்
யாழ்சாலை,கரடிப்போக்கு,கிளிநொச்சி. (சி-8847)

லலிதா புடைவை
இல.B3, சந்தைவீதி, வவுனியா
இல.5,6, நவீன யாழ்ப்பாணம்.



# ...பரம் - மார்கழித்திருவாதிரை உற்சவ
# ...ற்பிதழ்-06-01-2004

### ...ந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் ...ாண்புமிகு தியாகராஜா மகேஸ்வரன் அவர்கள் ...டுக்கும் வாழ்த்துச்செய்தி!

சிவபூமியாகிய இலங்கையில் யாழ்ப்பாணக் குடாநாடு ...னபூமியாகத் திகழ்கின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் ...வமும் தமிழும் சிறப்புற்று வளர்ந்த பிரதேசங்களில் ...ரைநகரப்பதி முதன்மை பெறுகின்றது. தமிழ் நாட்டிலே ...யில் என்று அழைக்கப்படும் திருத்தலம் சிதம்பரமாகும். ...து நாயன்மார்கள் எல்லாம் உள்ளம் உருகிப் பாடிய ...மாகவும் சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தை ...ங்கேற்றிய தலமாகவும் சிதம்பரம் திருத்தலம் ...னப்படுகின்றது. தமிழ் நாட்டுச் சிதம்பரத் தலத்தை நினைவு ...ம் வகையில் காரைநகரில் இருந்து அருளாட்சி புரியும். ...ஸ்தலமே ஈழத்துச் சிதம்பரம் என்று அழைக்கப்படும் ...ரைநகர்ச் சிவன் கோயிலாகும்.

இத்திருத்தலம் இருக்கும் பிரதேசம் புனித பூமியாகவே ...னப்படுகிறது. மார்கழி மாதத்திலே இச்சூழல் முழுவதும் ...வாசக ஒலி கேட்கும். திருவாசக மடத்திலே திருவாசக ... மிகச் சிறப்பாக பல்லாண்டு காலமாக நடைபெற்று ...கிறது. அண்மையிலே திருவாவடுதுறை ஆதீன குருமகா ...தானம் சீர்வளர் சிவப்பிரகாச சுவாமிகள் இத்திருத் ...த்திற்கு வருகை தந்து எமது அமைச்சினால் அமைக் ...ட்ட அறப்பணி நிலையக் கட்டடத்தினை திறந்து ...த்தார்.

இத்திருத்தலத்தைப் பரிபாலித்து வருகின்ற ...ச்சாரியார் பரம்பரையில் வந்த சிவத்திரு வைத்தீஸ்வரக் ...க்கள் தலைமையில் இயங்குகின்ற சிவாச்சாரியார்கள் இக் ...யிற் கிரியைகளை சிறப்பாக நடாத்தி வருகின்றார்கள். ...த திருவாதிரை ஆருத்திரா தரிசனம் மிகச் சிறப்பாக தமிழ் ...டின் சிதம்பரத்தில் நடைபெறுவதைப் போன்று பல்லாண்டு ...மாக நடைபெற்று வருகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் ... பிரதேசங்களில் இருந்தும் ஆருத்திரா தரிசனத்தைக் ...ன்பதற்காக பெருந்தொகையான மக்கள் இங்கு கூடுவார்கள். ...லே பவனி வந்து அருள் பாலிக்கும் ஈழத்துச் சிதம் ...ஸ்வரப் பெருமானின் திருவருள் அனைவருக்கும் கிடைக்க ...ண்டும் என்றும் நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவ ...ண்டும் என்றும் ஆடவல்லானாகிய நடராஜப் பெருமானின் ...ர விந்தங்களைப் பிரார்த்தித்து வணங்குகின்றேன்.

...கேஸ்வரன்.,பா.உ.
...து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்.

### நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குரு முதல்வர் அவர்களின் ஆருளாசிச்செய்தி!

இறையன்பர்களுக்கு,

காரைநகர், ஈழத்துச்சிதம்பரம் என வழங்கும் சௌந்தராம்பிகாசமேத சுந்தரேசப் பெருமான் தேரிலேறி அருட்காட்சி தருவது அனைவரினதும் புண்ணியப் பேறாகும். மார்கழி மாதம் இறைவழிபாட்டிற்குரிய மாதமாகும். சைவவைஷ்ணவ ஒற்றுமையைக் காட்டுவது இம்மாதமாகும். மணிவாசகசுவாமிகள் அருளிய திருவெம்பாவைப் பாடல் இக்காலத்தில் ஓதப்படுவதும் அதையொட்டிய திருவாதிரை நாளில் ஆடல் வல்லானுடைய திருநடனமும் சிறப்புடையது.

இந்நிகழ்வை சிதம்பரத்தில் சென்று தரிசனம் செய்வது இப் பிறவியினுடைய புண்ணியமாகும். அங்கு செல்ல முடியாதவர்கள் ஈழநாட்டின் யாழ்ப்பாண நன்நகரில் காரைநகர்ப்பகுதியில் எழுந்தருளியிருக்கும் ஈழத்துச்சிதம்பர நாதனை வழிபட்டு வேண்டுவார் வேண்டியதை ஈயும் இறைவனின் திருவருளைப் பெறுவோமாக.

இந்நிகழ்வைச் சிறப்புச் செய்து ஈழநாதம் பத்திரிகை நிறுவனத்தினர் மலர் வெளியிடுவது மகிழ்ச்சியைத் தருகின்றது. இப் பணியினை செய்யும் அனைத்து அன்புள்ளங்களை இறைவன் ஆசீர்வதிப்பானாக. எம் பெருமானை அனைவரும் வழிபாடு செய்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர
தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்



### நாளை எம் தேசத்தில் நல்ல தீர்வு வர ஈழத்துச்சிதம்பரத்தில் ஐந்து தேரோட்டம்



ஈழத்து சிதம்பரத்தில் ஐந்து தேரோடும்
இந்நாட்டு தமிழரின் இன்னல்கள் தீரும்
இன்றைய புத்தாண்டு நமதாக மலரும்
நடேசர் ஐயப்பன் நல்லருள் சேரும்
ஏழை பங்காளன் எம் தலைவன் தேரேறி வருவான்
எம் மண்ணில் தமிழருக்கு நல்லாட்சி தருவான்
தோழனாய் வந்தெம் துயரங்கள் தீர்ப்பான்
தொல்லறம் வகுத்து தமிழரைக் காப்பான்.

வாருங்கள் எல்லோரும் வடம் பிடிப்போம்
வசந்தம் எம் தேசத்தில் வர இடம் பிடிப்போம்
சேருங்கள் எல்லோரும் சிவன் பக்கம் நில்லுங்கள்
செந்தமிழர் ஆட்சி இந்நிலத்தில் மலரும்
நேருங்கள் எல்லோரும் நிரந்தர தீர்வினை எண்ணி
நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றித் தருவான்
ஈழத்து மக்களின் காவலன் தேரேறி வருகிறான்
இன்றெம் தேசத்தில் நல்ல தீர்வினைத் தருகிறான்.

-கவிமாமணி மதுரகவி- காரை எம்.பி. அருளானந்தன்-

## ...பம்பலவன் அருள் எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.


...வரன் ரேடர்ஸ்
...கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-8848)

எஸ்.வி. முருகேசு
இல.154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-8852)

அற்புதாரேடிங் கொம்பனி
இல.198, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-8856)

சிறப்பிதழாக்கம்
காரையூரான்

...ளையவர் பல்பொருள் ...உதிரிகள் வாணிபம்
...யாழ்சாலை,கிளிநொச்சி. (சி-8849)

பிள்ளையார் பல்பொருள் வாணிபம்
யோகபுரம், மல்லாவி. (சி-8853)

மருதடிப்பிள்ளையார் களஞ்சியம்
யோகபுரம், மல்லாவி. (சி-8857)

MANOJ EXPRESS SERVICES
- சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள்
- சர்வதேச பொதிகள் சேவை
- யாழ்-கொழும்பு விமான பயணச்சீட்டுக்கள்
- யாழ்-கொழும்பு பொதிகள் சேவை

(Transporting)

MANOJ EXPRESS SERVICES
No:13, power House Road,
Jaffna.
Tel:021-2223916, mob-0777-801038

MANOJ EXPRESS SERVICES
No:67/A, Wolfendhal Street,
Colombo-13
Tel:0112 390128, 074-612656
mob- 0777-517019
(சி-8860)

...கங்கை வண்ணச்சோலை
...ழ்சாலை,கிளிநொச்சி. (சி-8850)

தங்கமாளிகை
ஈருருளி பல்பொருள் உதிரிகள் வாணிபம்
யாழ்சாலை,கிளிநொச்சி. (சி-8854)

நல்லைக்குமரன்
பல்பொருள் வாணிபம்
யாழ்சாலை,கிளிநொச்சி. (சி-8858)

...தா புடைவையகம்
...சந்தைவீதி, இல.5,6, நவீன சந்தை யாழ்ப்பாணம். (சி-8851)

சிவன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்
இல.70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (சி-8855)
T.P.222 2763

கலைவாணி நகைமாளிகை
இல.111B,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-8859)
T.P.222 7356




# குடியேற்றம்

**க. ரமேஷ்**

**2068 ஆம் ஆண்டு.**
திறையில் புள்ளிகள் தோன்றிய பின்னும் சார்ள்ஸால் தனது பழைய நினைவுகளில் இருந்து திரும்ப முடியவில்லை. தந்தை, தந்தையின் தந்தை, மகன், மகனின் மகன் என நான்கு ஐந்து தலைமுறைகளைக் கண்ட அவர் வயது எண்பதைத் தாண்டிவிட்ட போதும் அவரது நினைவுகள் என்னவோ இளமையானதாகவே இருந்தன.

இன்று வரவிருக்கும் பேரனின் வருகை ஒரு புறம், நேற்று நடந்து முடிந்த மாவீரர் நாள் நினைவுகள் மறுபுறமாக கிழவனார் உற்சாகத்தில் திளைத்தவராகவே காணப்பட்டார். நேற்று நடந்து முடிந்த மாவீரர் நாள் கொண்டாட்டங்களுக்கும் இன்றைக்கு அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த மாவீரர் நாள் கொண்டாட்டங்களுக்கும் எவ்வளவு வித்தியாசம். அதற்கிடையில் தான் எத்தனை மாற்றங்கள். 2003 ஆம் ஆண்டு மாவீரர் தின உரையின் போது தனி அரசமைப்போம்" என தந்தை கொண்ட சபதம் நனவாகி பல வாருங்கள் கடந்து விட்டன. இன்று தமிழீழம் தனி அரசு. சிங்கள தேசம் வேறுநாடு. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்ல பாஸ் காலம் போய் பாஸ் போட் காலம் வந்துவிட்டது. பலாலியிலும், திருமலையிலும் நேரத்திற்கு நேரம் தரையிறங்கும் விமானங்களின் எண்ணிக்கை பல வருடங்களுக்கு முன்னர் இங்கு ஓர் சுதந்திரப் போர் நடந்ததென்பதை நினைக்க மறுக்கின்றது. இதை எல்லாம் நினைத்ததாலோ என்னவோ தேசியத்தலைவர்,துயிலும் இல்லங்கள் நிறுவப்படவேண்டும் என்பதில் அத்தனை உறுதியாக இருந்தாரா? என்பது கடந்த சில வருடங்களாக சார்ள்ஸின் நெஞ்சை உலுக்கும் கேள்வியாக இருந்துவருகின்றது. காலம் மாறி, சோகம் மாறி, கட்டடக் கலைகள் மாறி ஏன் தமிழர்களின் மரபுகள் சிலவும் மாறிவிட்ட போதிலும் கார்த்திகை 27 மட்டும் மாறிவிடவில்லை என்பதில் சார்ள்ஸ் கிழவனாருக்கு ஓர் மன ஆறுதல் இருக்கவே செய்தது.

நேற்று தந்தையின் கல்லறையின் முன் நின்றபோது- படர்ந்து விரிந்த பழைய நினைவுகள்- இப்பொழுதெல்லாம் சார்ள்ஸால் கண்ணீர் சிந்த முடிவதில்லை. காரணம் பேரன் நடந்துமுடிந்துவிட்ட பல தசாப்த யுத்தமும், அது விட்டுச்சென்ற எச்சங்களும் மறைந்துவரும் காலத்தில்தான் இன்று மகனின் மைந்தன் வருகின்றான்.

அவன் வரவு அவருக்கு மட்டுமல்ல முழுதமிழீழ தேசமுமே எதிர்பார்த்திருக்கும் ஓர் வரவாக மாறியிருந்தது.

அயல் நாட்டு- சிங்கள தேசத்து- அதிபர்கூட வைபவத்தில் கலந்து கொள்ள வருகிறாராம். காலை TV செய்தி கூறியது. தந்தையின் கனவு பேரன் மூலமாக இன்று நிறைவேறுகின்றது. அதில் முறுக்கேறியிருந்தார் கிழவனார். தமிழீழ நாயகன் தரையிறங்கப் போகிறான். அவனை வரவேற்க அயல்நாட்டு அதிபர் எமது மண்ணில்.

ஆம் பேரன் கிட்டு நான்கு ஆண்டுகள் தொடர்ச்சியான விண் வெளிப்பயணத்தை முடித்துக்கொண்டு ஜொணி 04 விண்கலம் மூலம் அங்கயற்கண்ணி விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் தரையிறங்கப் போகிறான். இதற்காக தமிழீழ தேசம் விழாக் கோலம் பூண்டுள்ளதில் வியப்பெதுவும் இல்லை தான். சென்ற ஆராய்ச்சிப் பயணத்தின் பல முக்கிய தகவல்களை- தரவுகளை அவன் உடனுக்குடன் செய்கோள்கள்.மூலம் அனுப்பிக் கொண்டிருந்தானாயினும் தமது ஆராய்ச்சிகளின் முடிவுகளை அவன் அறிவிக்கவில்லை. இது அவர்கள் பரம்பரை வழக்கம். கண்ட கண்டபடி பேட்டி கொடுப்பதும், நேரத்திற்கு நேரம் அறிக்கைகள் விடுவதும் அவர்கள் பரம்பரைக்கு ஓத்ததல்ல.

அவனைத் தாங்கிவரும் விண்கலம் தரையிறங்கப் போவதாக சார்ள்ஸின் அருகில் இருந்த கணனித் தொலைபேசி குரல் கொடுத்தது. காது கேளாதவர் போல் வேறு எதையோ சிந்திக்க முற்பட்ட கிழவனாரை அதட்டினார் வாழ்கைத் துணைவி.

எழும்பி வெளிக்கிட்டுப் போய், தாய் தந்தையுடன் சேர்ந்து பிள்ளையை கூட்டிக்கொண்டு வாங்கோவன்...

இல்லாட்டி வரமாட்டானாக்கும்...

தந்தை சொல்லிக் கொடுத்த மந்திரங்களில் இதுவும் ஒன்று. அரசனே வேண்டுமானால் வரட்டும், நீ எதிரியை மட்டும் தேடிப்போ. இது வரட்டுக் கௌரவமல்ல, வாழையடி வாழையாக தந்தை- தமிழினத்துக்கு சொல்லிக் கொடுத்த பாடம். இதைக் கடைப்பிடித்து அவர் சாதித்தவைகள் பல.

கணனியின் அந்த மையப்புள்ளி எதையோ சொல்ல கீ போட்டில் ததிங்கிணத்தோம் விளையாடியது கிழவனாரின் கைவிரல்கள். உடனே அருகில் இருந்த பெருந்திரையில் ஜொணி 04 விண்கலம் தரையிறங்கிக் கொண்டிருந்தது.

அதென்னப்பா முடித்தேங்காய் மாதிரி இவ்வளவு பெரிசா அதுக்குள்ள இருந்து இவன் இறங்கி வாறான்.

சிவ சிவா அது முடித் தேங்காயில்லையப்பா. அது தான் ஜொணி 04 இந்தக் காலத்தில இப்படியொண்டு எனக்கு... என்னைப் படிக்கவா விட்டவயள்..

பழசைக் கிழறாதையும் அவனைப் பார்க்க பழைய ஞாபகம் நிறைய நினைவுக்கு வருவதுபோல இருக்கல்லே....

ஓம் ஓம் தேசியத்தலைவர் முதல் முதல் இந்தியன்ர கெலியால இறங்கி வாறமாதிரி இருக்கு...

இஞ்சேரும் அதை நானே பாக்கேல்ல... நீர் பாத்தனீரோ...

இல்லை இல்லை முந்தி ஒருக்கா யாரோ சொன்னவை அங்க பாருங்கோ அப்பா என்ர பேரன் முட்டை கோதுகள் மாதிரி என்னத்தையோ கழட்டிப் போடுறான்...

ஏனப்பா நீர் போன முறை திலீபன் 03 வந்திறங்கேக்க பார்க்கேலேயே.... அது முட்டைக் கோதில்ல விண்வெளி உடுப்பு அப்படித்தான் இருக்கும்....

நீங்கள் வெளிநாட்டில் படிச்சனியள். நான் இந்த வன்னிக்க.. வெளிநாட்டுப் படிப்பு எண்டதும்தான் ஞாபகம் வருது. நானும் வெளிநாட்டுக்குப் போய் படிச்சிட்டு வரேக்க அப்பாவும் இப்படித்தான் எதிர்பார்த்திருப்பார் என்ன..

அங்கதான் நீங்கள் பிழைவிடுறியல் -மாமா யாரையும் எப்பவும் எதிர்பார்க்கேல்ல..

உண்மைதான், அந்த உண்மை என்றுமே விளங்கிவிடாத உண்மையாகவே இருக்கிறது. விடுதலைப் புலிகளின் போராட்ட தந்திரம் என்ன? எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் உலகத்தால் கேட்கப்பட்ட கேள்விக்கு இன்னும்தான் விடை கிடைக்கவில்லை. ஆனால் இன்று பேரன் கூறப்போகும் விடைக்காக அதே உலகம் ஆழ்ந்து நோக்கிக் கொண்டிருக்கிறது. அன்று பாட்டனாரைப் பார்த்துக் கேட்ட அதே கேள்வியை இன்று பேரனைப் பார்த்து உலகம் கேட்கின்றது. எப்படி உங்களால் இதை சாதிக்கமுடிந்தது.

அமெரிக்கா அண்டவெளியிலும் ரஷ்யா, ஜப்பான் மண்டல வெளியிலும் சுற்றித்திரிய, தனியரசு அமைத்து சில வருடங்களில் ஆரம்பித்த பணிதான் இன்று உலகத்தையே வியப்பில் ஆழ்த்தியிருந்தது. அது ஒட்டு மொத்த உலகமுமே செவ்வாய்க் கிரகத்தில் மனிதன் நிரந்தரமாக வாழலாமா என ஆராய்ச்சி நடத்திய காலம். தமிழீழ விஞ்ஞானிகள் வேறு விதமாக சிந்தித்தார்கள். எல்லோரும் செவ்வாயையும் வியாழனையும் சுற்றட்டும். நாம் வேறு எதையாவது தேடுவோம் என ஜொணி 01 விண்கலம் மூலமாக முதன் முதல் தேடத் தொடங்கினார்கள். தொடர்ந்து ஜொணி 02,03 திலீபன் 01,02,03,04, போய் வந்தன. கூடவே வெற்றியும் வந்தது. எல்லாமே நல்ல செய்தியாக அமைந்தன. செவ்வாயிலிருந்து.



பல கோடி மைல்களுக்கு அப்பால் தமிழீழ விண்வெளி வீரர்களால் கிரகம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டு "விக்ரர் கிரகம்"என பெயரும் சூட்டப்பட்டது.

ஆடிப் போனது அமெரிக்கா. செவ்வாய்க்கு சென்றுவர அமெரிக்காவுக்கு ஒரு வருடம் தேவைப்பட்டது. விக்ரருக்கு சென்று வர தமிழீழ வீரர்களுக்கு தேவைப்பட காலம் வெறும் ஆறே மாதம் தான். வேகம் வேகம் எதிலும் வேகம் எப்போதும் வேகம்.

அங்க பாருங்க அயல்நாட்டு அதிபர் ஆளுயர மாலைபோடுறார். சிந்தனைகள் தடைப்பட்டன. கிழவனாரின் கண்களில் ஆனந்தக் கண்ணீர்.

வரவேற்புகள், பாராட்டுக்கள், சிறப்புரைகள் என விண் வெளிமையம் இரண்டுபட்டிருந்தது. திரும்பிப் பார்த்தார் கிழவர், தலைக்கு மேல் தந்தை சிரித்துக் கொண்டிருந்தார். பல நாட்டு அதிபர்களும், விஞ்ஞான விரிவுரையாளர்களும் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்கள். இவற்றுக்கு மத்தியிலும் கிழவனாரின் மனதில் ஓர் எதிர்பார்ப்பு. என்னும்தான் நிறைவேறவில்லை. அது இந்தியா வாய்திறக்குமா? இல்லை இத்தனை நாடுகள் வாய்திறந்து பாராட்டிவிட்டன. அமெரிக்கா கிட்டுவுக்கு கௌரவ பிரஜா உரிமையும் கொடுத்துவிட்டது. ஆனால் இந்தியா வாய்திறக்கவே இல்லை. தனியரசமைத்தபோதும் மௌனம், இப்போதும் மௌனம். இந்த மௌனத்தில் புதைந்திருப்பது என்ன போட்டியா/ பொறாமையா?

விண்வெளிமையத்தில் இருந்து வீடுநோக்கி தாய் தந்தையருடன் காரில் ஏறப்போன கிட்டுவின் காதுகளில் எதையோ கூறிவிட்டு சிறு துண்டுக் காகிதத்தை கையில் கொடுத்தான். அவரது உதவியாளன். தாய் தந்தையரின் முகத்தைப் பார்த்த கிட்டுவின் முகத்தில் இத்தனை நேரமும் கிடைத்த பாராட்டுக்களாலும் புகழுரைகளாலும் ஏற்பட்டிராத ஓர் மகிழ்சிப்பரவசம் தாண்டவமாடுவதை கிழவனார் காணத்தவறவில்லை.

உடனே பத்திரிகையாளர், தொலைக்காட்சியாளர்கள் என பலர் கார் அருகேயே வரவழைக்கப்பட்டனர். ஆச்சரியம் கலக்க கூடியவர்களிடம் கிட்டு தன் வாயாலேயே கூறினார்.

இந்தியப் பிரதமர் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருக்கின்றார். எமக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்வதாக உறுதி கூறியிருக்கின்றார்.

மீண்டும் திரும்பி தந்தையின் முகத்தைப்பார்த்த சார்ள்ஸ்க்கு பேரன் கிட்டு கூறிய வார்த்தைகள் தேசியத் தலைவர் அவர்களே நேரில் கூறியது போன்று காதில் கணீரென விழுந்தன.

எனது அன்பான- மக்களே- பத்திரிகையாளர்களே.தெளிவாக எழுதுங்கள். எனது பாட்டனார் காலம் தொட்டு இன்று வரை நாம் இந்தியாவிடம் எதிர்பார்த்தது பாராட்டுக்களையும் பண உதவிகளையும் அல்ல. அவர்களின் நல்லாசிகளையே நாம் எதிர்பார்த்தோம். இதற்கு இப்பொழுது தான் காலம் கனிந்திருக்கிறது. அதற்காக நானும் எனது தேசத்து மக்களும் நன்றி கூறுகின்றோம்.

கார் புறப்பட்டது, துள்ளி எழுந்த கிழவனார் காவலாளியிடம் கூறினார். திரு கிட்டு அவர்கள் வருகின்றார்கள். கதவைத் திறந்து வை. கார் வீட்டு வாசலுக்கு வரவும் பேத்தி ஆலாத்தித் தட்டுடன் வரவும் சரியாக இருந்தது. ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்தார் கிழவனார். கட்டித்தழுவல்கள், முத்தங்கள் விசாரிப்புகளுக்கு மத்தியிலும் தனது கைக் கணனி மூலம் தான் தயாரித்திருந்த பயண அறிக்கையை பாட்டனாரின் பாதங்களில் வைத்து ஆசி பெற்ற கிட்டு அதை சார்ள்ஸின் கைகளில் கொடுத்து அவருக்குரிய மரியாதையாக சல்யூட்டும் அடித்தார்.

இது என்ன அலுவலகமா? இல்லமா? என விழித்து நின்ற தாய் தந்தையரின் பாதங்களை அவன் தொட்டபோது அவனுக்கு வாழ்த்துக் கூற வார்த்தைகள் இன்றி வாயடைத்துப் போயிருந்தார்கள் ஒட்டு மொத்தக் குடும்பத்தவர்களும்.

கிழவனாரின் கைகளில் பதட்டம் அது வயதால் வந்த பதட்டம் அல்ல. உணர்ச்சி களின் வெளிப்பாடு கண்களின் கண்ணீராக பனிக்க கடித உறையை அகற்றினார் தேசிய பாதுகாப்புக்கு பொறுப்பானவர்.

# நூல்நோக்கு




| | |
|---|---|
| நூலின் பெயர் | : இந்து சமுத்திரத்தில் ஓர் இரவுப் பயணம். |
| நூலாசிரியர் | : எஸ்.பீ. கிருஷ்ணன் |
| நூலின் விலை | : 110/= |

இலங்கைத் தமிழர்கள், அவர்கள் பிறந்த மண்ணில் நீண்ட காலமாக நடந்துகொண்டிருக்கும் போரினால் பாதிக்கப்பட்டு மிகவும் அல்லல் உறுகிறார்கள். சொந்த மண்ணில் ஏதிலிகளாய் இடம் பெயர்ந்து ஊர்விட்டு ஊர் என்று திரிந்து அவதிப்படுகிறார்கள். பிறந்த மண்ணை விடுத்து வெளிநாடுகள் சேர்ந்து அங்கு அகதிகளாய் துன்பங்களை அனுபவிக்கிறார்கள். இக் கொடுமைகளை அனுபவித்தவர்கள் அவற்றை எழுத்தில் பதிவு செய்வது இயல்பாக உள்ளது.

இலங்கையில் சொந்த மண்ணில் வாழ முடியாமல் ஒரு நள்ளிரவில் தமது மனைவி மக்களுடன் படகேறித் தமிழகம் வந்தவர் திரு.எஸ்.பி. கிருஷ்ணன். அவர் தன்னுடைய அனுபவங்களையும், சொந்த நாட்டில் கதிகலங்கி நிற்கும் தமிழர்களின் ஆறாத் துயரங்களையும் உணர்ச்சி நிறைந்த கதைகளாக்கியிருக்கிறார். அவற்றின் தொகுப்பு தான் ' இந்து சமுத்திரத்தில் ஓர் இரவுப் பயணம்' என்ற நூல்.

யாழ்ப்பாணத்தில் குண்டுச் சத்தம் கேளாத நாளில்லை 'பொம்மர்' வந்து எப்போது குண்டுகள் வீசும் என்று அஞ்சிவாழும் நிலை. அப்படி பொம்மர் வருகிற சத்தம் கேட்டதுமே ஊர்மக்கள் உடைமைகளைப் போட்டு விட்டு, வீடுகளைத் துறந்து வெளியேறி, வேறொரு ஊர் சென்று வசிக்க முற்படுகிறார்கள். சில நாட்களிலேயே அந்த ஊர் மீதும் குண்டு வீச விமானங்கள் பறக்கவும், மக்கள் அலறி அடித்து மற்றொரு ஊருக்குப் போகிறார்கள். இவ்வாறு இடப்பெயர்வு செய்து சிரமப்படுகிறவர்களின் அனுபவங்களை கிருஷ்ணன் பல கதைகளில் சித்தரித்திருக்கிறார்.

அப்படி ஊரைவிட்டுப் போகிறவர்கள் அவரவர் வீடுகளைப் பூட்டிச் செல்கிறார்கள். ஆனால், இராணுவத்தினரும் மற்றும் சொந்த நாட்டினர் சிலரும் பூட்டை உடைத்து அகப்பட்டவற்றை கொள்ளை அடித்துச் செல்கிறார்கள். வீட்டுக்கூரை, கதவுகள் முதலியனவும் அகற்றப்படுகின்றன. சில ஆண்டுகளுக்குப் பிறகு உடைமையாளர்கள் திரும்பி வந்து பார்க்கையில், கூரைஇல்லாத வீட்டின் சிதிலங்களையும், புல் முளைத்துப் பாழ்பட்டுக் கிடப்பதையும் காணநேரிடுகிறது. இவ் அவல நிலையையும் கிருஷ்ணன் கதைகள் எடுத்துச் சொல்கின்றன.

இடப்பெயர்வுகளினால் அல்லல்படும் ஈழத்தமிழர்களில் வேதனைகளைப் பதிவு செய்கிறபோதே, அவர்களது மன உறுதியையும் அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார். தனது கதைகளில் 'விடுதலைப் போராட்டம் நடக்கும் நாடுகளில் ஏதிலிகளாக்கப்பட்ட மக்களையும், அவர்கள் பசி, பட்டினியாக ஆயிரக்கணக்கில் மடிந்ததையும் பத்திரிகைகளில் படித்ததுண்டு. நாங்களும் விடுதலைக்காகப் போராடுகிறோம். அதனால் ஏதிலிகளாகப் போய்க்கொண்டிருக்கிறோம். இது எங்கள் பங்களிப்பு. இது ஒரு வெற்றி' என அவர்கள் கருதுகிறார்கள் என்பதை 'ஓ தென்மராட்சி, என்ற கதை வெளிப்படுத்துகிறது.

இடம் விட்டு இடம் பெயர்ந்து போகிறவர்கள் தங்கள் மண்ணின் பசுமையையும், வழமையையும் காணநேரிடுகையில் மனம் வருந்துகிறார்கள். அதேவேளையில் உள்ளத்தில் நம்பிக்கையும் வளர்க்கிறார்கள். 'பாரிய விருட்சங்களும் பராமரிப்புமற்ற வாய்க்கால்களும் நீர் நிலைகளும் வயல்நிலங்களும் உள்ள மல்லாவியில் மக்கள் வளமாக வாழமுடியவில்லை. வெய்யிலும் மழையும் நோயும் எதிரிகளாய் அமைந்தன. நோய்க்கு மருந்தில்லை போதிய உணவுப்பொருள் இல்லை. மக்கள் அநாதைகளாய் அலைந்தனர். இதெல்லாம் தமிழ் மண். இதை திருத்திப் பண்படுத்தினால் ஏதிலிகளாய் நாம் அலையவேண்டாம். அதற்கொரு காலம் வரும் வரும்' என எண்ணும் மக்களின் இதயத் துடிப்பை 'வானமே கூரை' என்ற கதை உணர்த்துகிறது.

ஈழத்தமிழர்கள் அவர்களுடைய ஊர்களிலும், கொழும்பிலும் படுகிற கஷ்டங்களை படம் பிடித்துக் காட்டும் கிருஷ்ணன், தமிழ் நாடு வந்து சேர்ந்தவர்கள் அகதி முகாம்களிலும் பிற இடங்களிலும் எதிர்கொள்ள நேர்கிற அவலங்களையும் தனது கதைகளில் எடுத்துச் சொல்லியுள்ளார்.

தென்னகம் வந்து சேர்ந்தவர்களில் சிலர் ஊர்ஊராய் சென்று கோயில்களையும் தெய்வங்களையும் கண்டு மகிழ்வதையும் அவர் கதைகளில் பதிவு செய்திருக்கிறார். அத்தகைய கதைகள் விதம் விதமான மனித இயல்புகளைப் பிரதிபலிப்பனவாக உள்ளன.

'கலைஞன்' கதையில் குடும்பத்தலைவர் குடும்பத்தாருடன் கோயில் கோயிலாகச் செல்கிறார். மற்றவர்கள் தெய்வதரிசனம் கண்டு பக்தியில் ஈடுபடுகிறபோது, அவர் சிலைகளையும் சிற்பவேலைப்பாடுகளையும் கூர்ந்து நோக்கி மகிழ்கிறார். அவர்போக்கை விமர்சிப்பவர்களிடம் அவர் கூறுவது நல்ல சிந்தனைச் சுடர்ப்பொறி ஆகும்.

'தெய்வச் சிலைகளை வணங்க நீங்கள் வருகிறீர்கள். அந்தச் சிலைகளை உருவாக்கியவனை நீங்கள் நினைப்பீர்களா? அழகுச் சிற்பங்களைக் கல்லில் இருத்திக் கொத்திஎடுத்த கலைஞனை நான் வணங்குகிறேன். கருவறையில் கற்சிலையை வைத்தவன்தான் கர்த்தா. சிற்பியின் கை வண்ணம் எல்லா கோயில்களிலும் ஒரே கருத்தைத் தான் காட்டுகிறது. அழகின் தரம் வேறுபடலாம். ஆனால் கலையின் வடிவம் ஒன்றே என்று அறிவிக்கிறார் கலை உள்ளம் பெற்றுள்ள அந்த மனிதர். பாராட்டப்பட வேண்டிய கருத்து

அதேபோல, வாழ்க்கையில் அழுத்தமான ஒரு உண்மையை ஆசிரியர் கிருஷ்ணன் 'பசி' என்ற கதையில் பொறித்திருக்கிறார். மனித நேயம் கொண்ட கதைத் தலைவர் சொல்கிறார். ஒரு பிள்ளைப் பாக்கியம் இல்லையே என்று கோயில்களை வலம் வரும் குடும்பம் எத்தனை! நான்கு பெண்களைப் பெற்றவள் ஒரு ஆண்குழந்தைக்கு ஏங்குகிறாள். ஐந்து ஆண் குழந்தைகளைப் பெற்றவள் ஒரு பெண் குழந்தைக்கு ஆசைப்படுகிறாள், பெற்றவுடன் பற்றைக்குள் வீசி விட்டுப் போகின்றவளும், பிறக்கு முன்னே அழித்து விடுபவளும் வாழும் மண் இது'

'இந்து சமுத்திரத்தில் ஓர் இரவுப் பயணம்' எனும் கதை ஆசிரியர் கிருஷ்ணனின் சொந்த அனுபவத்தை கடலில் ஒரு இரவில் பயணம் செய்தபோது அவருக்கு ஏற்பட்ட உணர்வுச் சுழிப்புகளையும் எண்ணக் குமுறல்களையும் - உயிர்த் துடிப்புடன் விபரிக்கிறது.

இந்த விதமாக வாழ்க்கையின் யதார்த்தங்களையும், காலமாறுபாடுகள் மனிதரிடம் ஏற்படுத்துகிற விளைவுகளையும், அவற்றை ஏற்று அவர்கள் நிகழ்த்திக்கொண்டிருக்கிற மவுனப் போராட்டங்களையும். அவர்களது உள்ளத்தின் உறுதியையும் எஸ்.பி.கிருஷ்ணன் தனது கதைகளில் நன்கு பதிவு செய்திருக்கிறார். அவருடைய எழுத்துத் திறமையையும் சொந்த மண்மீதுள்ள பற்றுதலையும், மனித நேயப் பண்பையும் இக்கதைகள் புலப்படுத்துகின்றன. .

**வல்லிக் கண்ணன்**



## சூடு

ஒரு விடலை வேகமாக வந்தான். சடாரென 'ஸ்ராண்டை' அடித்து ஈருருளியை நிறுத்தினான். விறு விறுவென உள்ளே நுழைந்தான்.

அவன் தேடி வந்த பத்திரிகை அவன் கண்களில் எத்துப்படவில்லையாதலால் பார்வையால் அலசினான்.

ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன பத்திரிகைகள். இடையால் வர்ணங்களாய் தெரிந்த ஏட்டை பக்கென கையில் தூக்கி என்ன பெயர்ப்பத்திரிகையென பார்த்தான். அவன் ஆவலோடு பார்க்க வந்த பத்திரிகை அதுவல்ல சட்டென அப்பால் வைத்தான். பட்டென அப்பத்திரிகை சொல்கிறது.

உன் வயதுக்கு தீனி போட்டு - நீ
கண்கெட்டு நடக்க முதுகு தட்டிவிடும்
பத்திரிகை நானல்ல.

- ஆவரங்கால் சுதன் -

## நீ மாற்றிய நான்

நீ தொழவில்லை
உன்னை
வணங்குகின்றேன்.

கொய்து விடலாம்
உன்னையென்று
பழகிப்போன கரங்கள்
இப்போதெல்லாம்
உன்னை
எய்து விடலாம்
என்றே துடிக்கும்
இலக்கை அடையும்
வல்லமை உன்னிடமாதலால்.

உரசிச் செல்ல அல்ல
வித்தைகள் கேட்டுச்செல்ல
வருகின்ற
காற்றாய் நான்.

மரத்தில் மலர்ந்த
பூக்கள்
மறந்து போயின
பூக்களில் வளர்ந்த
மரங்களை பார்க்கின்றேன்
அதன் நிழலை சுகிக்கின்றேன்
அதீத சுகம்.

அறைந்து பார்க்கின்றேன்
கதவின் மூலையில்
உனதழுகை இல்லை
கதவுகள் திறக்கின்றன உன்னுள்
சந்தோசம்
எனது பயணம் இல்லை
எமது பயணம் அதன் வழியேயும் தான்.

பொன்.காந்தன்.

## உனது குணம் பற்றியும், அராஜகம் பற்றியும்

எனது மனமதில்...
உனது பார்வை பட்ட அன்றே பாவியாய் பலியிடப்பட்ட
எனது இதயத்தின் துடிப்பு...
சிலுவையில் தொங்கியபடி இன்றும் வலித்த படியிருக்கிறது.?
அடித்து ஆணி தைக்கப்பட்ட இதயத்தில் ;
நாளும் வழிந்து கொண்டிருக்கிறது குருதி.
குற்றுயிராய் துடிக்கும் மேனியை குதறிய
வாய்கள் சிரிப்பதை அறிந்த மனங்களில்...
அன்று போலவே இன்றும் பற்றியெரிகிறது நெருப்பு?
ஏறுவரிசையில் ஏறி ஏணியில் நின்று எட்டிப் பார்க்கையில்...
தூரத்தில் தெரிகிறதொரு மின்மினியின் வெளிச்சம்?
நினைவைக்கூட மறைக்கும் இருளில்
தெரியும் எதையும் தொட நினைக்கிறது மனம்!
மங்கா ஒளியின் "சமிக்ஞை" பற்றி
அசைபோடுகிறது எம் வாய்.
எதற்கும் தாங்கும் இதயம் இன்றும்?
தைக்கப்பட்ட படியேதான் தொங்குகிறது நெஞ்சில்
ஆணி ஏற்பட்ட மேனி வலித்து வடியும் குருதியில்.
அடையாளப்படுத்தப்பட்ட இனமாய்...
பல புன்னகைக் கேள்விகளை செவிமடுத்த படி...
தொடர்கிறது வாழ்வு.
நாளை நாமும் சிரிப்பாய் மகிழ்வோம் என்று
உந்துகிறது மனமும் நீண்டு.
முகவரியிடப்படாத சாவின் விளிம்பாய் இன்று.

ம.யோண்சன்

# குழந்தைநாதம்

## கெட்டிக்காரச் சிறுவர்கள்



அந்தக் கிராமத்தின் ஒதுக்குப் புறமாக, உளவு இயந்திரங்கள் மண் அள்ளி அள்ளி பெரிய பள்ளம் உண்டாகி விட்டது. அது மழை பெய்தால் போதும் பெரிய குளம்போல மாறிவிடும்.

அதைத் தடுப்பதற்குயாரும் முன் வராததால் தங்கி நிற்கும் தண்ணீரில் நோய்க் கிருமிகள் உருவாகி விடுவதும் தவிர்க்க முடியாததாகிவிடுகிறது.

ஊர்ச்சிறுவர்களுக்கு அதுவே நீச்சல் தடாகமாக மாறிவிடும். அது சுகாதாரச்சீர்கேடு என்பதை அவர்கள் அறியமாட்டார்கள்.

அதை எடுத்துச் சொல்லித் தடுப்பதற்கு யாரும் முன்வருவதில்லை. பிள்ளைகளைத் தடுத்தால் சில பெற்றோர்கள் சண்டைக்கும் வந்து விடுவதுண்டு. ஊர் நிலைமை அப்படி.

# அக்கறை

தீபனும், குமாரும், சிறுவர்களைக் குளிக்க விடாமல் கலைத்து விடுவார்கள் - இருந்தும் அவர்களின் கண்ணில் படாமல் குளிப்பும் நடந்துகொண்டிருக்கும். அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகைக்கு எப்போதும் எதிர்ப்பு இருக்காது. அவர்கள் செய்த நல்ல செயல்கள் கிராமத்தில் நல் மதிப்பைத் தேடித்தந்திருந்தன.

அந்தச் சின்ன வயதில் கிராமத்தைப் பற்றியும் மக்களின் வாழ்வு பற்றியும் அவர்கள் அக்கறையுடன் செயற்பட்டார்கள்.

பெரியவர்களைச் சந்தித்துப் பேசி தமது எண்ணத்தை வெளிப்படுத்தி அவர்களின் உதவியைப் பெற்று விடுவார்கள்.

ஒரு நாள் பாடசாலைக்கு வந்த சுகாதாரப் பரிசோதகரை அணுகி கிராமத்தின் அவல நிலையை எடுத்துக் கூறி அவர் கிராமத்தைப் பார்வையிட சம்மதமும் பெற்றுவிட்டார்கள்.

மறுநாள் பாடசாலை முடிந்து எல்லாரும் வீடுகளுக்குச் சென்ற பின்னரும் இருவரும் சுகாதாரப் பரிசோதகரின் வரவுக்காகக் காத்திருந்தார்கள். அவர் வந்ததும் அவரை அழைத்துச் சென்றார்கள்.

மூவரும் கிடங்கு இருந்த இடத்துக்கு நடந்து செல்வதையே பார்த்துக்கொண்டு மக்கள் நின்றார்கள். சிலர் எங்கே போகிறார்கள் என்ற ஆய்வில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு இருந்தார்கள்.

திடீரென குமார் தீபனின் முதுகில் தட்டி பள்ளத்தைச் சுட்டிக் காட்டினான். மூவரும் ஒரு கணம் அப்படியே நின்றார்கள்.

அவர்களைக் கண்டதும், அதுவரை தண்ணீரைக் கலக்கி அடித்து உருண்டு புரண்டு விளையாடிய சிறுவர்கள், அம்மணமாக வெளியே வந்து தங்கள் உடுப்புகளையும் எடுத்துக்கொண்டு வெளியே ஓடத் தொடங்கினார்கள்.

"சீ..என்ன சனங்கள் எவ்வளவு சொன்னாலும் விளங்குவதில்லை. இதாலை தானே சிரங்கு, மலேரியா டெங்கு, போன்ற வியாதியள் வருகுது. என்ன?" என்று அலுத்துக்கொண்டார் சுகாதார அதிகாரி.

"கிராமத்தில எல்லாரும் ஒத்துழைச்சால் மண் ஏத்தி றவையைத் தடுக்கலாம். கிடங்கில ஆரும் குளிக்காமல்தடுக்கலாம். இல்லையா?" அவர் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

தீபனும் குமாரும் தலையை ஆட்டினர்.

"சுத்தம் சுகம் தரும். நீங்கள் படிக்கிற பிள்ளையள். உங்கடை அக்கறைக்கு என்ர பாராட்டுகள். நீங்களும் நாங்களும் சேர்ந்து உந்தச் சனங்களுக்குச் சொல்ல வேணும். விளங்க வைக்க வேணும். இல்லாட்டில் நான் தக்க நடவடிக்கை எடுக்கிறன்."

மூவரும் கிராமத்தின் எல்லா வீடுகளுக்கும் சென்று நிலைமையை எடுத்துச் சொன்னார்கள். எல்லோரும் தங்கள் பிழைகளை ஒப்புக்கொண்டார்கள்.

பள்ளத்தை மூடுவதற்கும் மண் ஏற்றுவதைத் தடுப்பதற்கும் தாங்கள் ஒத்துழைப்பதாகக் கூறினார்கள். தாங்கள் இனி விழிப்பாய் இருப்பதாகவும் அடிக்கடி வந்து ஆலோசனை வழங்குமாறும் சுகாதாரப் பரிசோதகரைக் கேட்டுக் கொண்டார்கள்.

தீபனையும் குமாரையும் பாராட்டினார்கள்.

மூவரும் மிக உற்சாகத்துடன் சென்று கொண்டிருந்தனர்.

முருகு பாரிமகன்

## வாரம் ஒரு குறள்



மனிதன் என்பவன் யார்? என்று கேட்டால் நாமெல்லாம் ஆறறிவு படைத்தவன் மனிதன் என்று கூறிவிடுகின்றோம். ஆனால் துன்பத்தில் சிரிப்பவனும், துன்பத்தை சந்தோஷமாகக் கொள்பவனுமே மனிதன் என்று பெரியோர்கள், அறிஞர்கள் கூறியிருக்கின்றார்கள்.

"வந்த துன்பம் எது வென்றாலும் வாடி நின்றால் ஓடுவதில்லை" என்பது கவிஞரின் வரிகள்.

நம்மில் பலர் சிறு துன்பம் என்றாலே சுருண்டு விடுவோம். அடுத்த அடி எடுத்துவைக்க ஆயிரம் தடவை யோசிப்போம்.

ஆனால் துன்பம் அடுக்கடுக்காக வரும்போது கூட துவளாது அதனை விரட்டி வாழ்க்கையில் எதிர் நீச்சல் போடும் துணிச்சல் யாருக்கு இருக்கின்றதோ அவனே மனித பண்புடையவன் என்பதைத்தான்.

"அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட்படும்"

என்று வள்ளுவப்பெருந்தகை அழகாகக் கூறியுள்ளார்.

## சொற்சிலம்பம் - 17

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சா | த் | வ | சு | ர் | மி | அ |
| ம | ண் | த | ஞ் | ம | ச் | க |
| கு | ர | ர் | ப | ப | ன் | ஜெ |
| பு | வ | ப | கி | வா | தீ | ப் |
| ல | உ | ச | வி | சி | ள் | ய |
| ய | ல் | பு | ஏ | ன் | லி | ய |
| ம | ம் | ணி | வ | ம | ப | பூ |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் - 15 இன் விடைகள்

01.தவளை
02.ஆமை

01.கிளி
02.காகம்
03.கொக்கு

### சொற்சிலம்பம் - 15 இன் பரிசுக்குரியவர்

க.கிருஸ்ணகுமாரி,
தரம்-03,
மு/யோகபுரம் ம.வி.
மல்லாவி.

### சொற்சிலம்பம் - 15 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. ச.தனுஷா, கிளி/கனகபுரம் ம.வி. கிளிநொச்சி.
02. ப.லக்மன்ராஜ், தரம்-05, குட்செட் வீதி. வவுனியா.
03. இ.டிலக்ஷன், அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.
04. பு.அனந்தன், கிளி/பூநகரி ம.வி. பூநகரி.
05. பே.மிதுசாலினி,தரம்-01, மு/விக்கினேஸ்வர வித்தியாலயம்.
06. ம.டர்சிகா. தரம்-04, மு/தமிழ் வித்தியாலயம்.

## விடுகதைகளும் விடைகளும்

01. கூவிஅழைப்பான். கூடி உண்ணுவான் அவன் யார்?
02. அவனுக்கு வீடு மற்றவர்களுக்கு வலை அது என்ன?
03. கண்ணீர்விட்டே கடைசிவரை ஒளி தருவான் அவன்யார்?
04. ஆட்டுவித்தால் ஆடாமல் இருக்காது அது என்ன?
05. வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ அது என்ன?

விடைகள்
01. காகம். 04. கண் இமை
02. சிலந்தி. 05. சிரிப்பு.
03. மெழுகுதிரி.

ம.அருள்குமரன், தரம் -04
உடுவில் மகளிர் கல்லூரி

## கைவண்ணம்



ப.வைஸ்ணவன்,
தரம் -04, சின்னப்
புதுக்குளம், வவுனியா.

## ஒற்றுமையாய் வாழ்ந்திடுவோம்

ஒற்றுமையாய்
நாமெல்லாம்
ஒருதாய் மக்களாய்
வாழ்ந்திடுவோம்.
வேற்றுமையை வீரத்துடன்
விரட்டிடுவோம்
வென்றிடுவோம்
மற்றவரை மாண்புடனே
மதித்திடுவோம்,மகிழ்ந்திடுவோம்
பெற்றவரை பண்புடனே
பேணிடுவோம்
பேறடைவோம்.

பி. தர்சிகா, தரம் -04B,
யா/வட இந்து மகளிர் கல்லூரி,
பருத்தித்துறை.

01. ஊர்வன இரண்டு?
01) ..............................
02) ..............................

02. நிறங்கள் மூன்று?
01) ..............................
02) ..............................
03) ..............................

சொற்சிலம்பம் -17
ஈழநாதம்.
யாழ் சாலை,
கிளிநொச்சி.

பெயர் :- ..............................
முகவரி :- ..............................
..............................









# அனுபவப்பகிர்வு



## துயரங்களைச் சுமந்த நாட்கள்

அன்று ஒரு வெள்ளிக் கிழமை மூன்று நாட்களாக ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தது. அன்றுதான் சற்று தளர்வடைந்ததால் ஓரளவு போக்குவரத்துக்கள் நடந்து கொண்டிருந்தன. எமது தென்மராட்சிப் பிரதேசம் எங்கும் யுத்த சம்பிரதாயங்கள் நடந்துகொண்டிருந்தன. எமது மட்டுவில் கிராமங்களில் இருந்த இராணுவ முகாம்கள் எல்லாம் நிறைக்கப்பட்டு எதையோ எதிர்பார்த்து நின்றது! மக்களுக்குள்ளும் பயம், என்ன நடக்கப்போகிறதோ என்ற கவலை! இந்த நிலையில் எங்கோ தூரத்தே கேட்டுக்கொண்டிருந்த வெடிச்சத்தங்கள் மிக நெருங்கிக் கொண்டிருந்தது. இடையிடையே பலத்த சத்தத்துடன் வந்துவிழுந்த எறிகணைகள் எங்களைப் பயமுறுத்திக்கொண்டிருந்தன. கைதடி, கைதடிநுணாவில் ஆகிய பகுதிகளிலிருந்த மக்கள் இடம்பெயர்ந்து மனச்சுமையும், கைச்சுமையும் வாட்டநடந்துசென்றுகொண்டிருந்தனர். நாம் அவர்கள் செல்வதை வேடிக்கை பார்த்தாலும் எங்களுக்குள்ளும் பயம். அடுத்தது நாங்கள் தானோ...? என்ற கவலை. ஆனாலும் தொடர்பில்லாதவர்கள் போல் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றோம். (எமது இயல்பே அதுதானே)

இரவு பதினொருமணிபோல் பெரிய சத்தம் ஒன்று கேட்டது பதறியடித்துக் கொண்டு எழுந்தோம் எம் வீட்டு முற்றத்தில் தான் எறிகணை வீழ்ந்துவிட்டதோ என நினைத்தோம். ஆனால் அது தூரத்தே விழுந்த எறிகணைச்சத்தம், அதற்கே அப்படிப் பயந்தோம். அதன் பின் வரப்போகும் துன்பங்களை அறியாமலே! அன்று முழுவதும் சிவராத்திரிதான். தொடர்ந்து வீழ்ந்த எறிகணைகளால் எத்தனை முறை முருகனை அழைத்தோமோ எமக்கே தெரியாது.

விடிகாலைப் பொழுது சத்தங்கள் ஓரளவு ஓய்ந்திருந்தது, I.B.C செய்தி கேட்பதில் மும்முரமாய் இருந்தோம். அப்போது மிகவும் ஆவேசமாகவும் அவசரமாகவும் ஓடிவந்த இராணுவத்தினர், ஆங்காங்கே பதுங்குழிகள் வெட்டத் தொடங்கினர். நாம் பயந்துவிட்டோம். வீட்டைவிட்டு எங்கும் போவதில்லை என்று இருந்த அப்பாவே "கெதியா வெளிக்கிடுங்கோ இனியும் இஞ்சை இருக்கேலாது" என்றபின், கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு ஓடினோம். எறிகணைகள் துரத்தின. ஓடினோம் துப்பாக்கி வேட்டுக்கள் துரத்தின ஓடினோம் மீசாலை வரை ஓடினோம்.

மீசாலை சோலை அம்மன் கோவிலில் சனக்கூட்டம். ஆனால் திருவிழா இல்லை எல்லாவற்றையும் இழந்துவந்த சோகம், எங்கே போவ் தென்ற ஏக்கம், இன்னும் என்ன நடக்குமோ என்ற பயம், எல்லாம் மொத்தமாய் தாக்க கலக்கத்துடன் இருந்தவேளை, அந்தச் செய்தி தேனாய் காதில்பாய்ந்தது. "எங்கடை பெடியள் மட்டுவிலைப் பிடிச்சு வந்திட்டாங்களாம் சண்டையெல்லாம் ஓய்ஞ்சுட்டுது இனி நாங்கள் எங்கடை இடத்துக்குப் போகலாம்." சந்தோசத்துடன் யாரோ சொன்னார்கள். நாமும் மகிழ்வுடன் மீண்டும் மட்டுவில்நோக்கி நடந்தோம். இரண்டு மூன்று மணித்தியாலத்துக்குள் யுத்தப்பேயின் கோரப் பற்களுக்குள் அகப்பட்டு அல்லோலப் பட்டுக்கிடந்தது மட்டுவில். ஆனாலும் எல்லோர் முகத்திலும் சந்தோசம் நீண்ட நாட்களின்பின் எம் வீரர்களைக் கண்ட சந்தோசம் ஒருபுறம், தப்பிப்பிழைத்த நின்மதி ஒருபுறம். சமையல் சாப்பாடு வீரர்களுக்கு பரிமாறல் என அன்றைய அரைநாள் பொழுதை ஆனந்தமாகக் கழித்துக் கொண்டிருந்தவேளை தொடங்கியது எமகாண்டம்.

அன்று இரவு ஏழுமணி போல் பேரிரைச்சலுடன் வந்த யுத்தப்பறவைகள் சரமாரியாக பொழிந்த குண்டுகளிலும் ரொக்கேட் தாக்குதல்களிலும் கணப்பொழுதுக்குள் பல உயிர்கள் பறிபோனது.

யுத்தப் பறவைகள் தொடக்கிவைத்த பலியெடுப்பை மல்றிப்பரல் எறிகணைகள் தொடர்ந்தன. அதன் பயனாக நாம் பசிமறந்தோம், தூக்கம் இழந்தோம், நின்மதியைத் தொலைத்தோம், எந்தக்கணத்தில் எம் உயிர்கள் பறிபோகுமோ என்ற பயத்துடன் பதுங்குழியே கதியெனக்கிடந்தோம். ஆனாலும் எத்தனை நாள்தான் வயிற்றைக் கட்டமுடியும்? சத்தம் கொஞ்சம் ஓய்ந்திருந்த நேரம் வீட்டுக்குப் போனோம். நூறு இருநூறு பேருடன் அந்த பங்கருக்குள் அடைந்திருந்த (முன்பு புலிகளால் கட்டப்பட்ட பங்கர்) அலுப்பு குளிக்கும்படி கெஞ்சியது அரைமணித்தியாலங்களாக எந்தச் சத்தமும் இல்லாததால் அந்தத் துணிவுடன் கிணற்றடியில் குளிப்பதற்காய் ஆயத்தமானபோது, கூவிக்கொண்டு வந்து விழுந்த எறிகணை, பக்கத்துவீட்டைப் பலியெடுக்க, விழுந்து படுத்திருந்த நாம் அப்படியே ஓடினோம். அந்த முருகன்சன்னிதியில் அடைபட்டுக் கொண்டிருந்தவர்களுடன் நாமும் கலந்துகொண்டோம். அடுத்தடுத்து வந்துவிழுந்த எறிகணைகள் எம்மைச் சுற்றி வீழ்ந்து வெடித்துக்கொண்டிருந்தது. திடீரென நாம் இருந்த கோயிலுக்குள் வீழ்ந்ததுபோல் இருந்தது. எல்லோர் வாயிலும் முருகா, வைரவா என தங்கள் இஸ்டதெய்வங்களின் பெயர்கள் வந்துகொண்டிருந்தன - கோயிலுக்குப் பின்னால் வீழ்ந்து வெடித்த எறிகணையால் எம்முடன் இருந்த பலர் காயம் அடைந்தனர். இனி கோயிலில் இருப்பதுஆபத்து, அடுத்து வரும் எறிகணை நிச்சயம் கோவிலுக்குள்தான் விழும் என்பதால் கேணியடியில் வெட்டப்பட்ட பங்கர் நோக்கி ஓடினோம். அம்மா அப்பா பின்னால் வந்தார்கள் நான் அக்கா தங்கை தம்பிகள் எல்லாரும் முன்னால் ஓடினோம். மற்றவர்கள் பங்கருக்குள் இருக்க அம்மா அப்பாவை அழைக்கத் திரும்பினேன். ஐயோ... தூரத்தே எறிகணை புறப்படும் வெடிச்சத்தம் கேட்டது. அடுத்ததும் வரப்போகிறது ஐயோ... எங்கே இதுகளைக் காணவில்லையே. என்று கத்தியபடி திரும்பிப்பார்த்தேன், சித்தசுவாதீன மற்ற தனது சகோதரியை கையில் பிடித்தபடி, மகளை கையில் சுமந்தபடி சபா அண்ணை (பக்கத்து வீட்டு அண்ணை) வந்துகொண்டிருந்தார். பங்கர் நோக்கி சற்றுத்தள்ளி அவரது மனைவி, மற்றய குழந்தைகள், அதன்பின் அம்மா, அப்பா வர நின்மதியுடன் பங்கரிற்குள் நான் குதித்த வேளை, கூவியபடி வந்து வீழ்ந்தது எறிகணை. சற்று நேரத்தின்பின் எட்டிப்பார்த்தேன். இரத்த வெள்ளத்திற்குள் சபா அண்ணையும் அவரது சகோதரியும் மகளும் உடல்சிதறிப் பலியாகிக்கிடக்க தன் உடம்பில் பட்ட காயங்களையும் உணராது ஏங்கிப்போய் இருந்தார் அவரது மனைவி. அப்பப்பா.... அந்தக் கணத்தை மறக்கவே முடியாது.

காயமடைந்தவர்களுக்கு இயக்கத்தால் சிகிச்சை அழிக்கப்பட்டு உடனடியாக வன்னிக்கு ஏற்றப்பட்டனர். இனியும் இங்கு இருக்கமுடியாது ஒன்றில் வன்னிக்கு அல்லது வலிகாமம் எப்படியாவது போய்விடுவது தான் என்ற எண்ணத்துடன் சில பொருட்களையாவது எடுப்போம் என வீட்டிற்குப் போனோம். அங்கே... எம் கண் முன்னே வீடு உருக்குலைந்து அகோரமாய்க் காட்சியழித்தது அப் பகுதியில் அநேகமாக எல்லா வீடுகளுக்கும் அந்த நிலைதான் அழக் கூடமுடிய வில்லை நடந்தோம் எல்லாமே வெறுமையாக அப்பப்பா... இன்னமும் துன்பம் எமை விடுவதாயில்லை போகும் இடமெல்லாம் எறிகணை வீச்சும் கிபிர் அடியும் எம் கண்முன்னேயே பல உயிர்கள் துடிதுடித்து இறந்தன. ஒரு கட்டத்தின்பின் சாவுகள் எமக்கு சாதாரணமாகிப் போனது.

தினமும் செத்துச் செத்துப் பிழைத்ததனாலோ என்னமோ தெரியவில்லை எதிரே விழுந்த பிணங்களை எண்ணிப் பார்த்தபடியே நடந்தோம்.

ஆசாரங்கள் அனுட்டானங்கள் பார்த்து ஊர்கூட்டி சடங்கு செய்து நான்கு பேர் சுமக்க நாற்பது பேர் அழுது கதற தகனம் செய்யப்பட்ட உடல்கள், கிடைத்த இடங்களில் எல்லாம் எரிக்கப்பட்டன, கிண்டிய பதுங் குழிகளிலெல்லாம் புதைக்கப்பட்டன, சிலது அடக்கம் செய்ய ஆள் இல்லாது அப்படியே கிடந்தது. ஆங்காங்கே இறந்து போய்க்கிடந்த ஆடுகள், மாடுகள், நாய்கள் எல்லாவற்றையும் மொய்த்தபடி காகங்களின் இரைச்சல், சில நாய்களின் கத்தல். அழகான மாஞ்சோலைகளால் பூபாளம் பாடப்பட்டு தென்னஞ் சோலைகளால் தாலாட்டுப் பாடப்பட்ட எங்கள் ஊர் சுடுகாடாய் மாறி எமை துயில்கொள்ள அழைத்தது. உயிரைக் கையில் பிடித்தபடி கைதடித் தரவையைக் கடந்துசென்று கொண்டிருந்தோம் நாம். செத்துப் பிழைத்த அந்த பத்துநாள் போதும். பல கோடி ஆண்டுகளாயினும் நினைவை விட்டகலா அந்தத் துயர நாட்களைத் திரும்பிப்பார்க்கும் ஒவ்வொரு கணமும் நெஞ்சில் இரத்தம் கொட்டுகிறது.

**வீரபாகு நஞ்சி**

## கொழும்பிலிருந்து வந்த வாசகர் கடிதம்

# கொழும்பிலிருந்து ஒரு குமுறல்

கொழும்பு நகரத்தில் இள வட்டத்தினர் நிலை கண்டு மிக மன வேதனையோடு இதனை எழுதுகின்றேன். தமிழீழத்தில் வாழும் எம் உறவுகளும் இதனை அறிந்துகொள்ளவேண்டும் என்ற ஆதங்கத்தோடு இதனை எழுதுகின்றேன். 1995ம் ஆண்டுக்கு முன்னர் யாழ் மண்ணில் நாம் வாழ்ந்த வாழ்க்கையை அடிக்கடி அசை போட்டுப்பார்ப்பேன். என்ன கட்டுப்பாடு அதற்கேற்ற கலை, கலாச்சாரம், பண்பாடு, கையிலே புத்தகம், பாடசாலை, ரியூசன், படிப்பு, ஓய்வு நேரங்களில் மட்டும் விளையாட்டு இவை எல்லாவற்றையும் விட மண்மீது கொண்ட பற்று, பற்றினால் எம் சமூகத்திற்கு செய்ய நினைக்கும் பணிகள், ஈழவிடுதலைப்போராட்டத்தில் போராளிகளாக அல்லாமல் வெளியில் இருந்து கொண்டு பங்களிப்பு. அதன் மூலம் எம் மண்ணையும், மக்களை மீட்பதற்கான எமது போராட்டத்தினையும் எமது உரிமைகளை மீட்டெடுப்பதில் நாம் காட்டிய அக்கறை. எம் இளசுகள் மத்தியில் இவற்றை விட்டால் வேறெதுகுமே இவர்களுக்குத் தெரியாது. எந்நேரமும் போராட்ட சிந்தனை, போராட்டத்தோடு இரண்டறக் கலந்து விட்ட பண்பு, அத்தோடு யாழ். மண்ணுக்கென்று என்றுமே உரிய கல்வி, அதன்மூலம் போர்ச்சூழலுக்குள்ளும் எம் இளையோர்கள் நாட்டிய சாதனைகள் எத்தனை எத்தனை.

ஆனால் இவை எல்லாம் ஒரு குறுகிய காலத்துள் அதாவது 1995ம் ஆண்டு யாழ்ப்பாண இடப்பெயர்வின் பின் எம் உறவுகள் கொழும்பு நகரத்தை நோக்கி புலம் பெயர்ந்ததனால் எல்லாம் சுக்கு நூறாகிப்போனது. கலை, கலாச்சாரம், பண்பாடு தெரியாமல் இன்று வாழ்ந்துகொண்டிருக் கிறார்கள். இல்லை தம்மை வளர்த்துக்கொண்டிருக் கிறார்கள்.

கொழும்பில் வாழும் பெண்களின் நிலை இதுதான் நற்பண்புகளும், சீரிய நடத்தைகளுக்கும் உரியவர்கள்தான் பெண். ஆனால் இன்று கொழும்பிலோ இவை.எவை எனத் தெரியாமல் வாழுகின்ற பெண்கள்

## இளவட்டமும் கொழும்பு நகரமும்

தான் அனேகர். கொழும்பு வாழ் அன்புச் சகோதரிகளே! உங்கள் அனைவரையும் குறை சொல்லவில்லை. உங்களோடு வாழ்ந்துகொண்டிருக்கும் ஒரு சிலரைப்பற்றித்தான் எழுதுகின்றேன். நாகரிகம் என்ற போர்வையில் அலங்கோலமாகத் திரிவதைத்தான் நாம் அடிக்கடி பார்த்துக் கொண்டிருக்கிறோம். தமிழ்ப்பெண் என்றால் அவளுக்கென்ற நாகரிகம் அங்க அடையாளங்கள் இருக்கின்றன. ஆனால் இங்கோ பண்போடு காணமுடியாத பெண்கள்தான் அனேகர் இருக்கிறார்கள்.

சிங்கள மக்களைப் பொறுத்தவரைக்கும் அவர்கள் தங்கள் கலாச்சாரத்தை வெளிநாட்டுக் கலாச்சாரத்தோடு ஒன்றித்துப்போக நினைக் கிறார்கள். அவர்களுடைய கலாச்சாரத்திலே நாம் குறுக்கே நிற்கக்கூடாது. அதைவிட அது எமக்கு தேவையற்றதொன்றும் கூட. ஆனால் அக்கலாச் சாரத்தை எமதுகலாச்சாரத்துக்குள் புகுத்தி அதன் மூலம் நாகரிகம் என்ற பெயரோடு நடை பிணங்களாக திரியவேண்டாம். எமக்கென்றொரு மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு, பாரம்பரியம் என்று தனித்துவமான அடையாளங்கள் இருக்கின்றன. அதற்கான உரிமைகளைப் பெறுவதற்காகவும் தான் இப்போராட்டமும் நடந்துகொண்டிருக்கிறது. இதிலே உள்ள வேடிக்கை என்னவென்றால் ஆரம்ப காலங்களிலே கொழும்பு நகர் வந்து பிறந்து வளர்ந்த எம் சகோதரிகள் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் பேணிப்பாதுகாக்க மிக அண்மையிலேயே அதாவது 2 அல்லது 3 வருடங்களுக்கு முன்னர் கொழும்பு வந்து புதிய நாகரிகத்தைக் கண்டவர்கள் தான் தம்நிலை மறந்து நாகரிக வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

கோவிலுக்குப் போவதென்றால் கூட அதற்கென்றொரு கலாச்சாரம் எம்மக்களிடையே இருக்கின்றது. ஆனால் இன்று அங்கேயும் கலாச்சாரத்தை காணமுடியாது இருக்கின்றது. அங்கும் இதே அரைகுறை ஆடைகள். இதனால் எங்கள் ஆலயங்களிலும் புனிதமும் கெட்டுக்கொண்டிருக்கிறது.

இந்த இடத்திலே ஒரு திரையரங்கில் நடந்த உண்மைச் சம்பவத்தை சொல்லியாகவேண்டும். ஓ..... நீயும் நகரத்தில் இருந்து கெட்டுக் கொண்டிருக்கும் இளசுகளில் ஒருவன்தானோ எனக் கேட்பது புரிகின்றது. அன்று திரையரங்கு சென்றதினால்தான் அச்சம்பவத்தை என்னால் பார்க்க முடிந்தது. இரண்டு இளம் 17 - 18 வயது நிரம்பிய பெண்கள் யாரையோ எதிர்பார்த்து நீண்ட நேரக்காவல். அங்கு வரும் ஒவ்வொருவருடைய முகத்தையும் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஒருவரும் சிரிப்பதாகவோ அல்லது பேசுவதாகவோ இல்லை. சிறிது நேரத்தில் கிட்டத்தட்ட 18 வயது நிரம்பிய இரு இளைஞர்கள் வந்தார்கள். இவர்கள் மெதுவாக சிரிக்க அவர்களும் சிரித்தவாறே கிட்ட வர நீங்கள் தான் எங்களை போன் (Phone) பண்ணி வரச்சொன்னீங்களா? எனக் கேட்க பதிலுக்கு அவர்கள் ஆம் என்றார்கள். உடனே நால்வரும் ஒன்றாகத் திரையரங்கிற்குள் நுழைந்தார்கள். ஏற்கெனவே ஒருவரை ஒருவர் அறிந்திராத இவர்களை யாரோ ஒருவர் போன் பண்ணி வரச்சொன்னதும் வந்து விடுகிறார்கள். அவர்களின் இந்த நிலை கண்டு எனக்கு ஒரு கணம் தலைசுற்றிப்போனது. எத்தனை துணிவு இப்பெண்களிடம். வீட்டுக்கு, ரியூசனுக்கு போவதாகக் கூறிவிட்டு திரையரங்கு, BEECH, PARK என்று சுற்றுகின்றார்கள். இது தான் இப்பெண்களின் வாழ்க்கை. தங்கள் பெற்றோரையும் ஏமாற்றிக்கொண்டு தாங்களும் குட்டிச்சுவராகிக் கொண்டிருக்கிறார்கள்.

பெண்கள் தான் அப்படியென்றால் ஆண்களும் சளைத்தவர்கள் அல்ல. ஆண்கள் அவர்களும் தன்னிலை மறந்தவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நாகரிகம் என்ற போர்வையிலே கோதி வெட்டிய தலைமுடி, ஒரு காதுத் தோடு, கையிலே வளையல், சிலர் நீண்ட தலை முடியுடனும், நிலத்தோடு தேய்கின்ற நீளக்காற்சட்டை, கையிலே கையடக்கத் தொலைபேசி, வாயிலே சிகரட், இதைவிட அவ்வப்போது வாயிலே மதுபானப்புட்டிகள் ஸ்டைல் என்ற பெயரிலே தெருவிலே சிகரட் புகைக்கின்றதைப் பார்த்து பெரியோர்கள் காறித்துப்புகிறார்கள். ஆனால் இவர்களோ இதனை (அ) நாகரிகமாக்கிக் கொண்டார்கள்.

இடையிடையே நீலப்படம். அரசாங்கமும் அதனை ஊக்கிவிப்பது போல் திரையரங்குகளிலும் நீலப்படம். தேவையானபோது விலை மாதுகளையும் அணைத்துக்கொள்கிறார்கள். எல்லா இளைஞர்களும் அப்படியல்ல. எதைத்தான் வெல்ல நினைக்கிறார்கள் இந்த இளைஞர்கள்?

**செ.வி.முகிலன்.**




## புதிய ஆண்டே வருக

யுத்தங்கள் மறைந்து
சத்தங்கள் ஓய்ந்து-மண்ணில்
நித்தம் அமைதி நிலவ வரும்
புதிய ஆண்டே உம்மை
இருகரம் கூப்பி
இன் முகத்துடன் வரவேற்கின்றேன்
சாதிகள் ஒழிந்து
பேதங்கள் அழிந்து
மண்ணில் சமத்துவம் ஓங்க.
வரும் ஆண்டே உம்மை
வரவேற்கின்றோம்.
விடிகாலை புலர்ந்து-அதில்
மாவீரர் கனவு மலர்ந்து-மண்ணில்
மகிழ்ச்சி பொங்க வரும்
சமாதான ஆண்டே
உம்மை வரவேற்கின்றோம்.

க.சுதைதாசன்

## நீ தோண்டிப் பார்

சர்வதேசமே எம்
செம்மணியைத் தோண்டிப் பார்
வருவது வெறும்
முண்டங்களும் சதைத் துண்டங்களும்
எம் வயல்வெளியை
ஒருமுறை தோண்டிப் பார்
வருவதெல்லாம் உயிர் குடிக்கும்
கண்ணி வெடிகளும் பொறி வெடிகளும்
ஆனால் எம்
உள்ளங்களைத் தோண்டிப் பார்
வருவது. உன்னையும் வாழ வைக்கும்
வீரமும் காதலும் விருந்தோம்பலும்
இப்போ நீ எம்மை
பொரிந்து தள்ளாமல்
புறக்கணிக்காமல்
புரிந்து கொண்டிருப்பாய்.

கு.சுபாசினி

## நீ வருவாயென

இரவு முழுதும் என்
விழித்திரையை உனக்காக
திறந்து வைத்து காத்திருந்தேன்
நீ வருவாயென...ஆனால்
விடிந்த பொழுதுதான் உணர்ந்தேன்
நேற்று நீ அமாவாசைக்காக
விடுமுறையில் சென்றிருந்தாய் என.!

க. நகுலேஸ்வரன்

## வெளிநாட்டுக் காசு

தூக்கம் துறந்து
துயரம் சுமந்து
கண்ணிலே ஆயிரம்
கற்பனைகள் வளர்த்தபடி
அங்கோர் வெளிநாட்டில்
அடுத்தவன் பாதணிக்கு
அழுக்கு நீக்கிக்கொண்டிருக்கும்
அப்பாவி அண்ணனுக்கு
"கஸ்ரமாயுள்ளது அண்ணா,
காசு அனுப்பு" என்று
தொலைபேசி செய்கிறான்,
தொண்ணூறு தோழரோடு
மதுக்கடையில் தினமும் மகிழும்
மரியாதைக்குரிய தம்பி.

க.லிங்கராஜா

## இயலாது

வலிமை இல்லா நெஞ்சில்
இருந்து வரும்
வாக்கு மூலம்.

## மரணம்

நிலை மாறும் உலகில்
நிலைத்திரா மனிதனின்
நிரந்தர தூக்கம்.

## விடுதலை

சிறைப்பட்ட உள்ளங்களின்
சிந்தனையில் ஓடும்
கற்பனை குதிரை.

## வானம்

உலக வீட்டிற்கு இறைவன்
அளித்த ஒப்பற்ற கூரை.

மு. வ. சுதா

# ஊக்கமாத்திரை

# விடாமுயற்சியும் மன வலிமையும்

விடாமுயற்சி என்பது. ஒருவன் தொடங்கிய தொழில் முற்றுப் பெற அல்லது வெற்றிகொள்ள எடுத்த முயற்சியை இடையிலே நிறுத்திவிடாமல் தொடர்ந்து செய்வதாகும்.வாழ்கையில் முன்னேறும் எண்ணமுடையவன் இத்தகைய முயற்சியாளனாக இருத்தல் வேண்டும்

"துன்பம் உறவறினும் செய்க துணிவாற்றி இன்பம் பயக்கும் வினை" எனக் கூறுகின்றார் திருவள்ளுவர்.

" எதனையும் நான் திடும் என்று கண்டு பிடிக்கவில்லை பல்லாண்டுகள் ஊன் உறக்கமின்றி உழைக்க உதவி செய்தது எனது விடாமுயற்சியே.தான்" எனக் கூறுகின்றார் அல்வா எடிசன்.

"ஒருமுறை தொடங்கப்பட்ட ஒரு செயல் வெல்லப்படாதவரை விடப் படவே கூடாது. அதுவே விடாமுயற்சி" எனக் கூறுகின்றார் ஷேக்ஸ்பியர்.

"விடாமுயற்சியோடு அறிவுடன் இருந்து செயற்பட்டவனது வாழ்வில் செல்வம் பெருகும்" எனக் கூறுகின்றார் செனேகா.

இவ்வாறு பெரியோர்களின் அனுபவங்களும்.வாழ்வில் முன்னேறுவதற்கு விடாமுயற்சி தேவை என்பதை வலியுறுத்துகின்றன. ஒருதொழில் வெற்றிபெற வேண்டுமானால், அதற்கு முயற்சி தேவை என்பதை. "முயற்சி திருவினையாக்கும்" என்று வள்ளுவர் உணர்த்துகின்றார்.

தொழில் மன வலிமையுடன் தொடங்கப்பட்டால். முயற்சியின் பலனை நன்கு அடையலாம். செய்தொழிலால் உயர்வடைந்து புகழ் பெறுவதும், அல்லது தாழ்வடைந்து இகழ்ச்சியுறுவதும்.தொழிலைத் தொடங்கியவனின் விடாமுயற்சியைப் பொறுத்தது என் பதனை.

"முயற்சியுடையார் இகழ்ச் சியடையார்" என்னும் பழமொழி விளக்கு கின்றது.

விடாமுயற்சியுடையவனிடத்தில் ஒரு போதும் சோம்பல்தோன்றாது. உழைப்பே அவனது ஓய்வாக இருக்கும். அவன் தோல்வியைக் கண்டு துவள மாட்டான். தோல்வியே வாழக்கையின் முன்னேற்றத்திற்கு அடிப்படை என்பதை உணர்வான்.

அஃதனால் தோல்வி கண்டு மனம் தளராது மேலும் ஊக்கமும் உறுதியும் கொள்வான்.

ஒருவனுக்கு வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்னும் எண்ணம் மட்டும் இருந்தால் போதாது. அதற்கான முயற் சியும் இருக்வேண்டும். அம்முயற்சியைக் கைவிடாமலிருக்கத் தன்னம்பிக்கையும் வேண்டும். மேற்கொண்ட தொழிலை என்னால் செய்ய முடியும். அதற்குத் தேவையான வலிமையும். திறமையும் என்னிடம் உள்ளது என்ற நம்பிக்கையும் வேண்டும். தன்னால் முடியும் என்று தன்னை நம்புவதே தன்னம்பிக்கை. தன்னை நம்புவது மட்டுமல்லாமல். தான் சிந்தித்துத் தொடங்கிய தொழில் வெற்றி பெறும் என்னும் நம்பிக்கையும் அவனுக்கு இருக்க வேண்டும். இல்லையென்றால் தோல்வி மனப்பான்மையே அவனது தொழிலைத் தோல்வியடையச் செய்துவிடும்.

ஒருவன் செய்வதற்கு ஒரு தொழிலைத் தேர்ந்தெடுக்கும்போது தன்னுடைய அறிவாற்றலைப் பயன்படுத்த வேண்டும்.எதையும் தன்னால் செய்யமுடியும் என்று நம்புவதும் கூடாது. அதே சமயம் எதையும் தன்னால் செய்ய முடியாது என்று தள்ளிவிடவுங்கூடாது. தன்னிடம் உள்ள வசதி. வாய்ப்பு. திறமை. பொருள். கருவி.காலம். இடம். முதலியவற்றிற்குத் தகுந்தாற்போல் தொழிலைத் தேர்ந்தெடுக்கவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் கடினமானதாக இருக்கலாம். ஆனால் செய்யவே முடியாததாக இருக்கக் கூடாது.

ஒருவன் தேர்ந்தெடுத்த தொழிலை பற்றிய விவரங்களை அறிந்து கொள்வதற்கு. பெரியோர்களின் ஆலோசனைகளைப் பெறுதல் வேண்டும். வாழ்வில் முன்னேற விரும்புவோர்க்குப்பெரியோர்களின் ஆலோசனையும்.உதவியும் மிகவும் தேவையாகும். வாழ்க்கைப் பாதையில் நமக்கு முன்னே நடந்து சென்று அனுபவம் பெற்ற பெரியோர்கள். நம்மை உயர்ந்த பாதையில் வழி நடத்தக்கூடியவர்கள் என் பதை மறந்துவிடக்கூடாது. எனவே. அவர்களுடைய அனுபவமிக்க ஆலோசனைகளைக் கேட்டறிதல் வேண்டும். திசைகாட்டி இல்லாத கப்பல் எவ்வாறு தள்ளாடுமோ. அவ்வாறே ஆலோசனை கேளாதவனின் வாழ்வும் அமையும் திறமையில்லாதவர்கள் கூட ஆலோசனை கேட்டதால் பெரிய பெரிய சாதனைகளை நிகழ்த்திக் காட்டியிருக்கின்றார்கள்.

பெரியோர்கள் கூறும் ஆலோசனைகளை அப்படியே கேட்டுத் தன் மனத் திற்குள் வைத்துக்கொள்ளுதல் வேண்டும். அதன் பின்னர், முன்னே தான் அறிந்திருந்த வற்றையும். அவர்கள் கூறிய கருத்துக் களையும் கொண்டு. தன்னுடைய அறி வாற்றலினால் நன்கு சிந்தித்துத் தொழில் முறைக்கான திட்டம் வகுக்க வேண்டும். அதுவே தொழில் செய்முறைத் திட்டமாகும்

தொழிலைத் தொடங்கிச் செய் யும் போது பாதி நிலையில் பணம் இல்லாமல் போகலாம். அல்லாது தொழில் நடைபெறுவதற்கான வேறு பொருள் இல்லாமற் போகலாம். தொழில் செய்வதில் உயிர்ச் சேதம் உண்டாகலாம். இத்தகைய துன்பச் சூழ்நிலையில் தொழிலை எவ்வாறு தொடர்ந்து நடத்த முடியும் என்னும் மனத் தளர்ச்சி அவனுக்கு உண்டாகலாம். அத் தளர்வு அவனது முயற்சியைத் தோல்வியுறச் செய்யும் தடையாகும். அத்தடையை உடைத் தெறிந்தும். சமாளித்தும். அவன தொழிலைத் தொடர்ந்து செய்தல் வேண்டும். அத்துன்பச் சூழ்நிலைகளைக் கண்டு அவன் மனம் துவண்டு விடக்கூடாது.

தொழில் புரிபவனிடம் மனவலிமை அமைந்திருத்தலோடு. பொறுமைக் குணமும் இருக்க வேண்டும். தொழில் செய்வதில் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். மனவலிமையும் பொறுமையும் அமையப்பெற்றிருந்தால். தன் தொழிலினிடையே ஏற்படும் தடைகள். இடையூறுகள் ஆகியவற்றைக் கண்டு நிலை குலையாது நின்று. அவற்றைச் சமாளித்துத் தன் தொழிலைத் தொடர்ந்து செய்து முயற்சியில் வெற்றி காண முடியும். வாழ்வில்முன்னேற முடியும்.

எம். கதிரேசன்

# சொல்லவேண்டிவந்த பொய்கள்

நான் எனது குடும்பம் என்று பெரும் வசதி வாய்ப்புடன் வாழ்ந்த காலமது. எனது வீட்டில் மூன்று அண்ணாமார் வெளிநாட்டில் உள்ளனர். நான் தான் ஒரு பெண்பிள்ளை வீட்டில் மிகவும் செல்லம் என்னைக் குட்டி என்றுதான் எனது அம்மா அப்பா சொல்வார்கள். நான் எங்கு போனாலும் என்னைத் தனியாக விடுவதில்லை அப்பாதான் என்னைக் கூட்டிச் செல்வார் எனக்கு ரூபி என்ற நண்பி இருந்தாள் மிகவும் நெருக்க மானவள் அவள் மட்டும் எனது வீட்டிற்கு வருவாள் எனக்கு அப்பா காவலாக வருவதைச் சொல்லி சிரிப்பாள் அன்றிலிருந்து என்னுடன் அப்பா வருவதில்லை எனது நண்பியை நம்பி எங்கும் விடுவார்.

எனது அப்பா கமத்தொழில் செய்பவர் எங்கள் வீட்டில் நிறைய மாடுகள் உள்ளன. அதனை எமது வயல் காணியில் தான் அடைப்பது வழமை. ஒருநாள் நானும் எனது நண்பியும் இயக்கத்திற்கு போக வேணும் என்ற முடிவு எடுத்தோம். ஆனால் எனது அம்மா, அப்பா என்ர பிரிவை எப்படித் தாங்குவார்கள் என்று என் மனம் ஏங்கியிருக்கும். ஆனால் எனது நண்பி அவள் வீட்டில் ஒரே பிள்ளை தான் அவளே போக வேண்டும் என்ற முடிவு எடுத்துள்ளாள் ஆனால் எனக்கு 3 சகோதரர்கள் இருவரும் சேர்ந்து இயக்கத்திற்கு போக வேண்டும் என்ற முடிவு எடுக்கப் பட்டது எப்படிப்போவது என்றுதான் பிரச்சினை. அம்மா அப்பா சந்தேகப் படாதவாறு என்ன செய்யலாம் என்று நினைத்தோம். நாளாந்தம் இருவரும் மாலை நேரங்களில் அப்பாவுடன் வயலுக்கு மாடு அடைக்கபோவதாகவும் கூறி இருவரும் அவருடன் உதவி செய்வோம். இப்படியே நாளாந்தம் செய்து வந்தோம். ஒரு நாள் அப்பாவிற்கு சுகயீனம் காரணமாக எந்தவொரு வேலையும் செய்ய முடியாத அளவிக்கு இருந்தது. எனவே நானும் எனது நண்பியும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இயக்கத்திற்கு போக முடிவு செய்தோம். மாலை நேரம் வந்ததும் மாடுகளை பட்டியில் அடைத்துவிட்டு இருவரும் வயல் வரம்பு வழியாக இயக்க முகாமிற்கு ஓட்டமும் நடையுமாக சென்றுகொண்டிருந்தோம் செல்லும் வழியில் எனது மாமா வயலில் பட்டி அடைத்துக்கொண்டிருந்தார். அவர் எம்மைக்கண்டு எங்கு ஓடுறியள் என்று கேட்டார். அதற்கு நாம் என்ன செய்வது என்று தெரியாது உடனே சொன்னோம் அது எங்கள் மாடு ஒன்றைக் காணவில்லை அதுதான் தேடப்போகிறோம் என்று பொய் சொல்லிவிட்டு முகாமிற்கு சென்றுவிட்டோம்.

செ.வேழினி

குறுக்கெழுத்துப்போட்டி - 52




பெயர்:-
முகவரி:-

### இடமிருந்து வலம்

01. இராவணனின் தங்கை
10. பொய்க்குற்றம்.
15. காசு
20. சந்திரன்
23. குலம்.
40. பங்கு
43. தொடக்கம்.

### மேலிருந்து கீழ்

09. செருக்கு
14. நாள் (குழம்பியுள்ளது)
15. ஓசை.
18. உண்மை (குழம்பியுள்ளது)
26. ஆபத்து (தலைகீழாகவுள்ளது).
31. தாய்
34. நெருப்பு (குழம்பியுள்ளது)

## குறுக்கெழுத்துப்போட்டி இல.50 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

01. மட்டக்களப்பு.
09. கணையாழி.
17. மயக்கம்.
24. புதல்வன்.
30. மாதா.
33. ஆயம்.
36. தினகரன்.

### மேலிருந்து கீழ்

01. மல்லிகை.
09. கணை.
14. அம்புயம்.
33. ஆதி.
38. கனி.
48. பூ.

**இளையவர்களே!**
**மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.**

குறுக்கெழுத்துப்போட்டி,இல.52
வெள்ளிநாதம்
ஈழநாதம்.
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

## குறுக்கெழுத்துப்போட்டி இல.50 இன் பரிசுக்குரியவர்

இ.திருப்பரன்,
37,சிவநகர்,
உருத்திரபுரம்.

## குறுக்கெழுத்துப்போட்டி இல.50 இன், பாராட்டுக்குரியவர்கள்.

01. க. சதீஸ்குமார், பல்லவராயன்கட்டு, முழங்காவில்.
02. வ. சிறிரஞ்சன், கரிப்பட்டமுறிப்பு, மாங்குளம்.
03. தி. வரதராஜன், டிப்போ வீதி, கிளிநொச்சி.
04. ச. யாசோதா, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
05. க. பாமினி. முரசுமோட்டை. கிளிநொச்சி.
06. தெ.செல்வேந்திரன், துணுக்காய் மல்லாவி.,

இப் புவியில் மனிதனுக்குக் கிட்டக்கூடிய சிறந்த செல்வம், உடல் நலன். — ஸரதுஸ்திரர்

## காரைவாழ் மக்களுக்கு மற்றுமோர் சேவை
## வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து

30 செக்கன்களில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
எம்மை நாடுங்கள்

**WESTERN UNION | மணி டிரான்ஸ்ஃபர் SM**

## ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்

சிவன் கோவில் வீதி, காரைநகர்.

மேலும்:- விபரங்களுக்கு
ஸ்ரீமுருகன்
303,K.K.S வீதி,
யாழ்ப்பாணம்,

T.P - 02122253923212
Email : del-smskr@eurka.lk.

T.P : 0602212472

(சி-8837)

## கிளிநொச்சி மாவட்ட கமக்கார அமைப்புக்களின் சம்மேளனம் நடத்தும் இலட்சனைப் போட்டி

கிளிநொச்சி மாவட்ட கமக்கார அமைப்புக்களின் சம்மேளனத்திற்கான ஓர் இலட்சனையைத் தெரிவுசெய்யும் நோக்கோடு இப்போட்டி நடாத்தப்படுகின்றது.

### போட்டி நிபந்தனைகள் வருமாறு.

01) வயது எல்லை கிடையாது.
02) 3அங்குல விட்டமுள்ள வட்டத்துள் வரையப்படல் வேண்டும்.
03) சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.
04) கிளி/மாவட்ட விவசாய நடவடிக்கைகளை அடையாளப்படுத்தல் வேண்டும்.
05) விண்ணப்பம் அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 14.01.2004
06) நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

### பரிசு விபரம்

1ம் பரிசு - ரூபா 2500/=
2ம் பரிசு - ரூபா 1500/=
3ம் பரிசு - ரூபா 1000/=

### விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி

தலைவர்
கிளி/மாவட்ட கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளனம்,
கம நலசேவை நிலையம், கிளிநொச்சி (3938)

## இறுகிப்போன எதுவும் வளர்ச்சியடையாது
## தேங்கிப்போன எதுவும் மாற்றமடையாது

எம்மிடம் சகல புரட்சிகர நூல்களுடன்

- தரம் 1 முதல் தரம் 11 வரை புதிய பாடத்திட்ட பாட பொத்தகங்கள்
- பாட குறிப்பேடுகள் (கொப்பி)
- நாட் குறிப்பேடுகள் (டயறி)
- நாட்காட்டிகள்
- பள்ளிப் பொத்தகப் பைகள்
- நாளேடுகள், மாத / வார ஏடுகள் / பருவ இதழ்கள்

குறைந்த விலையில் பெற

| | | |
|---|---|---|
| கிளிநொச்சி | புதுக்குடியிருப்பு | முள்ளியவளை |
| விசுவமடு | வட்டக்கச்சி | முழங்காவில் |
| முள்ளியவளை | கந்தபுரம் | |

அறிவமுது பொத்தகசாலை
தொ.பே. 021 2283961
மி.அ. arivamvthu 2000yahoo com

(அ-8997)

## ஈழநாதம் மக்கள் நாளேட்டின் ஆண்டு மலருக்கான ஆக்கங்கள்

ஈழநாதம் மக்கள் நாளேடு எதிர்வரும் 19.02.2004 அன்று 15ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது. அதனை முன்னிட்டு வெளிவரவுள்ள ஆண்டுமலரில் பிரசுரிப்பதற்கு

- சிறுகதைகள்
- கவிதைகள்
- கட்டுரைகள்

என்பன ஆக்ககர்த்தாக்களிடமிருந்து கோரப்படுகின்றன.

ஈழநாதம்

- ஆக்கங்கள் சமூக, அரசியல், பொருளாதார, விஞ்ஞானத் துறைகள் சார்ந்தவையாகப் பரந்துபட்ட தளத்தில் ஆக்கப்பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது.
- ஆக்கங்களை 20.01.2004 இற்கு முன் கிளிநொச்சியிலுள்ள ஈழநாதம் பணிமனையில் கிடைக்கக்கூடியவாறு நேரில் அல்லது தபால்மூலம் அனுப்பிவைக்குமாறு கோரப்படுகின்றனர்.
- அனுப்புபவர்கள் தமது தெளிவான அஞ்சல் முகவரியைக் குறிப்பிடவும்.

ஆசிரியர்,
ஈழநாதம்,
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

# அமெரிக்க மண்ணில் கறுப்பு இலக்கியம்

# கறுப்புச் சேரியில் கலை மலர்ச்சி

ஹார்லம், கறுப்புப் பண்பாட்டின் தலைநகரம் நியூயோர்க் நகரத்தின் இதயப் பகுதியில் அமைந்த மிகப்பெரிய கறுப்புச் சேரி, இதற்கென்று தனியான தேவாலயங்கள், சமூகக் கூடங்கள், நாடக அரங்குகள், கடைகள், கேளிக்கை விடுதிகள் அனைத்தும் நீக்ரோக்களின் அடையாளங்களைப் பறைசாற்றிக் கொண்டு எழுந்தன.

இங்குதான் அமெரிக்க - ஆபிரிக்கர்களின் பண்பாட்டு மறுமலர்ச்சி விதையூன்றி, முளைவிட்டு, சிறு செடியாக நிமிர்ந்து, அபரிமிதமான ஆற்றலுடன் விழுதுகளோடு கால் பரப்பிய மரமாக எழுந்தது, அமெரிக்க தலித்துகளான நீக்ரோக்களின் இலக்கியமும், இசையும், பிற கலைகளும் புதிய வேகம் பெற்று வளர்ந்து, இன்று அமெரிக்க வெள்ளை உலகத்தாலும் மறுதலிக்கமுடியாத அளவுக்கு வளர்ந்து. ஹார்லம்மில் எழுதத் தொடங்கிய இலக்கியவாதிகள் ஒரே சிந்தனைப்போக்கு கொண்டவர்கள் என்று நாம் சொல்லிவிடமுடியாது. இவர்கள் தனித்தனிப் போக்குகளுடன்தான் இலக்கியம் படைத்தனர். லாங்ஸ்டன் ஹ்யூக்ஸ், ஆர்ணா பாண்டம்ஸ், சோரா ஹாஸ்டன், ருடால்ஃ. ப்ஃ. ப்ளிர் ஜீன்டுமர் என்று ஏராளமானவர்கள் தங்களது தனித்துவமான குரலிலேயே பேசினார்கள். ஆனால் அவர்களுக்குள் ஒரு கூட்டுக்கனவு இருந்தது.

அனைவருக்கும் பொதுவான கறுப்பு அனுபவம். இந்த கறுப்பு அனுபவம் இதற்கு முந்திய தலைமுறை கறுப்பு அடிமைகளுக்கும் தெரிந்திருந்ததுதான். ஆனால் அவற்றை எல்லாம் இலக்கியமாக, இசையாக, நாடகமாக, ஓவியமாக வெளிப்படுத்தத் தேவையான ஓய்வுடன் கூடிய ஒரு மத்தியதர வர்க்கம் அங்கே அப்போது இல்லை. ஹார்லம்மில்தான் முதல் முறையாக இத்தகைய ஓய்வுடன் கூடிய ஒரு அறிவுஜீவிகளின் கூட்டம் கூடி வாழத் தொடங்கியது.



இவர்கள் அனைவரும் கூடி கறுப்பு மனிதனுக்கான ஒரு புதிய உருவத்தைச் சமைப்பதில் முனைந்தனர். இவை அனைத்தும் வெற்றிடத்தில் மாயம் போல் தோன்றியவை அல்ல. 1920களில் ஏற்பட்ட சமூக, பொருளாதார, அரசியல் காரணங்களினால் நிகழ்ந்ததே 'ஹார்லம் மறுமலர்ச்சி' இந்தக் காலகட்டத்தில் எழுந்த 'புதிய யுகம்', 'புதிய ஒழுக்கம்', 'புதிய பெண்மை' ஆகிய கோஷங்களோடு 'புதிய நீக்ரோ' எனும் கருத்தும் முன்வைக்கப்பட்டது. இது ஹார்லம்மில் வைக்கோல் போரில்பட்ட தீப்பொறியாகப் பற்றி எரிந்தது.

1890களில் அமெரிக்காவின் தெற்குப் பகுதியிலிருந்தும், மேற்கு இந்தியத் தீவுகளிலிருந்தும் ஏராளமான கறுப்பர்கள் நியூயோர்க்கில் குடியேறினர். இவர்கள் அனைவரும் தங்குவதற்கு வீடு தேவைப்பட்டது. அப்போது லீனாக்ஸ் அவென்யூ சுரங்கப்பாதை அமைக்கப்படாத காரணத்தால், ஹார்லம்மில் இருந்த வீடுகளில் யாரும் வாடகைக்குப் போக விரும்பவில்லை. இந்த நேரத்தில்தான் ஃபிலிப்ஸ். ஏ.பேடன் என்ற கறுப்பு தரகு வியாபாரி, இந்த வீடுகளில் கறுப்பர்களை குடியேற்றித் தருவதாகப் பேசி பல கறுப்பர்களைக் இங்கு குடியேற்றினார். வெள்ளையர்களும், வாடகை கிடைத்தால் போதும் என்று மெத்தனமாக இருந்தனர். நாளடைவில் நிறைய கறுப்பர்கள் இங்கு குடியேறிவிடவே, வெள்ளை உலகம் திடீரென்று விழித்துக்கொண்டது. 'ஹட்சன்' எனும் ஒரு நிதி நிறுவனத்தின் உதவியுடன் கறுப்பர்கள் குடியிருந்த வீடுகளை விலைக்கு வாங்கி, அவர்களைக் காலிசெய்யுமாறு வற்புறுத்தியது. இப்போது ஃபிலிப்ஸ். ஏ.பேடன் நீக்ரோக்களுக்கென தனியான நிதி நிறுவனம் ஒன்றை நிறுவி, பல அடுக்கு மாடிக்கட்டடங்களை விலைக்கு வாங்கி, அதில் இருந்த வெள்ளையர்களை வெளியேற்றி, கறுப்பர்களை அங்கு குடியேற்றினார். இத்தகைய முயற்சியில் இன்னும் பல கறுப்பர்கள் முனைந்தனர்.

போரினால் நியூயோர்க்கில் ஏற்பட்ட தொழிலாளர் பற்றாக்குறையை நீக்க, தெற்குப் பகுதியிலிருந்து ஏராளமான கறுப்பர்கள் நியூயோர்க்கிற்கு வந்து இறங்கினர். இவர்கள் அனைவரும் ஹார்லம்மிலேயே சென்று தங்கினர். இவர்கள் அவர்களின் வாழ்நாளிலேயே கண்டறியாத கூலியைப் பெற்றனர். கறுப்பர்கள் பணம் சேமித்து வீடுகள் வாங்கத் தொடங்கினர்.

கறுப்பர்களின் தேவாலயங்களில் மதகுருக்கள் தங்கள் வழிபாட்டுப் பிரார்த்தனைகளிலும், பிரச்சாரங்களிலும் 'சொத்து வாங்குங்கள்' என்ற போதனையையும் சேர்த்துச்செய்தனர். இருபது ஆண்டுகளுக்கு முன்னர் வெள்ளையர்களிடம் தங்களுக்கு வீடுவேண்டும் என்று கெஞ்சிக் கொண்டிருந்தவர்கள், இன்று வீட்டின் சொந்தக்காரர்கள் ஆனார்கள். ஹார்லம் முழுக்க முழுக்க கறுப்பர்களின் குடியிருப்பானது.

இங்கு மகிழ்ச்சி, ஆடல், பாடல், உரத்த சிரிப்பலைகள், உச்சக்குரலில் பேச்சுக்கள் என்று அனைத்திலும் நீக்கிரோக்களுக்கான பண்புகள் இருந்தன. ஏதாவதொரு சாக்கில் ஊர்வலங்கள் அடிக்கடி நிகழ்ந்தன. கறுப்பு மனிதன் தனக்கான ஒரு சுய கௌரவத்தை இங்கு கண்டெடுக்க முடிந்தது. இந்தப் புதிய புரிதல் ஹார்லம்மில் ஒரு புதிய கலை இலக்கிய மறுமலர்ச்சியை உண்டாகியது. 1924ல் அமெரிக்க இலக்கிய வரலாற்றின் ஒரு பகுதியாக 'ஹார்லம் மறுமலர்ச்சி' (HARLEM RENAISSANCE) அங்கீகரிக்கப்பட்டுவிட்டது.

புதிய நீக்ரோ எழுச்சியின் சகலப் பண்புக்கூறுகளையும் ஹார்லம் மறுமலர்ச்சி பிரதிபலித்தது. கறுப்பு இலக்கிய மறுமலர்ச்சி என்று இதனை வர்ணிப்பதால், இது வெறும் இனவெறிவாதத்தால் மட்டும் நிகழ்ந்தது என்று நாம் தவறாகக் கணித்துவிடக் கூடாது. ழான் பால் சார்த்தர் ஒருமுறை குறிப்பிட்டது போல, ஜன்ஸ்டினின் பிரவஞ்சம் குறித்த சார்பியல் கோட்பாடு இலக்கிய உலகிற்கும் பொருத்தமானதுதான்.

அமெரிக்க வெள்ளையர்களின் உலகினுள் நிகழ்ந்த சில பண்பாட்டுக் கலகங்களும்கூட இந்த கறுப்பு இலக்கிய மறுமலர்ச்சிக்குக் காரணமாக இருந்திருக்கின்றன. முதல் உலகப் போருக்குப் பிறகு, உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாறுதல்களும் கூட இதன் மீது ரேகை பதித்திருக்கிறது.

இதன் முக்கிய போக்குகளாக இவற்றைக் குறிப்பிடலாம். (1) அமெரிக்க கலை இலக்கியத்தில் கறுப்பர்களின் சிறப்பான பங்களிப்பைக் கண்டெடுத்துச் சிறப்பித்தது. (2) தொடக்க கால கறுப்பு இலக்கிய முயற்சிகளில் இருந்து வெள்ளையர்களின் இலக்கியப் பாணிகளைப் போலி செய்யும் வான்கோழித்தனத்தை வன்மையாகக் கண்டித்து ஒதுக்கியது. (3) நீக்ரோக்களின் அன்றாட வாழ்வின் சிறப்பம்சங்களை இசைப்பாடல்கள், மக்கள் இசை, நாட்டுப்புறக்கதைகள், பண்ணை அடிமை நாட்களின் விடுகதைகள், பழமொழிகள் இவற்றை எல்லாம் உயர்த்திப் பிடித்தது. (4) இலக்கியத்திற்கான கருப்பொருள்களை, அன்றாட வாழ்விற்கான சவால்களை எதிர்கொண்ட ஏழை மக்களின் அனுபவங்களிலிருந்து தேர்ந்தெடுத்தது. (5) நீக்ரோக்களை அடிமைப்படுத்தும் முயற்சிகள் அனைத்திற்கும் எதிராக கலகக் குரல் எழுப்பி, அவற்றை எதிர்த்தது.

ஆனாலும் ஹார்லம் இலக்கியவாதிகள் அனைவரும் ஒரே சிந்தனைப்பள்ளியைச் சேர்ந்தவர்கள் அல்ல. ஹார்லம் நியூயோர்க்கின் முக்கிய பகுதியில் அமைந்து இருந்ததால், பல தனிப்பட்ட கறுப்பு எழுத்தாளர்கள் அங்கு கூடி வாழ்ந்தனர். அவர்களைச் சரியான திசையில் கொண்டுசெல்ல ஆலய்ன் லோக்கே, சார்லஸ். எஸ்.ஜான்சன் போன்ற கறுப்பு அறிஞர்கள் இருந்தார்கள்.

1919ல் 'சிவந்த கோடை காலம்' என்று அழைக்கப்பட்ட காலகட்டத்தில் இருபத்தைந்து நகரங்களில் வெள்ளையர்கள் நீக்ரோக்களின் மீது பயங்கர வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டனர். இந்த அனுபவம் ஹார்லம் எழுத்தாளர்களிடம் ஒரு புதிய புரிதலை உண்டாக்கியது... அவர்கள் கறுப்பர்கள்தான் உன்னதமானவர்கள் என்று உரத்துப் பேசினார்கள். லாங்ஸ்டன் ஹ்யூக்ஸ் 'நதிகளைப் பற்றி நீக்ரோ பேசுகிறான்' என்ற கவிதையில் சொல்கிறார்.

"நான் நதிகளை அறிவேன்.

இந்த உலகத்தைப் போன்ற பழமையான நதிகளை. மனித உடலின் இரத்த நாளங்களில் ஓடும் இரத்த ஓட்டத்தைக் காட்டிலும் பழமையான நதிகளை நான் அறிவேன்.

எனதுஆன்மா இன்நதிகளைப் போன்றே ஆழமானது. விடியல்கள் குழந்தைகளாக இருந்தபோது நான் யூப்ரடீஸ் நதியினில் குளித்திருக்கிறேன் காங்கோவுக்குப் பக்கத்தில் நான் குடிசைகளைக் கட்டியபோது அது என்னைத் தாலாட்டிசைத்துத் தூங்க வைத்தது"

என்று இனப்பெருமை பேசுகிறார் அதேநேரத்தில் ஹார்லம்மின் அரசியல் கோட்பாடான 'நிபந்தனையுடன் கூடிய ஒற்றுமை' என்பதை வெள்ளை அமெரிக்காவின் முன் வைத்தனர் இந்த எழுத்தாளர்கள்.

ஹார்லம் மறுமலர்ச்சியை, அதன் முக்கிய பங்களிப்பாளராக இருந்த ஆர்ணா பாண்டம்ஸ் இரு பகுதிகளாகப் பிரிக்கிறார்.



முதலாம் காலகட்டம்: 1921-24 களில் கறுப்பு இலக்கியத்தில் இனப்பெருமையைப் பறைசாற்றும் பிரச்சார காலகட்டம். தங்களது தனி அடையாளங்களை வற்புறுத்தி, அவற்றைச் சிறப்பித்தது. இது வெள்ளையர்கள் சோடித்து வைத்திருந்த கறுப்பு மனிதனுக்கான வர்ணனையை உடைத்துப்போட்டது.

இரண்டாம் காலகட்டம்: 1924-31 களில் வெள்ளை இலக்கிய உலகத்தின் அங்கீகாரத்துடன் நிகழ்ந்த கலைநேர்த்தியும், இலக்கிய பரிசோதனைகளும் நிகழ்ந்த காலம்.

முதல் காலகட்டத்தில் பிரச்சாரம் என்கிற அளவில் 'THE CRISIS', THE OPPORTUNITY' ஆகிய இரு இதழ்கள் மிக முக்கிய பணியாற்றின. இவை கறுப்பு எழுத்துக்களுக்கான பல பரிசுப் போட்டிகளை ஏற்பாடு செய்தன.

இந்தக் காலகட்டத்தில்தான் லாங்ஸ்டன் ஹ்யூக்ஸ், கவுன்ட்டி கல்லன் போன்ற கவிஞர்கள் மிக மலிவான விலையில், தங்கள் கவிதைத் தொகுப்புகள் மிகச் சாதாரண மனிதனுக்கும் கிடைக்கும் வகையில் வெளியிட்டனர். இந்தக் காலகட்டத்தில் Paperback books என்று அறியப்பட்ட மலிவுப் பதிப்பு நூல்களை அமெரிக்காவில் யாரும் கேள்விப்பட்டதில்லை.

1924ல் சார்லஸ் எஸ். ஜான்சன் 'வெளியே வாருங்கள்' எனும் ஒரு விருந்தை அமைத்தார்.

(மிகுதி அடுத்தவாரம்)

## பொறுக்கி எடுத்த பூக்கள்

### இது அறிஞர் அண்ணாவின் மதம் பற்றியது

அண்ணா ஒரு நாத்திகர்
அவருக்கு ஏது மதம் என்று கேட்பது புரிகிறது. எம்மதமும் சம்மதம் என்ற கருத்து அவருக்கானது.

ஒருவர் அவரிடம் நீங்கள் என்ன மதம் என்று கேட்டபோது;

நான்- சிலுவை அணியாத கிறிஸ்தவன், கைலி கட்டாத முஸ்லிம், திருநீறு பூசாத இந்து, துறவியாகாத பௌத்தன்.. என்று கூறினார்.

### இது 'இல்லாதவை' பற்றிய ஒரு கவிதை

கல்லோடு மண்ணையும்
கலக்காத அரிசி-பருப்பு
செங்கட்டித் தூளோடு கலக்காத
மிளகாய்த்தூள்
நீரோடு கலக்காத
பசுப்பால், பனம்பால்
தவிடு கலக்காத தரமான சர்க்கரை
அரைத்த பழஞ்சோறு
கலக்காத பருப்பு வடை
வண்போடு புழுக்கள் சேர்க்காத
பாண்வகைகள்-மற்றும்
இனவாதம் கலவாத அரசியல்
இந்நாட்டில் இல்லைக் காண்!

-நிலா தமிழின் தாசன்

### இது ஹிட்லர் காலத்து விஷயம் மட்டுமல்ல

ஜெர்மானிய சர்வாதிகாரி இரண்டாம் உலகப் போரைத் தொடங்குமுன்னர் அங்கு பணவீக்கம் இருக்கவில்லை. ஆகவே விலைவாசிகளும் உயரவில்லை. யுத்தம் ஆரம்பித்தப் பின்னர் பணவீக்கம் அதிகரித்தது. பணத்தின் மதிப்பு வெகுவாக வீழ்ச்சிகண்டது. முன்னர் ஒரு 'பேர்ஸில்' பணத்தை எடுத்துப் போய் ஒரு கூடை நிறைய முட்டைகளை வாங்கிய மக்கள் பின்னர் ஒரு கூடை நிறைய பணத்தை எடுத்துச்சென்று ஒரு சிறு பையுள் முட்டைகளை வாங்கினார்கள்.

-ஒரு வரலாற்றுக் குறிப்பிலிருந்து.

### இவை மகுடியாரின் பதில்கள்

- ☐ அலுவலக வேலை முடிந்ததும் நேரேவீட்டுக்கு வந்திட வேண்டுமென்று மனைவி சட்டம் போட்டிருக்கிறாளே?
- ☐ திருமணம் செய்தவர்கள் அவசர கால சட்டத்தின் கீழ் தான் வாழ்கிறார்கள்
- ☐ இறைவன் எப்போது சிரிக்கிறான்?
- ☐ சிகரட் புகைப்பவனைப் பார்த்து சோதிடன் நீ நூறு வயது வரை வாழ்வாய் என்று கூறும் போது...
- ☐ யார் சிறந்த சட்டத்தரணி?
- ☐ மனைவி தான் சம்பள நாளன்று கணவனைக் குற்றவாளியாக்கி குறுக்கு விசாரணை செய்து மடக்குவ தை பார்த்ததில்லையா?

### இவை 'ஓட்டோ' வாசகங்கள்

- ☐ "நீங்கள் வேகமாகச் செலுத்தச் சொன்னாலும் நான் விவேகமாகத் தான் செலுத்துவேன்"
- ☐ "எந்தப் பொருளையும் மறந்து வாகனத்தில் விட்டு விடாதீர்கள் அடுத்து ஏறும் பயணிக்கு அது உரிமையானதாகி விடும்..."
- ☐ வேகமான மேலூர்ப் பயணத்திற்கு உரியதல்ல...
- ☐ நிதானமான உள்ளூர் பயணத்திற்கு மட்டும்

### இது பாலகுமாரனின் (எழுத்தாளர்) கருத்து

மனிதன் அடிப்படையில் எதிலுமே நம்பிக்கைய ற்றவன். இன்றையசூழல் இந்த நம்பிக்கையின்மையை அதிகப்படுத்துகிறது. கலைப்படைப்புக்கள் இதை விபரீத்துக் காட்டி ஜெயிக்கத் துடிக்கின்றன

மக்கள்மேல்காதல்உள்ள கலைஞன்இதைச் செய்யவே மாட்டான். தன்னைக் கூடகாதலிக்கத் தெரியாதவன் எப்படி மக்களைக்காதலிக்க முடியும்?

பொறுக்கி

## பாடசாலை மாணவர்களுக்கிடையிலான தேசிய மட்ட சிறுகதைப் போட்டியில் முதலாம் பரிசுப் பெற்ற சிறுகதை

# இலட்சியப் பயணம்

மழை வருவதற்கான அறிகுறியாக வானம் இருள் கவிந்து தென்படுகிறது. தனது பாயையும் தலையணையுடன் சுருட்டியபடி விரைந்து கோயில் மண்டபத்தை அடைந்தான் அவன். அங்கே அவனது தாயார் விளக்குநிழலைப் போன்று சுருண்டு கிடந்தாள். அவனது நெஞ்சம் மிகவும் துயருற்றது. இனி அவர்களது வாழ்வும் கேள்விக்குறியாகி விட்டநிலை. அவனது அரவம் கேட்ட தாயார் சிறிது அசைந்தது.

"என்ன மோனை வந்திட்டியாடா? விடிஞ்ச கனநேரம் போட்டுதா. ஒண்டுமே தெரியாமக்கிடக்கு. எல்லாம் தலைவிதி ம்.." தாயின் பேச்சு பெருமூச்சோடு முடிவடைகிறது.

"நான் இந்த இத்திமரத்துக்கீழ படுத்தனான். மழை வருமாப்போல கிடந்தது. அதுதான் வந்திட்டன்.இனி மழை காலம் வந்தா எங்கயணை தங்கிறது. இந்த கோயில் மண்டபத்தில எத்தின நாளெண்டு கிடக்கிறது" இவ்வாறு அவன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றான்.

"இந்த மனுசரும் விடுகளில கிடந்து சாகுதுகள். வந்து ஒருநாள் முடிஞ்ச போச்சு மோனை. உடுத்தின் துணியோட வந்தனாங்கள்தானே? இனிச்சாப்பாட்டுக்கும் ஒருவழியும் இல்ல ராசா" அம்மா நீர் ததும்பும் விழிகளுடன் கூறும் வார்த்தைகள் மனதை வேதனையடைய வைக்கிறது.

"அம்மா இஞ்ச போய் ஏதாவது இடம் கிடைக்குமே எண்டு பார்த்துக் கொண்டுவாறன். நீங்க கவனமா இருங்கம்மா" என்றான் அவன்.

"வேண்டாமடா தம்பி மழையெல்லே வரப்போகுது. ஊரும் தெரியாது. பேசாமக்கிட. சொன்னாக் கேள்" என்றாள் அவன் தாய்.

"இதையெல்லாம் பார்த்தா நடுத்தெருவிலதான் நிக்கோணும். இண்டைக்கு மழைக்குப் பயந்து நிண்டா என்னாம்மா செய்யிறது. நாளைய நினைக்க வேண்டாமா?" என அவன் கேட்க ம்கூம்.... பெருமூச்சு ஒன்று தாயாரின் பதிலாகிறது.

மண்டபத்தைவிட்டு வெளியே வந்தான். மப்பும் மந்தாரமுமாக இருந்தது. வீதியை நோக்கி நடக்க ஆரம்பித்தான் அவன். அதற்கிடையில் மின்னல் வெட்டியது. மழைக்குக் கட்டியம் கூறுவதாகி இடி சடசட என முழங்கியது. அவன் மனம் முழுவதும் அப்பிக்கிடந்த துக்கம் எதிர்காலப்பயம் என்பன சுற்றுப்புறச் சூழலை கிரகிக்கத்தடை போட்டது. கால்போன போக்கில் நடந்தவனை "ம்மா... அம்மா. பசிக்குது ம்...." என்ற அழுகுரல் சுயநினைவிற்கு கொண்டு வந்தது.

ஆ.... சின்னஞ்சிறு சிசு பசியால அழுகிறது. 'எம்மைப்போல இன்னும் எத்தனை அகதிகளோ? அவர்களிற்கு எத்தனை துன்பமோ? அப்பப்பா நாம் என்ன பாவம் செய்தோம்' நினைத்தபடி நடந்த அவன் மனம் இறந்தகால நிகழ்வுகளை அசைமீட்டியது....

ஈழமணித் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள சப்த தீவுகளில் அருட்தீவாகவும் ஆன்மிகத்தீவாகவும் அடியார்களை அரவணைக்கும் தீவாகவும் அன்றும். இன்றும் திகழும் நயினை மணித்தீவிலே பிறந்தான் அவன்.அவனது பெயர் சூரியா.

அவனது தந்தையார் பெயர் இராசன். அவர் யாழ்பாணத்திலே இருந்து வியாபாரம் செய்பவர். குமுதினிப் படகு படுகொலையின் போது அநியாயமாக வெட்டுப்பட்டு இறந்தார். அப்போது தாய் துடித்த துடிப்பு சிறகிழந்த பறவைபோல என எண்ணவைத்தது.பொட்டற்று பூவற்று வெள்ளைச் சேலையோடு எத்தனை பெண்கள் விதவைகளாக அன்று ஆக்கப்பட்டனர். அந்தத் துன்பத்துடனேயே தனது மகனையும் அழைத்துக் கொண்டு அவனது தாய் வன்னிக்கு வந்து குடியேறினார். அன்று அப்பாவின் தலை மட்டும் கிடைத்தபோது அவனது தாயார் அழுத அழுகை. அத்தனை துன்பங்களிற்கும் மத்தியில் வீடு வீடாக மாவிடித்து சூரியாவை பாடசாலையில் சேர்த்துப் படிக்க வைத்தாள். அவனது வயிறு வாட அவர் விட்டதில்லை. தன் உணவைப் பாராது மகனையே கருத்திற் கொண்டு உழைத்து அவனைப்படிக்க வைத்தார். அவன் தரம் பதினொன்றில் கல்வி கற்றபோது தான் யாழ் மண்ணில் இருந்த மக்கள் புலம் பெயர்ந்து வன்னி வந்தனர்.

மக்கள் தொகையைத் தாள மாட்டாகு வன்னி மண் தடுமாறியது. உணவுப் பஞ்சம் உறையுள் பஞ்சம் எனப் பஞ்சமும் பட்டினியும் வன்னியின் மூலைமுடுக்கெங்கனும் தலைவிரித்தாடியது. மக்கள் தொகை அதிகரிப்பால் சூரியாவின் தாயாரின் வேலை வாய்ப்புகளும் நழுவியது. அப்போதெல்லாம் மூன்று வேளை உணவாகவும் மரவள்ளி இலைகள் உணவாகின. காலச்சக்கரம் மிக வேகமாக உருண்டோடியது. நாட்கள் வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகி மாதங்கள் வருடங்களாகின. அந்த ஒரு வருட இடைவெளியின் பின்தான் நடந்தது இந்த அசம்பாவிதம். போர் எனும் உயிர்குடிக்கும் அரக்கனின் கொடிய பார்வை கிளிநொச்சி மண்ணை நோக்கித் திரும்பியது.

இயந்திரப்பறவைகள் கிளிநொச்சியையும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் குண்டுமழை பொழிந்தன. ஏறிகணைகள் சரமாரியாக ஏவப்பட்டன. மக்கள் ஊரிழந்து. உறவிழந்து உயிரிழந்து. அங்கமிழந்து புலம் பெயர்ந்தனர் அக்கராயன் மண்ணை நோக்கி.

பனையாலே விழுந்தவனை மாடேறி மிதித்தாற்போல் யாழிலிருந்து இடம் பெயர்ந்து கிளி நகரிற்கு வர அங்கும் யுத்தம் தாளாமல் மீண்டும் புலம்பெயர்வு அக்கராயன் மண்நோக்கி அமைந்தது. அப்போதுதான் மக்கள் சமுத்திரத்திலே சிறுதுளி நீராய் சூரியாவும் தாயரும் வந்தனர். அவர்கள் அதாரவாக நின்ற வேளை. யுனிசெப் நிறுவனம் பாயும் தலையணையும் வழங்கியது. அவர்கள் இருவருக்கும் அபயமளித்தது இறைவனின் சன்னிதானம்....நினைவலையில் கட்டுண்டு கிடந்தான்.ஒரு வாகனத்தின் ஒலிகேட்டு சுயநிலைக்கு வந்தவன். தான் நின்ற இடத்தின் அருகில் இருந்த வீட்டைக் கண்டு சிந்தனை வயப்பட்டான்.

'இந்த விட்டில இருக்கிறவையள் வசதியானவை போல கிடக்கு. இங்க வேளை கேட்டா என்ன?' நினைத்தவன் உடனே செயலாற்றினான்.

"வீட்டுக்காரர் வீட்டுக்காரர்" அவனது அழைப்பு கேட்டு வீட்டுப் படலை திறந்தது. ஒரு பருத்த பெண்மணி கையில் நாயுடன் நின்றிருந்தார்.

"அம்மா உங்கட வீட்ட ஏதாவது வேலை கிடைக்குமே" எனத் தயங்கியபடி கேட்டான்.

"வேலையோ? வேலையெண்டு கேட்டு உள்ளுக்க வாறது. பிறகு எம்பிட்டத்தை தூக்கிக்கொண்டு ஓடுறது. இதுதானே வேலை உங்கட" என்று உச்ச ஸ்தாயியில் கத்தினாள் அந்தப் பெண்மணி.

"அம்மா ஏன் இப்படி சொல்லிறியள்? நாங்க இடம் பெயர்ந்து வந்தானங்கள்" என்றான் சூரியா.

"ஓ! அகதியளே.இந்த அகதி நாயளுக்கு இந்த நாய்தான் சரி"

என்றபடி கையில்லிருந்த நாயைப் பிடித்து ஏவினாள். நாய் ஆக்ரோசமாகக் குரைத்தபடி பாய்ந்து வந்தது.

"அம்மா வேலை வேணாம் நாயைப் பிடியுங்கோ" எனக் கத்தியபடி ஓட்டம் பிடித்தான் சூரியா. மூச்சிரைத்து. ஒரு மரத்தின் கீழ் அமர்ந்தபடி சிந்தித்தான்.

'இவைய மாதிரியா எல்லாரும் இருக்கினம். வேற எங்கயாவது போய் கேட்டுப் பாப்பம்' என எண்ணி வேறு வீட்டுக்குச் சென்றான்.அங்கு இதைவிட அதிக அவமரியாதை.

"வயித்தப் பாத்தா போதுமா? மானத்தை காப்பாத்திக்க வேணாமா" என ரஸாக் சகீனாக் கிழவிக்கு கூறியது நினைவில் வந்தது.தரம் பத்தில் ,கற்றது.

அவன் மனம் துன்பத்தால் துவண்டது. உடல் பசியால் துவண்டது. கோயிலை நோக்கி நடந்தான்.அங்கு கோயிலில் மயக்கமாகிக் கிடந்தாள் தாயார். கேணியிலே நீரெடுத்து முகத்தில் தெளித்து சிறிது புகட்டியும் விட்டான். அவர் கண்விழித்து "சூரியா எனக்கு பசிக்குதுப்பா தாங்க முடியவில்லையே" என அரற்றினாள்.



சிலர் நல்லுள்ளம் கொண்டவர்களா கையால் சிறிது ஆகாரம் அளித்தனர். தாய்க்கு ஊட்டினான் சூரியா. மீதி உணவை தானும் உண்டான். மாறுநாள் ஆகாரத்திற்கு என்ன செய்யமுடியும்? யோசித்து யோசித்துப் பார்த்தான்.இறுதியில் தருமம் எடுப்பது என்ற முடிவுக்கு வந்தான். வீதியிலே போய் ஒரு தகரடப் பாவைக் குலுக்கியபடி நின்றான். சிலர் ஐம்பதுசதம்.ஒரு ரூபாய் இட்டுச் சென்றனர். பலர் இளக்காரமாய்ச் சிரித்து விட்டுச் சென்றனர்.

அப்போது தேனீர் விடுதியொன்றில் 'சிரித்து வாழ வேண்டும் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே' என்ற பாடல் ஒலித்தது. மனம் சஞ்சலமடைய சூரியா கோயிலை நோக்கி நடந்தான்.அங்கே மக்கள் கூட்டம். அங்கு ஒரு பெண்மணி.

"கிளிநொச்சியில இருந்து இடம் பெயர்ந்த சனங்களாம்.தாயும் மகனும் இஞ்சதான் தங்கினதுகள்.இப்ப மகனைக் காணேல்ல. கிழவி சீவன்போய்க் கிடக்குது" என்று கூறிக்கொண்டிருந்த சூரியாவுக்கு உலகம் காலடியில் நழுவியது. "அம்மா...!!" அது தாயை இழந்த சேயின் கதறல் இறுதியாக் மகனின் முகத்தைக் காணாமல் இறந்த தாய். அவனிற்கு தாங்கவில்லை. தாயின் சடங்கை நிறைவேற்றினான். அவனது பொழுதுகள் சோகமாய் நீண்டன. தனிமையுடன் சோகம் பகிர்ந்தான். தலையணை கண்ணீரில் தோய்ந்தது.

'இட்டமுடனே என் தலையில் இன்னபடி எழுதிய இறைவனும் செத்துவிட்டானோ முட்டமுட்டப் பஞ்சமே ஆனாலும் பாரம் அவனுக்கே' என்ற வரி நினைவில் சுழல்கிறது. ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும் மாண்டார் மீள் வாரோ என எண்ணுகிறது மனம்.

எழுந்து அமர்ந்தான். அப்போதுதான் அருகில் இருந்த வயோதிபர் கண்ணில் தென்பட்டார். சூரியா அவரிடம் சென்றான்.

அவரிடம் தனது சோகக் கதையைக் கூறி ஆறுதல் அடையவேண்டும் போல் இருந்தது. "ஐயா நீங்களும் இடம் பெயர்ந்தே வந்தனீங்கள்" எனக்கேட்டான் சூரியா."ஓமப்பா. நானும் இடம்பெயர்ந்தனான் தான். நான் என்ர கடமையை செய்யத்தவறிவிட்டன் அது தான் இப்பிடி அகதியாய் வாழுற நிலைமை எங்களுக்கு" என்று மனத்துயருடன் கூறினார்.

"என்ன கடமையய்யா? என்ன தவறினீங்கள்? ஒண்டும் விளங்கேல்லை"

"நீ இளைஞன் உனக்கு இப்ப விளங்காது. எனக்கு காலங்கடந்த ஞானோதயம். உனக்கெண்டாலும் உன்ர கடமையை சொல்லுறன்."

"என்னையா என்ர கடமை? விவரமா சொல்லுங்கோ"

"தம்பி மனிதனாப் பிறந்தவனுக்கு மூதற் கடமை தாய் தந்தையை மதிக்கோணும். பிறகு அவர்களை வயோதிப காலத்தில பேணோணும்.அடுத்ததா தாய் மொழியைப் பேணோணும் தாய் நாட்டைக் காக்கோணும்.சமாதானம் மலர எங்கட பணியைச் செய்யோணும்"

"விளங்குதையா எனக்கு முதற் கடமையா தாய் தந்தையைப் பேணக் குடுத்து வைக்கேல்ல. இனி தாய் மொழியை காக்கோணுமெண்டா எங்க தனித்துவத்தை காக்கோணுமெண்டா நாங்கள் தாய் நாட்டை மீட்கோணும்"

"இப்பதான் தம்பி நீ தமிழன். தமிழ் மறவன்."

"ஐயா நீங்கள் உங்கட தலைமுறை சரியாகக் கடமையை செய்யாததால நாங்களா அகதிகளகயிட்டம். எங்கட தனித்துவம் நசுக்கப்பட்டு வருகுது. இனிவாற தலைமுறையள் சந்தோசமாக சமாதானமா தமிழ் அன்னையின் மைந்தர்களா வர வேணும். வாழவேண்டும்."

"தம்பி நீ போய் வா! உன் தமிழன்னையைக் களங்கப்படுத்துவோரைச் சாடுவதே. எதிர்ப்பதே உனது கடமை. வெற்றித் திலகமிட்டு வழியனுப்ப உன் அன்னையில்லை. நான் கடமையை மறந்த பாவி வழியனுப்புகிறேன் போய் வெற்றியோடு வா" என்றார் அந்த முதியவர்

"இனி தமிழன்னையைக் காப்பதே தலையாய கடமை தக்க நேரத்தில் கடமையை உணர்த்தியதற்கு நன்றி ஐயா தமிழ் காக்கும் தமிழ் மண்காக்கும் தமிழ் மறவர் படையுடன் இணைந்து தமிழ் மண்ணைக் காக்கப் போகிறேன்" எனக் கூறி தமிழின் விடியலிற்காய் உழைக்கும் அணியுடன் கைகோர்த்து நடக்கிறான் சூரியா.அவனது மனம் இருள் நீங்கி அவனது இலட்சியப் பயணத்திற்காய் வாழ்த்துகிறது. வானத்தில் ஆதவனைச் சூழ்ந்து கருமேகம் அகல ஆதவன் பூரண ஒளியுடன் பவனிவந்தான்

**ப.நிருத்திகா**

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –50



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள் –50

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

பெயர் : ..................................................

முகவரி : ..................................................

..................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –49



வே.அகமொழி,
இல.921,சிவிச்சென்ரர்
-வட்டக்கச்சி

### பரிசுக்குரிய வரிகள்

சின்னப்பூவே ஏன் இந்த ஏக்கம்
பாதிச்சுமை புத்தகப்பை – உங்களுக்கு
காலிரண்டும் துடிக்குதே – கயவனின்
கண்ணி வெடிகள் எப்போது வெடிக்கும் – என்று

### பாராட்டுக்குரிய வரிகள்

விரைந்து செல்லுங்கள்
உயர்ந்து நில்லுங்கள்
இடிந்து போன எம்
தாயகத்தைக் கட்டியெழுப்ப.

எஸ். இளங்கோவன்,
கிளிநொச்சி.

புலம் பெயர்வு செய்த கோலம்
புத்தகப்பையிலே வேறொருவர் நாட்டுச் சின்னம்
சுட்டெரிக்கும் வெயிலிலே வெந்தாலும்
கல்வி கற்று கட்டிக்காப்போம் ஈழமதை.

தயானந்தி - ஜோ,
சின்னப்பண்டிவிரிச்சான்.

அறிவு தந்த அறிவுக்கூடத்தை தேடியலைகிறோம்.
இளம் சிறார்கள் நாம் ஆக்கிரமிப்பாளரின்
இராணுவ முகாமாய் காட்சி தருகின்றது நீதியின்
பரிபாலகரே கல்விக்கு நீர் வழங்கும் நன்கொடையா இது

த. கோகுலன்,
புளியங்குளம்.

ஏற்றத்தாழ்வுகள் கல்வியில் இல்லை
இருப்பது எல்லாம் பொதுவாய் ஆனால்
எல்லோருக்கும் செருப்பும் தொப்பியும் சீரான
கல்வியும் சமவாய்ப்பும் கிடைக்கும்.

சு. மகாலட்சுமி,
புதுக்குடியிருப்பு.

மரத்தடியில் படித்த மழலைகளே
சற்று ஆறிப் போங்கள் - உறவுகளே
மாவிரரின் தியாகத்தால் - உங்களுக்கு
மாடியில் படிக்கும் நேரம் வரும்.

க. நவக்குமார்,
திருவையாறு.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை அருச்சுனா புகைப்படக் கலையகம் வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.

மனிதரின் பலவீனங்களைத் தெரிந்திருப்பதே, உலக அனுபவம் என்று அழைக்கப்படுகிறது. - சார்லஸ் டிக்கன்ஸ்

# ஈரானில் நடந்த அவலம்



ஈரான் பாம் நகரில் நடந்த பூமியதிர்ச்சியில் கொல்லப்பட்ட மக்களும், தாயை இழந்து கதறும் மகனையும், இடிபாடுகளுக்குள் அகப்பட்ட மக்களை மோப்ப நாய்களின் உதவியுடன் மீட்கும் பணியாளர்களும் இந்தக்கொடூரத்தால் அழியப்பட்ட பழமையான நகரத்தின் ஒரு வீதியையும் காணலாம்.












## தகவல் தொழில்நுட்பத் துறையில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற BTEC HND தகைமையை IIS நிறுவனம் வழங்குகிறது.

**கணனித்துறையில் பட்டப்படிப்பு**
நீங்கள் ஜீ.சீ.ஈ உயர்தரப்பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்தவரா? எனில் இச்சந்தர்ப்பத்தை சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ளுங்கள். *Edexcel* International நிறுவனத்தின் BTEC HND (Higher National Diploma) பயிற்சி நெறியில் இணைந்து கொண்டு சர்வதேச தரம் வாய்ந்த B.sc(Hons) பட்டப்படிப்பினைத் தொடரமுடியும்...

**சர்வதேச சான்றிதழ்கள்**
BTEC HND (Hiher National Diploma) என்பது கணனித்துறையில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உயர்தரப்பயிற்சி நெறியாகும். 18 மாதகாலப் பயிற்சியின் முடிவில் பிரிட்டனின் *Edexcel* இன் சர்வதேச அங்கீகாரம் பெற்ற உயர் டிப்ளோமா சான்றிதழ்களை நீங்கள் பெறுவீர்கள். *Edexcel* என்பது லண்டன் ஜீ.சீ.ஈ. சாதாரண மற்றும் உயர்தரப்பரீட்சைகளுக்கான உலகளாவிய ஆளுநர் சபையாகும்.

**வெளிநாட்டில் படிப்பைத்தொடரலாம்**
IIS நிறுவனத்தில் BTEC HND (Higher National Diploma) பயிற்சிநெறியை பூர்த்தி செய்தவர்கள் நேரடியாகவே பிரிட்டன், அவுஸ்ரேலியா, ஐக்கியஅமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களின் B.sc(Hons) இறுதியாண்டு மாணவராகச் சேர்ந்து பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம். இதன் மூலம் பொருளாதார ரீதியாக நீங்கள் பெரும் நன்மை அடையமுடியும்.

**தேசிய மற்றும் சர்வதேச புலமைப்பரிசில்கள்**
IIS நிறுவனத்தில் திறமைமிக்க மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும். அதிவிசேட திறமை காண்பிக்கும் மாணவர்களுக்கு பிரிட்டனிலுள்ள பல்கலைக்கழகங்களில் ''' ப்படிப்பை மேற்கொள்வதற்கும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன**
IIS நிறுவனம் தற்போது மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.
மேலதிக விபரங்களுக்கு 021-222 2831/021-222 6933 அல்லது இல.100 மணிக்கூட்டுக்கோபுர வீதியில் அமைந்துள்ள எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

கல்வியாண்டு 2004 க்குரிய பிரிவு I ஜனவரி மாதம் 23 ம்திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.
ஒரு பிரிவில் 20 மாணவர்கள் மட்டுமே அனுமதிப்படுவார்கள். ( வார/வாரஇறுதி நாட்களில் தனித்தனியே பிரிவுகள் ஆரம்பிக்கப்படும்)
உங்கள் பதிவுகளுக்கு ''ந்துங்கள்.

**INSTITUTE OF INFORMATICS STUDIES**
An *Edexcel* approved HND Centre
100, clock Tower Road, Jaffna. Call as @ 021-222 2831/021-222 6933 (சி-8861)




இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு சனவரி மாதம் 02 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.